

சக்தி

விரோதி - ஆடி

விலை 8 அணா

பொருள் அடக்கம்

மலர் 16 : இதழ் 4

○

ஆசிரியர் குறிப்பு	...	ஆசிரியர்	1
புதிய வரிகள்	...	'ஸ்வதந்திரா'	2
குட்டிக் கதைகள்	...	'பொதுஜனம்'	5
வயிர மேகன்	...	தி. நா. சுப்பிரமணியன்	10
சில பேசிற்று	...	ரகுநாதன்	13
பாரத வெண்பா	...	எஸ். வையாபுரிப் பிள்ளை	19
கணவனும் காதலும்	...	ஆந்திரே மொருவா	24
நாட்டுப் பாடல்கள்	...	அ. அண்ணாமலை	28
தாய்ப் பால்	...	டோரதி வி. விப்பிள்	29
மூவர் உலா	...	ல. சண்முகசுந்தரம்	32
படங்கள்	...	... ...	37—40
தாலாட்டு	...	மாக்ஸிம் கார்க்கி	41
குறட்டை விடாதே!	...	எஸ். பி. கெர்னாஹன்	58
தங்கம் செய்ய....	...	எம். ஜே. ஆராச்சி	60
வத்தல் செல்வம்	...	வை. கோ.	64
ஒட்டப் பந்தயம்	...	த. அழகிரிசாமி	66
புத்தக உலகம்	...	த. அ., தொ. மு. சி.	74

அட்டைப் படம்: கே. முத்துராமலிங்கம்

போட்டோ படங்கள்:

பி. ரங்கநாதன். ஏ. எஸ் ஆர். மூர்த்தி. கே. வி. ராமச்சந்திரன்.

○

விரோதி சக்தி ஆடி

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

o

நாங்கள் சப்ளை செய்வது :

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

o

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

சக்தி வெளியீடுகள்

இனி நாம் செய்ய வேண்டுவது யாது? — டால்ஸ்டாய்

உழைப்பவனுக்குத்தான் உணவு, உழுபவனுக்குத்தான் நிலப் சொந்தம் என்னும் அரிய சித்தாந்தம். ரூ. 3 0 0

அபேதவாதம் — ராஜாஜி

பொது உடமைத் தத்துவத்தை இந்திய முறையில் ராஜாஜி விளக்கி இருக்கிறார். ரூ. 1 0 0

அறிஞர் மார்க்ஸ் — ஆர். ராமனுதன்

உலகத்தை உய்விக்கத்தோன்றிய மகான் மார்க்ஸின் கொள்கையும் வரலாறும் ரூ. 1 8 0

ஏசுநாதர் போதனை — ஜே. ஸி. குமரப்பா

ஏசுபெருமான் இந்த உலகத்தில் அவதரித்ததின் தத்துவம் யாது? அவருடைய போதனையால் மக்கள் அடையக்கூடிய பயன்களையும் விளக்குகிறது இந்நூல். மகாத்மாவின் அருமையான முன்னுரையும் இருக்கிறது. ரூ. 1 8 0

ரத்தக் களரி — நேதாஜி

இந்திய தேசிய ராணுவத்தினருக்கு அவ்வப்பொழுது பேசிய பிரசங்கங்களின் தொகுப்பு. உக்ரமிக்க பேச்சுக்கள் சக்தி மோஹன் மொழி பெயர்த்தது. ரூ. 1 8 0

சூரிய நமஸ்காரம் — டி. வி. திருவேதி

சூரிய நமஸ்கார முறைகள், மந்திரங்கள், நியமங்கள் இவைகளால் ஏற்படும் நன்மைகள் அடங்கியிருக்கின்றன. ரூ. 1 0 0

பெண் மனம் — 'லக்ஷ்மி'

தமிழ் மக்களின் மனதைப் பெரிதும் கவர்ந்த நாவல் 2 4 0

சக்தி காரியாலயம் - சென்னை 14

லக்ஸ் டாய்லட் சோப்பின்
புதிய பரிமளத்தைப்பற்றி அழகி
பத்மினி சொல்வதைக்கேளுங்கள்!

சினிமா நட்சத்திரங்களின்
அழகு தரும் சோப்

LTS. 201-50 TM

பியூரிடி பார்லி எட்டு மடங்கு அதிக வேலை புரியும்

பியூரிடி பார்லியில், அரிசிபார்லியின் நற்குணம் பூராவும் சத்து மிகுந்த வகையில் அடங்கியுள்ளது. ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி, எட்டு ஸ்பூன் அரிசி பார்லிக்கு சமமானது. தவிர அது எப்பொழுது வாங்கினாலும் புத்தம் புதிய நிலையில் இருக்கும். ஏனெனில் அது சுகாதார முறைப்படி ஸீலிடப்பட்ட டின்களில் கிடைக்கின்றது. இருபதே நிமிஷங்களில் ருசிமிகுந்த கஞ்சி தயாரிக்கலாம். சீக்கிரமாக பார்லி வாட்டர் தயாரிப்பதற்கு. இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு பியூரிடி பார்லியை சிறிது ஜலத்துடன் மாவாக கரைத்து, இரு டம்ளர் ஜலத்துடன் ஐந்து நிமிஷம் கொதிக்கவைக்க வேண்டியதுதான். ருசிக்கு ஏற்றபடி உப்பு, சர்க்கரை அல்லது எலுமிச்சை ரஸம் சேர்த்துக்கொள்ளலாம்.

பியூரிடி பார்லி

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

APAX STM

தென்னிந்தியாவிற்கு ஏஜெண்டுகள்:

பாரி அண்ட் கோ., லிமிடெட், தபால் பெட்டி நம்பர் 12 சென்னை

மோட்டார்

இன்ஷ்யூரன்ஸ்



உங்கள் மோட்டார் வண்டிகளை இந்த பிரபலமான மோட்டார் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் இன்ஷ்யூர் செய்துகொள்ளுங்கள். குறைந்த பிரீமிய விகிதங்களுக்கும், உரிமைகளை உடனுக்குடன் வழங்குவதற்கும் பெயர்பெற்ற கம்பெனி

N.202

தி வான்கார்டு

பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

தலைமை ஆபீஸ்: மதராஸ். 1.

விரோதி
மலர் 16

சக்தி

ஆடி
இதழ் 4

மெய்ப் பொருள் காண்பது அறிவு

○

ஆசிரியர் குறிப்பு

உங்கள் கையிலிருக்கும் இந்த இதழுடன் சக்திக்குப் பத்தாண்டு நிரம்புகிறது. பத்திரிகையின் ஆயுளில் பத்து வருஷங்கள் என்பது பத்து சதுர் யுகங்கள் மாதிரி என்றாலும் மிகையாகாது. தமிழ் நாட்டில் 100-க்கு 15 பேர் மட்டுமே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். இவர்களில் காசு கொடுத்துப் பத்திரிகைகளை வாங்கிப் படிக்கும் கூட்டம் மிகக் கொஞ்சம். வெறும் பொழுது போக்காக அல்லாமல், விஷய ஞானத்தைப் பெறும் ஆவலுடன் பத்திரிகை படிப்பவர்களின் தொகையோ தமிழ்நாடு முழுவதிலுமே மிகமிகக்கொஞ்சம்தான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பயனுள்ள நல்ல விஷயங்களை மட்டுமே வெளியிட்டு பத்திரிகையைப் பத்தாண்டு காலமாகத் தொடர்ந்து நடத்தி வருவதிலுள்ள சிரமங்கள் கொஞ்சமல்ல. தமிழ்நாடு, இந்தியாவின் பெரும்பாலான பிற பகுதிகளைவிட கல்வி யறிவிலும் கலாசாரத்திலும் முற்போக்காக இருப்பது தான் நல்ல பத்திரிகைகள் சிலவேனும் இங்கு நடைபெறச் சாத்தியமாக இருக்கிறது.

கடந்த பத்து வருஷ சேவையில், நாங்கள் பெருமைப்படத் தக்கவாறு எத்தனையோ நல்ல விஷயங்களை வெளியிட்டு வாசகர்களின் அபிமானத்தைச் சம்பாதித்திருக்கிறோம். சக்திக்கென்று மட்டும் தமிழ்நாட்டில் பல வாசகர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். விஷய ஞானத்தையே, படிப்பதன் லட்சியமாகக் கொண்ட இப்படிப்பட்ட வாசகர்களின் ஆதரவு தான் எங்கள் சேவையைத் தொடர்ந்து நடத்தி வருவதற்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்துவருகின்றது.

11-ம் ஆண்டின் முதல் இதழ் என்ற முறையில் அடுத்த இதழை மிகவும் விசேஷமாக வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறோம். தவிரவும் அந்த இதழ் வெளிவரும் நாள் சுதந்திர தினமாகவும் அமைந்திருப்பது மேலும் மகிழ்ச்சிக்குரிய விஷயம். பிரபல அறிஞர்கள் எல்லோரும் எழுதுகிறார்கள் என்றும் விசேஷமான படங்கள் அழகிய முறையில் வெளிவருகின்றன என்றும் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சென்னை சர்க்கார் வரி விதிப்பினுடைய சமீபத்திய திடீர்ப் பிறவி, பத்திரிகை விளம்பரங்களுக்கு வரிப்போட யோசித்திருப்பது. இதைப்பற்றி விவரிக்கும் இக் கட்டுரை ஸ்வதந்திரா தலையங்கத்தின் தமிழாக்கம்.

புதிய வரிகள்

‘ஸ்வதந்திரா’

புதிய வரிகளுக்கு வக்காலத்து வாங்கி, சமீபத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய இரண்டு சென்னை மந்திரிகள் நமக்களித்த கருத்தை நாம் பாராட்ட முடியவில்லை. ஸ்ரீ மாதவ மேனன் புதிய வரிகளுக்கு எதிர்ப்பு மக்களிட மிருந்தோ, ஏழைகளிட மிருந்தோ வரவில்லை யென்றும், ஆனால் பணக்காரர்களிட மிருந்தும், ஏழைகளைச் சுரண்டிவிட வாழுபவரிடமிருந்துமே வருகிறது என்றும் வாதித்தார். கொஞ்சம் கழித்து அவர் தம் வாதத்தையே மறந்து விட்டு, கம்யூனிஸ்டும், திராவிடக் கழகத்தாரும், வகுப்புவாதியும், நாஸ்திக ஆஸ்திகவாதிகளும் இதில் ஒன்று கூடிக் கைகோத்துக் கொண்டார்கள்; ஏனெனில் சர்க்கார் அவர்கள் ஒவ்வொருவரையும் ஏதாவதொரு முறையில் பாதிக்கும்படியாக நடந்துகொண்டது என்றும் சொல்லிவிட்டார். சமூகம் என்பதை பரிபூரணமாய் வரையறுப்பது இயலாது. பரிபூரண வரையறுப்பும் எதையேனும் விட்டுவிடக்கூடும். சமூகத்தினர் அனைவரும் புதிய வரிகளை எதிர்ப்பதில் ஒன்றுகூடிக் கொண்டார்கள் என்றால், பிறகு வரிகளுக்கு எதிர்ப்பு பணக்கார வகுப்பாரிடமிருந்து மட்டுமே வருகிறது என்று சொல்வதில் அர்த்தமில்லை. நாஸ்திகவாதியும் ஆஸ்திகவாதியும், ஏழை பாழை ஜனங்களை ஒதுக்கித் தள்ளி பணக்காரர்களோடு கைகோக்க வில்லை. அவர்கள் ஜனசமுதாயம் முழுவதையுமே ஒன்று திரட்டுகிறார்கள். அதில் ஏழையும் பணக்காரனும் உண்டு. எந்தப் பொருளாதார வர்க்கத்தையும் ஒதுக்கவில்லை. எனவே வரி எதிர்ப்பில் வர்க்கபேதம் கற்பிக்க முனைந்த மந்திரியாரின் வாதம் முனைமழுங்கி, உதவாக்கரையாகி விட்டது. அதற்குப் பதிலாக, அறிவாராய்ச்சி என்று சொல்லிய அவரது முரண்பாட்டினால், அவர் தம்மை விமர்சனம் செய்வாரைப்பற்றிச் சொல்வதுபோலவே அவரும் ஏழைகளோடு உரிமைகொண்டாடி அவர்கள் பெயரைத் தமக்கு உபயோகப்படுத்த முனைகிறார். “சகல விதமான விளம்பரங்கள் மூலமாகவும் திசைமாறிச் செல்லும் வாசகர் குழாத்தின் முட்டாள்தனத்தி லிருந்தும், ஏமாளித்தனத்திலிருந்தும் பத்திரிகைகள் திரட்டிய பணம்தான் விளம்பர வருமானம்” என்று கூறும் ஸ்ரீ மாதவ மேனன் மிகவும் முரண்பாடான ஒரு சர்ச்சைக்குள் நுழைகிறார். அந்த வருமானத்திலிருந்து தனக்கும் ஒரு ஆதாயப் பங்கு எதிர் பார்க்கும் சர்க்காருக்கும், விளம்பர வருமானத்தைப் பற்றிப் பிரமாதமான யோக்கிய தாம்ச ஒழுக்கத்தைக் கற்பிக்கும் குரலுக்கும் கொஞ்சம்கூடப் பொருந்தாது. தாம் குற்றம் சாட்டும் ஒரு பொருளாதாரச் சுரண்டலில் தாமும் பங்குதாராக வேண்டுமென்பதற்காக, வாசகர்களின் மீது முட்டாள்தனத்தையும் ஏமாளித்தனத்தையும் சுமத்துவது

அர்த்தமற்ற பேச்சு. வாசகர்களின் ஏமாளித்தனத்தை, முட்டாள்தனத்தைப் பற்றிய மந்திரியாரின் கருத்தை அனுமதிக்க வேண்டுமென்றால், தாமும் ஒரு அம்சம் வகிக்கும் சர்க்காரே கிரியாம்சையில் ஒழுக்கசீலமாக வேண்டும். இல்லையெனில், சர்க்காரின் பிரமாண்டமான பிரசாரக்கருவியும், பத்திரிகை வாசகர்களுக்கு அவர்கள் விடும் அறிக்கைகளும் ஜனங்களின் முட்டாள்தனத்தையும் ஏமாளித்தனத்தையும் சுரண்டும் ஒரு மகத்தான சாதனையாகத்தான் படும்.

பத்திரிகைகளுக்குக் கரி பூசி, மக்களையும் லாப ஆசை கொள்ளும்படி ஸ்ரீ மாதவமேனன் கூறுகிறார்: "பத்திரிகைகளைத் தானமாக வழங்கும் அளவுக்கு விளம்பர வருமானம்வந்த காலத்திலும் (அப்படிப்பட்ட பத்திரிகைளும் சென்னையில் இருந்தன.) அந்தப் பத்திரிகைகள் விலையைக் குறைத்து, அல்லது தானமாக வழங்கி அறிவைப் பரப்ப முனைந்தனவா? யுத்த காலத்தில் பத்திரிகைகள் வண்டி வண்டியாய்ச் சம்பாதிக்கவில்லையா? அதன் பிறகு, ஏழை மனிதனைப் பற்றி அவர்களுக்கு என்ன கரிசனையாம்!" என்று கேட்கிறார். இம்மாதிரியான காரசாரமான குற்றச் சாட்டுகளுக்குத் தக்க சாட்சியம் வேண்டியதுதான். ஏழை மனிதன் இது விஷயத்தில் தெளிவு பெற பிறர் உதவியை நாட வேண்டியதுதான். ஆனால், இது விஷயத்தில் மக்கள் மந்திரிகளையும் மறந்து விடமாட்டார்கள். பணம் திரட்டுவதில் போதுமென்ற மனசையும், வாழ்க்கை வாழ்வதில் ஏழை மனிதனின் வாழ்க்கைத் தரத்தையும் எத்தனை மந்திரிகள் கடைப்பிடிக்கிறார்கள்? தங்கள் சொந்தப் பணத்தைச் செலவழிக்கக் கூசும் மந்திரிகள் மக்கள் பணத்தைத் தாராளமாய் செலவழிக்கின்றனர். மந்திரிகளின் அலங்கார ஆடம்பரம் விமான யாத்திரை, வெட்டிப் பிரயாணம், படாடோபத்தின் காரணமாக எழுந்த பார்ட்டிகள், பொது வாழ்வுச் சொகுசுகள் முதலியவற்றால் அளவு மீறிவிட்டது. சில மந்திரிகள் தங்களது அபிமானிகள் பந்துமித்திரர்கள் முதலியவர்களுக்குச் சகாயம் செய்வதற்காக தங்கள் அதிகாரத்தையும் பொதுச் சாதனங்களையும் பயன்படுத்தத் தயங்குவதில்லை. பொது ஜன சேவையில் பத்திரிகைகளுக்குள் வேறுபாடு இருக்கத்தான் செய்கின்றன. என்றாலும் மந்திரிகள் செய்வதுபோல, இன்றும் செய்வதுபோல ஏழையின் தலையில் கை வைப்பதில்லை.

புதிய வரிகளைத் தாங்கிப் பேசும் இன்னொரு மந்திரியான ஸ்ரீ பக்த வத்சலம் "ஜனங்களின் மாபெரும் ஆசாபூர்த்தியில் அரசாங்கம் எவ்வளவு சாதிக்கிறது" என்ற விஷயத்தில் அருமையான கதை விடுத்திருக்கிறார். சர்க்காரில் அவர்கள் இருப்பது தங்கள் அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு அல்லவென்றும், மக்களின் சங்கட நிலையைத் தவிர்ப்பதற்குத்தான் என்றும் சொல்லியிருக்கிறார். பிரத்தியட்சப் பிரமாணமான இன்றைய நிலையைப் பற்றிய மந்திரியின் வாசகத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு 'பத்திரிகை படிக்கும், முட்டாள்தனமான, ஏமாளித்தனமான' வாசகர்களும், முட்டாள் தனமாய், ஏமாளித்தனமாயிருப்பார்கள் என்று எதிர்பார்க்க இயலாது. ஏனெனில் சென்ற ஈராண்டுக் காங்கிரஸ் ஆட்சியில், சுதந்திர வீரர்கள், சேறு நிறைந்த கால்களையும், அகண்டாகாரமான காந்தீய மோஸ்தர்க் காங்கிரஸ் லட்சியமானது பச்சை வியாபார வகுப்புவாதமாகச் சுருங்கிச் சுண்டைக் காயாகப் போனதையும் தான் காட்டியுள்ளார்கள். பிரிந்து போன பிரிட்டிஷ் ஆட்சியே இன்றைய ஆட்சி முறையை விடச் சிறந்தது என்று மக்கள் மனப்பான்மை பெறும் அளவுக்கு காங்கிரஸ் மந்திரிகள் இன்று நடந்துகொண்டது தேசத்துக்கே ஒரு கேடாகும்.

மக்களின் தரத்தை உயர்த்துவது என்பது பெரும் மூலதன முதலீட்டிலும் அதிகவரி விதிப்பதிலும் இல்லை. பணம் மட்டும் போட்டால் போதாது; திறமையும் மனிதத்தன்மை பரிவர்த்தனையும் தான் இதற்குச் சரியானபடி முதலீடாக வேண்டும். நாட்டைப் பிற்போக்குத் தன்மையிலிருந்து செல்வத்துக்கும் செழிப்புக்கும் மேலேற்ற வேண்டுமானால், அதற்கேற்ற திறமையைப் பிரயோகித்தாக வேண்டும்.

பெயர் பெறாத கொள்கைகளை மானங்காணியாய் பிரயோகிப்பதன் மூலம் காங்கிரஸ் மந்திரிகள் மனிதத் திறமைச் சக்திகளின் சாதனங்களைத் தூளாக்குகிறார்கள் என்றே சொல்லலாம். இந்தக் கொள்கைகள் நிலைக்கலாம்; என்றாலும்; வரி விதிப்பினாலும் பெரியதன முதலீட்டினாலும் மக்களின் தரம் எந்த விதத்திலும் உயர முடியாது.

விளம்பர வருமான வரி விதிப்பு பணக்காரப் பத்திரிகைகளை மட்டுமே பாதிக்கும் என்று மந்திரிமார் சொல்வது, பத்திரிகை நிலைமைகளைப் பற்றிய அவர்களது ஞானசூன்யத்தையே காட்டுகிறது. ஹிந்துவைப் போன்ற ஒரு பத்திரிகைதான் தனது விளம்பர விகிதங்களை விளம்பரதாரருக்குக் கராராகத் துணிந்து சொல்லலாம். அது வரிச் சுமையை விளம்பரதாரரின்மீதே ஏற்றி விட முடியும். இதனால் வளர்ந்து வரும் பத்திரிகைகளிலோ விளம்பரங்கள் குறைவதோடு, விளம்பரதாரர்களுக்கு பத்திரிகை தேவைப்படுவது போய் பத்திரிகைகளுக்கு விளம்பரதாரர்கள் தேவைப்பட வேண்டியது தான். எனவே இம்மாதிரியான பத்திரிகைகள் விளம்பர வருமானத்தில் ஒரு பகுதியை வரியாகக் கொடுக்காவிட்டாலும் கூட, இந்த வரிவிதிப்பினால் பெரிதும் பாதிக்கப்படும். உயிர் வாழ்க்கைக்கு வேண்டுவன ஒவ்வொன்றும் இந்த ஏழை நாட்டில் அநியாயத்துக்கு அதிக விலையாயிருக்கிறது. லண்டனின் வாழ்க்கைத் தரத்தை விட, சென்னையின் வாழ்க்கைத் தரம் நாலைந்து மடங்கு அதிகமானது என்று அங்கும் இங்கும் இருந்து வந்தவர்கள் கூறுகிறார்கள். ஆனால் வருமான விகிதம் மட்டும் இரு நாட்டைப் பொறுத்தவரையிலும் தலை மாறிக் கிடக்கிறது. பிரிட்டன், அமெரிக்கா முதலிய பணக்கார நாடுகளில் இருப்பதைவிட, அச்சுக் காகிதத்தின் விலை இங்கு மிகவும் அதிகமாயிருக்கிறது. பதிப்பிடுவது ஒன்றே சதமாக நம்பி வாழும் இந்திய சுதந்திரப் பத்திரிகைகள் பலவும் நின்று போவதற்கு. உற்பத்திச் செலவின் உயர்வும், குறைந்த வருமானமும், முக்கியமாக விளம்பர வருமானக் குறைவும் தான் காரணம். எனவே பத்திரிகை விஷயங்களில் எந்த விதத் தடை கொண்டு வந்தாலும், அதனால் பத்திரிகைகளின் மரணத்தொகைஅதிகமாகும்; அதன் பொருளாதார நிலை சீர் குலையும்; அதன் காரணமாக, பத்திரிகையின் சக்தியும் சுதந்திரமும் வளர்ச்சியும் வளமும் குன்றும். ஹிந்து போன்றபணக்காரப்பெரும்பத்திரிகைகளும் விளம்பர வரியை தெரியாத் தனமாக, சர்க்கார் ஆட்கள் சொல்வது போல், பிறருக்குத் தீங்கு விளைவிப்பதற்காக எதிர்த்துப் போராடவில்லை. வரி விதிப்பைப் பிறர்மீது தட்டிவிட்டு, தப்பித்துக் கொள்ளவும் அவற்றால் முடியும். இந்த வரி விதிப்பை அவை நிர்த்தாட்சணியமாய் விடாப் பிடியாய் எதிர்ப்பதானது சிறு பத்திரிகைகளிடமும், சந்தர்ப்ப சௌகரியங்களற்ற பத்திரிகைகளிடமும் அவை கொண்டுள்ள சுயநலமற்ற ஒற்றுமையுணர்ச்சியைத்தான் காட்டுகிறது; அவர்களது சக்தி வாய்ந்த சமய சந்தர்ப்பமான தலையீட்டுக்கு சிறு பத்திரிகைகள் அனைத்துமே நன்றி செலுத்தாமல் இருக்க முடியாது.

✻

கோமுட்டி கதைகள் நெடுங்காலமாகத் தமிழ் நாட்டில் வழங்கி வருகின்றன. அவற்றில் ருசிகரமான சில கதைகள் இங்கே உள்ளன.

கோமுட்டிகள் சென்னை மாகாணம், ஹைதராபாத், மைசூர் முதலிய இடங்களில் வசிக்கிறார்கள்; வியாபாரத்தில் கை தேர்ந்தவர்கள். இவர்கள் 11-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குண்டூர் ஜில்லாப் பிரதேசத்திலிருந்து புறப்பட்டு வந்தவர்கள் என்று கூறப்படுகிறது. கோமுட்டிகள் வியாபாரத் திறமைமட்டுமேல்லாமல், சொல்சாதுரியமும் சூக்ஷ்மமான புத்திசாலித்தனமும் உடையவர்கள் என்பதற்கு இக் கதைகளே தக்க சான்று.

(கோமு)ட்டிக் கதைகள்

○

'போதுஜனம்'

கடவுளும் கோமுட்டியும்

கோமுட்டி ஒருவன் கடவுளை நோக்கிப் பல காலமாக வேண்டிக் கொண்டான், "ஆண்டவனே! குருடனாக இருக்கும் எனக்குக் கண் பார்வை அளிக்கமாட்டாயா?" என்று. வெகு காலத்துக்குப் பிறகு கடவுள் அவனுடை பிரார்த்தனைக்கு செவி சாய்த்து, அவன் முன்பாகப் பிரத்தியக்ஷமாகிவிட்டார். வந்து, "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார் கடவுள். கடவுளே பிரத்தியக்ஷமாகி இப்படிக் கேட்கும் போது கோமுட்டி இலேசில் விடுவானா? பின் கண்ட வரத்தைக் கேட்டான்:

"ஆண்டவனே! நான் ஏழாவது மாடியிலிருந்து, கீழே தெருவில் விளையாடும் என் கொள்ளுப் பேரன்கள் தங்கக் கிண்ணத்திலிருந்து பலகாரம் எடுத்துச் சாப்பிடுவதை என் கண்களால் பார்க்கும்படி அருள் செய்ய வேண்டும்."

ஒரே வரத்தின் மூலம், பொருட் செல்வம், புத்திர பாக்கியம், நீண்ட ஆயுள், கண் பார்வை மூன்றையும் பெற்றுவிட்டான் கோமுட்டி.

கோமுட்டியின் குட்டு

ஒரு பணக்காரக் கோமுட்டியின் வீட்டில் திருடர்கள் புகுந்து கைக்கு அகப்பட்டதை எல்லாம் திருடிக் கொண்டு போய்விட்டார்கள். விடிந்ததும், களவுபற்றி விசாரணை செய்வதற்காகப் போலீஸ் அதிகாரிகள் வந்தார்கள்.

"உம் வீட்டுக்குத் திருடர்கள் வந்தார்களாமே?" என்று கேட்டார்கள் போலீஸ் அதிகாரிகள்.

"ஆம்" என்றான் கோமுட்டி.

"உம் வீட்டில் என்னென்ன சாமான்கள் களவு போய்விட்டன?"

"களவு போகவா? ஏதாவது இருந்தால் அல்லவா களவு போகும்?"

"அதென்ன அப்படிச் சொல்கிறீர்? ஏராளமான சாமான்கள் களவு போய்விட்டதாக ஊரெல்லாம் பேசிக் கொள்ளுகிறார்களே!"

"அதற்கு அந்தத் திருடர்கள் பணக்காரனுடைய வீட்டுக்குப் போயிருக்க வேண்டும். என் வீட்டுக்கு வந்தால் என்ன கிடைக்கும்?"

போலீஸார் ஒன்றும் தோன்றாமல் போய்விட்டனர்.*

சுவர்க்கத்துக்குச் சுருக்கு வழி

கோமுட்டி ஒருவன் செத்துப்போய் விட்டான். அவனை எமனுடைய தர்பாரில் கொண்டுபோய் நிறுத்தினார்கள். "கோமுட்டி பூலோகத்தில் செய்த நன்மைகள் எவை? தீமைகள் எவை?" என்று சித்திர குப்தனைப் பார்த்து விசாரித்தான் எமன்.

சித்திரகுப்தன் சொன்னான் :

"இந்தக் கோமுட்டி தானாக ஒரு நன்மையும் செய்யாவிட்டாலும், வழிப்போக்கர்களுக்கெல்லாம், தாராள குணம் படைத்த பிரபுக்களின் வீடுகளைக் காண்பித்துவந்தான். இதனால், அந்தப் பிரபுக்களின் வீடுகளுக்குப் போய், எல்லோரும் பணம் வாங்கிக்கொண்டு போகவும், சாப்பிட்டுப் போகவும் ஏதுவாக இருந்தது. இதைத் தவிர வேறு நன்மை எதுவும் இந்தக் கோமுட்டி செய்ததில்லை."

"அப்படியானால் இவன் எந்தக் கையால் வழிப்போக்கர்களுக்கு, தர்மப் பிரபுக்களின் வீடுகளைக் காண்பித்தானோ அந்தக் கையை சுவர்க்கத்துக்கு அனுப்பிவிடுங்கள். இவனுடைய சரீரத்தில் மீதிப் பாகத்தை நரகத்துக்கு அனுப்புங்கள்" என்று தீர்ப்புச் சொன்னான் எமன்.

பிறகு சித்திரகுப்தன், "ஒரு தவறு நேர்ந்துவிட்டதே!" என்றான்.

"என்ன தவறு?" என்று எமன் கேட்டான்.

"இந்தக் கோமுட்டியின் ஆயுட்காலம் இன்னும் முடியவில்லை. அதற்குள்ளாக இவனைக்கொண்டுவந்துவிட்டோம்" என்று கணக்கைப் பார்த்துச் சொன்னான் சித்திரகுப்தன்.

"அப்படியானால் இவனைப் பூலோகத்துக்கு அனுப்பிவிடுங்கள்."

பூலோகத்துக்கு வந்த கோமுட்டி யோசனை செய்தான்.

'நம் கையினால் நன்மை செய்யப் போய் கைக்கு சுவர்க்கத்தைக் கொடுக்கத் தயாராக இருந்தார்கள். நம் உடம்பையெல்லாம் கொண்டு நன்மை செய்தால் நாம் முழு மனிதனாக சுவர்க்கத்துக்குப் போகலாமே!'

இவ்வாறு யோசித்த கோமுட்டி பிறகு என்ன செய்தான் தெரியுமா?

வழிப்போக்கர்களுக்குத் தன் ஒரு கையினால் மட்டும் அல்லாமல் கைகளையும், கால்களையும், உடம்பு முழுவதையுமே அசைத்து தர்மப் பிரபுக்களின் வீடுகளைக் காட்டத் தொடங்கினான்!

முட்டாள் அரசன்

ஒரு காலத்தில் ஒரு கோமுட்டி ஒரு வீடு கட்டினான். மண்ணினால் கட்டப்பட்ட பெரிய வீடு அது. மண் சுவரானதால், அதன் மேல் காரை எல்லாம் உதிர்ந்து போயிருந்தது. அதனால் அதைப் பழுது பார்க்க ஏற்பாடு செய்தான். ஒரு வழியாகப் பழுது பார்க்கப்பட்டது. சுவரெல்லாம் ஈரம் உலராமல் 'சொத சொத' என்று இருந்தது. அந்த ஈரச் சுவரில் கன்னம்போட்டு ஒரு திருடன் உள்ளே வர முயன்றான். கன்ன வாசல் வழியாக அவன் தலையை உள்ளே நீட்டியதுதான்,

---

* பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னர் இந்தியாவில் ஒரே குழப்பமான நிலை. அப்போது பணக்காரர்களின் வீடுகளைக் கொள்ளை யடிப்பதுண்டு. இதனால் பணக்காரர்கள், தங்களிடம் பண மில்லாததுபோல் நடித்து வந்தார்களாம். ஆகவே கோமுட்டிகளும் தம் செல்வ நிலையை ரகசியமாக வைத்திருந்தார்களாம். அந்தப் பழைய நிலவரத்தைக் கதை பிரதிபலிக்கிறது.

சுவர் சரிந்து விழுந்து அவன் உடம்பைக் கீழே தள்ளி அமுக்கிவிட்டது. திருடன் செத்துப் போய்விட்டான். இதை அறிந்த அந்த ஊர் அரசன், திருடனுடைய மரணத்துக்குக் கோமுட்டி தான் பொறுப்பாளி என்று குற்றம் சாட்டினன். கோமுட்டியோ, மரணம் சந்தர்ப்பவசமாக, திருடனுடைய தப்பிதத்தினல்தான் நேர்ந்ததென்றும், தான் சுவர்களைப் பழுது பார்த்தது குற்றமாகாது என்றும் வாதித்தான். கோமுட்டியின் வாதம் அரசன் காதில் ஏற வில்லை. அதனல், கோமுட்டியைக் கழுவி லேற்றும்படி உத்தரவிட்டுவிட்டான்.

கோமுட்டிக்கு ஒரே திகைப்பாகி விட்டது. அரசன் விதித்த மரண தண்டனையிலிருந்து தப்புவதற்கு என்ன வழி என்று யோசித்தான். கடைசியில் இரண்டு ஆட்களை அந்தரங்கமாக அழைத்து, ஒவ்வொருவருக்கும் ஏராளமான பணம் கொடுத்துத் தன் உபாயத்தையும் தெரிவித்தான். கோமுட்டி சொன்னபடியே இருவரும் நடந்து கொள்வதாக வாக்களித்தனர்.

மறுநாள் காலையில் ராஜ சபைக்கு அந்த இருவரும் வந்தனர். ஒவ்வொருவனும் அரசனைப் பார்த்து, "மகாராஜா! இன்றைய தினத்தில் கழுவில் உயிர் துறந்தவர்கள் மறு ஜன்மத்தில் அரசனுகப் பிறப்பார்கள். அதனல் என்னைக் கழுவிலேற்றுங்கள்" என்று கெஞ்சினன்.

அரசனுக்குப் படு கோபம் வந்துவிட்டது.

"அடே! எனக்குப் பிறகு என் ராஜ்யத்தை அபகரித்துக் கொள்ளவா பார்க்கிறீர்கள்? இந்த ராஜ்யம் யாருடைய அப்பன் வீட்டுச் சொத்து என்று நினைத்தீர்கள்?" என்று சீறிவிட்டு, அன்றையத் தினம் யாரையும் கழுவிலேற்றிக் கொல்ல வேண்டாம் என்று உத்தரவிட்டான்

மறு ஜன்மத்திலும் அரசனுகப் பிறக்க வேண்டும் என்ற ஆசையினல், அரசன் தானே கழுவிலேறி உயிரை விட்டான்.

மாப்பிள்ளையின் சமர்த்து

புதிதாக கல்யாணம் செய்துகொண்ட ஒரு கோமுட்டி தன் அத்தையின் வீட்டுக்கு மாப்பிள்ளை - விருந்து சாப்பிடப் போயிருந்தான். போனதற்கு மறுநாள் காலையில், அத்தை மருமகனைப் பார்த்து,

"நீங்கள் எங்களோடு நேற்று ராத்திரி சமைத்த பழைய சாதம் சாப்பிடுகிறீர்களா? அல்லது பலகாரம் சாப்பிடுகிறீர்களா? இல்லை என்றுல், சுடு சாதம் சாப்பிடுவதற்காக மத்தியானம் வரையிலும் காத்திருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

மருமகன் சொன்ன பதில்:

"பழைய சாதம் சாப்பிட்டுவிட்டு, சுடு சாதம் தயாராகும் வரையில் பலகாரங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேனே!"

விடிய விடிய

கோமுட்டி ஒருவன் தன் மனைவியுடன் வெளியூருக்குப் போய்விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தான். பாதி வழியிலேயே இருட்டி விட்டது. அவர்களிடம் ஏராளமான விலை உயர்ந்த ஆபரணங்கள் இருந்தமையால் மேற்கொண்டும் இரவில் வழி நடப்பது தப்பு என்று பக்கத்தில் உள்ள ஒரு கிராமத்துக்குப் போனர்கள். அந்த ஊரில் கிராமப் பெரியதனக்காரன் ஒருவனுடைய வீட்டில் தங்கினர்கள் இரவில் தூங்கிவிட்டால், நகை நட்டுகளை எல்லாம் யாரும் திருடிக்கொண்டு போய் விடுவார்களோ என்று பயந்த கோமுட்டி ஒரு யோசனை செய்தான். அவர்கள் தங்கியிருந்த வீட்டுக்கு எதிர் வீட்டுக்காரனும் ஒரு கோமுட்டி. அவனேடு ஏதோ பேச்சுக் கொடுத்

தான். இருவரும் பேசிக்கொண்டே இருந்தார்கள். சிறிதுநேரம் சென்றதும் இருவருக்கும் சண்டை வந்து விட்டது. ஒருவனை ஒருவன் வாய்க்கு வந்தபடி யெல்லாம் திட்டிக்கொண்டிருந்தான். ஊாரெல்லாம் என்னென்னவோ சமாதானம் செய்து சண்டையை நிறுத்தப் பார்த்தார்கள். கோமுட்டியோ விடாமல் சண்டை போட்டுக் கொண்டே இருந்தான். இப்படியே இரவு முழுவதும் பல மான வாய்ச்சண்டை நடந்தது. ஊராரும் கண்விழித்துப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள்.

விடிந்தது. கோமுட்டி தன் பொட்டணத்தைச் சுருட்டிக்கொண்டு, மனைவியுடன் சொந்த ஊருக்குப் புறப்பட்டுப் போய்விட்டான். தன் நகைகள் களவு போகாமல் இருப்பதற்காக, ஊர்க்காரர்களை எல்லாம் இரவு முழுவதும் காவல் காக்கும்படி செய்த கோமுட்டியின் தந்திரத்தைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

கோமுட்டி சாட்சியம்

ஒரு பரம்பரை ஆண்டிக்கும் பஞ்சத்துக் காண்டிக்கும் சண்டை வந்து விட்டது. கைகலந்து சண்டை போடத் தொடங்கி விட்டார்கள். இதைப் பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான் ஒரு கோமுட்டி. சண்டைபோட்ட இரண்டு ஆண்டிகளும் உள்ளூர் நியாயாதிபதியிடம் புகார் செய்தார்கள். கோமுட்டியை சாட்சியாகக்கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

நீதிபதி, கோமுட்டியைப் பார்த்து, "முதலில் எந்த ஆண்டி அடிக்கத் தொடங்கினான்?" என்று கேட்டார்.

எந்த ஆண்டிக்கும் பாதகமாக சாட்சி சொல்ல விரும்பாத கோமுட்டி பின் வருமாறு கூறினான்:

"இரண்டுபேரும் திட்டிக்கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென்று பலமான காற்றடித்ததனால், தெருவெல்லாம் புழுதிப் படலமாகிவிட்டது. உடனே என் கண்களை மூடிக் கொண்டேன். அப்போது ஒருவரை ஒருவர் அடிக்கும் சப்தம் கேட்கத் தொடங்கியது. ஆகவே, அடிகளை காதால் கேட்டேனே ஒழிய கண்ணால் பார்க்கவில்லை. யார் முதலில் அடித்தார்கள் என்பது எனக்கு எப்படித் தெரியும்?"

இரண்டு ஆண்டிகளையும் ஒரு எச்சரிக்கை செய்ததுடன் விடுதலை செய்துவிட்டார் நீதிபதி.

கோமுட்டியும் கோதானமும்

ஒரு கோமுட்டியின் மனைவிக்குத் தன் கணவன் மீது வெகு நாட்களாகக் கோபம். 'இவ்வளவு காலமும் ஒரு தானதருமமும் செய்யாமல் தன் கணவன் கருமியாக இருக்கிறானே!' என்று அடிக்கடி சலித்துக்கொண்டாள். தன் கணவனிடமும் பலமுறை வாதாடினாள். கடைசியில், ஒரு நாள் கோமுட்டி தன் மனைவியின் பேச்சுக்கு ஒருவாறு செவி சாய்த்தான். அவளிடம் வந்து, "நம் பசுவை யாராவது ஒரு புண்ணியாத்மாவுக்குத் தானம் செய்துவிடலாம் என்று தீர்மானித்திருக்கிறேன்" என்றான். மனைவிக்கு மிகவும் சந்தோஷம் உண்டாகி விட்டது.

அந்தப் பசுவுக்கு மிகவும் வயதாகி விட்டது. காலெடுத்து வைத்து நடப்பதே சிரமம். இப்பொழுதோ, பிறகோ என்ற கட்டத்துக்கு வந்து விட்டது. அந்தக் காலத்தில் பசு இறந்தால், பசுவின் சொந்தக்காரன் அரசாங்கத்துக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை வரியைப்போல செலுத்த வேண்டும். இந்த வீண்செலவைத் தவிர்ப்பதற்காகவே கோமுட்டி, பசுவைத் தானம் செய்துவிடத் தீர்மானித்தான்.

அன்றைய தினம் வாசலில் ஒரு ஏழைப் பிராமணன் செம்பும் கையு மாக வந்து பிச்சை கேட்டான். கோமுட்டி அவனைப் பார்த்து,

"சுவாமிகளே! நீங்கள் நல்ல நேரத்தில் புறப்பட்டு வந்திருக்கிறீர்கள்! என்னுடைய பசுவை ஒரு பிராமணோத்தமருக்குத் தானம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன், காலையிலிருந்து வாசலில் உட்கார்ந்து கொண்டே எந்த மகான் வருகிறாரோ என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன். தாங்களும் வந்து விட்டீர்கள். தன்யனானேன்" என்றான்.

வயிற்று பிச்சைக்கு வந்த பிராமணனுக்கு பசு கிடைக்கப்போகிறது என்றால் கேட்கவேண்டுமா? கிழட்டுப் பசுவானாலும் இனமாகக் கிடைக்கிறது என்ற சந்தோஷத்தினால் தானத்தை ஏற்றுக்கொள்ள சித்தமாக இருந்தான். பாராங் கல்லைத் தள்ளுவதுபோல அந்தக் கிழட்டுப் பசுவையும் வெளியே தள்ளினார்கள். இப்படியே தள்ளிக் கொண்டு போய்விட்டான் பிராமணன்.

பாதி வழியில் பசு செத்துப்போய் விட்டது. உடனே அரசாங்கத்தார் தகவல் அறிந்து அதற்குரிய கட்டணத்தைக் கேட்டார்கள். பிராமணன், "என்ன விபரீதமாக இருக்கிறது? இது தானம் வாங்கிய பசு. இதனால் நான் ஒரு தம்பிடிகூட இன்னும் சம்பாதிக்கவில்லை. அப்படி இருக்க என்னை வரி கேட்கிறீர்களே! தானம் கொடுத்த கோமுட்டியிடம் போய்க் கேளுங்கள்" என்றான்.

எல்லோரும் கோமுட்டியிடம் வந்தார்கள்.

கோமுட்டி சொன்னான்: "தானம் செய்தபிறகு பசு பிராமணனுக்குச் சொந்தமாகி விட்டது. அவனுடைய பசு செத்தால் நான் வரி கொடுக்க முடியுமா?"

பிராமணன்: என் கையில் பணம் ஏது? நான் வரி கொடுப்பது எப்படி?

கோமுட்டி: பணம் இல்லை என்றால் நீ வைத்திருக்கும் செம்பைக் கொடுத்து விடேன். அரசாங்கத்தார் வேண்டாம் என்றா சொன்னார்கள்?

கடைசியில் பிராமணன் பசுவையும் இழந்ததல்லாமல், செம்பையும் இழந்து விட்டான்.

*

ஜாக்கிரதை!

மகள்: அந்த சிப்பாய் தான் எனக்குப் பிடித்த மணவாளன். அவன் என்னைக் கட்டித் தழுவும் போதெல்லாம் அவனுடைய இருதயம், 'படபட' என்று அடித்துக் கொள்வது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. காதலின் மிகுதியைக் காட்ட இது ஒன்றே போதாதா?

தாயார்: அப்படி யென்று ஏமாந்து விடாதடி! உங்கள் அப்பா ஒரு பாக்கெட் கடிகாரத்தை வைத்துக் கொண்டு என்னை இப்படித்தான் ஏமாற்றி விட்டார்!

சாராயக்கடை நடைமுறை

ஒரு சாராயக் கடைக்குப் போனான் ஒருவன். போனதும் கீழே தரையைப் பார்த்து விட்டு, "ஏனப்பா, இப்படி யெல்லாம் மரத்தூளைத் தரை யெல்லாம் தூவி வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான். கடை வேலைக் காரன் சொன்ன பதில்:

"அது மரத்தூள் அல்ல; நேற்று ராத்திரி இங்கே கிடந்த நாற்காலி மேஜைகள்."

—ஜோயி ஆடம்ஸ்

பல்லவ அரசன் ஒருவனுடைய சரித்திர ஆராய்ச்சியே இக்கட்டுரை. இதுவரை தெளிவு பெருதிருந்த பல விஷயங்களைத் தக்க சான்றுகளுடன் தெளிவாக்கி விளக்கி யிருக்கிறுர் கட்டுரையாளர்:

வயிரமேகன்

தி. நா. சுப்பிரமணியன்

காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பேரரசு செலுத்தி வந்த பல்லவர்களுடைய ஆதிக்கியம் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் இறுதியுடன் முடிவடைந்துவிட்டதாக ஆசிரியர்கள் கருதுகிறுர்கள். 'நிருபதுங்கவர்மனுடைய ஆட்சியுடன் பல்லவ ராஜ்யம் நிலைகுலைந்து விட்டது. அவனுக்குப் பின்னுல் வந்த அபராஜிதவர்மன் ஆட்சியிலே தொண்டை நாடு முழுவதும் சோழர்களுடைய ஆளுகைக்கு உட்பட்டுவிட்டது. இதனுல் தொண்டை நாட்டிலே அரசு செலுத்தியவர்களாகக் கல்வெட்டுக்களில் காணப்படும் கம்பவர்மன், வயிரமேகன், சந்திராதித்தன் என்னும் அரசர்கள், அந்நாடு சோழர்களது ஆதிக்கியத்தின் கீழ் வந்த காலத்துக்கு முன்னதாகவே ஆண்டு வந்திருத்தல் வேண்டும்.' இவ்விதம் முடிவு செய்திருக்கிறுர்கள் பல்லவ சரித்திரத்தை ஆராய்ந்த சரித்திர ஆராய்ச்சியாளர்கள்*.

இவர்களுள் சந்திராதித்தன் எனப்படுபவன், பல்லவன் அல்லவென்பதையும், வாதாபிகொண்ட நரஸிம்ஹவர்மன் காலத்தில் இருந்தவன் என்பதையும், நரஸிம்ஹன் வெற்றிகொண்ட வாதாபிச் சளுக்கிய அரசனுன புலிகேசியின் மகனுன சந்திராதித்தனே அவன் என்பதையும் மற்ருேர் இடத்தில் விளக்கிக் கூறியிருக்கிறேன்.‡

இந்தக் கட்டுரையிலே வயிரமேகனைப் பற்றி ஆராய்வோம்.

வயிரமேகன் ஆட்சிக் காலத்தில் வெட்டப்பட்டனவாக இது வரையில் இரண்டு கல் வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அவை யிரண்டும் அவனுடைய ஆட்சியின் இரண்டாம் ஆண்டைச் சேர்ந்தவை: அரக்கோணத்துக்குப் பக்கத்திலிருந்து கிடைத்துள்ளன.

ஒன்று பொய்யனூர் அகஸ்தியேசுவரர் கோயில் வடபுறச் சுவரில் காணப்படுகிறது. 'தாமற்கோட்டத்து பொய்கை நல்லூர்'

* உதாரணமாக: ஆங்கிலத்தில் ஆர். கோபாலன் எழுதிய 'காஞ்சி பல்லவர் வரலாறு' (History of the Pallavas of Kanchi): 141-2-ம் பக்கங்கள்.

‡ 'எழில்' என்ற பெயரில் வெளி வந்த மாதம் ஒரு புத்தகம்—முதற் புத்தகம்.

திருவகத்தீசுவரமுடைய மகாதேவருக்குத் திருவமுது பண்ணக் கொடுத்த தானத்தைப்பற்றிக் கூறுகிறது.* மற்றொன்று கீழ் புலம் கைலாசநாதர் கோயிலில் காணப்படுவது. 'தாமர்க் கோட்டத்துப் பல கலத்துத் திருக்கூளிச்சரத்து ஆள்வார்க்கு' ஸ்ரீபலி நடத்துவதற்காக அவ்வூர் முள்ளிக் குடையான் ஆதித்தனுளி நிலம் வைத்த செய்தியைத் தெரிவிக்கிறது.†

இந்த வயிரமேகனை, பல்லவ அரசனை அபராஜிதவர்மனுடைய வைப்பாட்டி மகன் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.‡ அவர்கள் அவ்விதம் கருதுவதற்கு அபராஜிதவர்மனுடைய ஆட்சிக் காலத்தனவாகத் திருவொற்றியூரிலிருந்து கிடைக்கும் பின்வரும் இரண்டு கல்வெட்டுக்களுமே ஆதாரங்களாகும். இவையிரண்டும் திருவொற்றியூர் ஆதிபுரேசுவரர் கோயிலிலிருந்து கிடைத்துள்ளன. அபராஜித வர்மனுடைய ஆட்சியின் நான்காம் ஆண்டில் பொறிக்கப் பட்டவை. அவற்றுள் ஒன்று பின்வருமாறு:

"ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிசைய அபராஜிதவர்மற்கு யாண்டு நாலாவது. பெரு நங்கை மகன் வயிரமேகனுகிய வாணகோவரயர் போகி அமத்தியாயின குறும்பகோளலி திருவொற்றியூர் மஹாதேவர்க்கொரு நந்தாவிளக் கெரிப்பதற்கு வைத்த பொன்......"$

மற்றொரு கல்வெட்டு, "சாமி அக்கன் மகன் வயிர மேகனுகிய வாண கோவரையர் போகி சப்பக்கனுகிய பாத்ரதாரி", அதேபோலத் திருவொற்றியூர் மகா தேவர்க்கு ஒரு நந்தா விளக்கு எரிப்பதற்குப் பொன் வைத்த செய்தியைக் கூறுகிறது. §

இந்த இரண்டு கல் வெட்டுக்களில் குறிக்கப்படும் வயிரமேகனுகிய வாணகோவரையர் ஒருவனே. அவன் தாயார் பெயர் ஒரு கல்வெட்டில் பெரு நங்கையென்றும் மற்றொரு கல்வெட்டில் சாமி அக்கன் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. அவனுடைய தந்தையின் பெயரைக் குறிப்பிடாமல், தாயார் பெயரைமட்டும் குறிப்பிடுவதால் அவன் அபராஜிதவர்மனுடைய மகனுகவே இருத்தல் வேண்டும் என்றும் அவனுடைய தாய் அரசனுடைய போகியாருள் ஒருத்தியாக இருத்தல் வேண்டும் என்றும் நினைத்தனர் போலும்.

இவ்விதம் கருதுவது தவறு.

வயிரமேகனை வாணகோவரையன் என்று கல்வெட்டே கூறுகிறது. அவன் வாணகப்பாடியை ஆண்டுவந்தவன். அபராஜிதவர்மனுடைய போகியார் மகன் என்று கருதுவதற்கு எந்த விதமான

* தென்னிந்திய சாஸனங்கள்; வால்யூம் 12, சாஸனம் 113.

† ஷை சாஸனம் 114.

‡ ஷை பக்கம் 38 (1913-ஆம் வருஷத்துச் சென்னைச் சாஸன இலாகா அறிக்கை, பக்கம். 90.)

$ தென்னிந்திய சாஸனங்கள்; வால்யூம் 12 சாஸனம் 87.

§ ஷை சாஸனம் 88.

ஆதாரமும் இல்லை. அதற்குப் பதிலாக அவன் தாயான பெருநங்கை அரச குடும்பத்தையே சேர்ந்தவள் என்று நிச்சயமாகச் சொல்லலாம். அவளை, 'சாமி அக்கன்' என்று கல்வெட்டுத் தெளிவாகக் கூறுகிறது.

'அக்கன்' என்ற சொல் 'தமக்கை' என்னும் பொருளிலேதான் அந்தக் காலத்துக் கல்வெட்டுக்களில் உபயோகப்பட்டிருக்கிறது. சோழர் பேரரசனை ராஜராஜன் தன் தமக்கையான குந்தவ்வையை 'அக்கன்' என்று பெருமையுடன் தன் கல்வெட்டுக்களில் குறிப்பிட்டிருக்கின்றான். அதனால் 'சாமி அக்கன்' என்பது அரசனுடைய தமக்கையார் என்ற பொருள்படும். அதனால் வயிரமேகன் என்னும் வாணகோவரையன் பல்லவ அபராஜிதவர்மனுடைய தமக்கை மகனுவன் என்பது விளங்கும்.

திருவண்ணாமலையிலே கிடைக்கும் கல் வெட்டு ஒன்று 'வாணகோவரையர் குணமந்தன்குறும்ப கோலாலன் வயிரமேகன் கொடுக்கன்(மகன்) சிற்றண்புலியூர் நாடன்' திருவண்ணாட்டு தேவதான பிரம்மதேயம் புலியூர் நாடி சதுர் வேதி மங்கலத்து ஏரிக்கு அறமாக இருபது கழஞ்சு துளைப்பொன் வைத்த செய்தியைக் கூறுகிறது.* திருவொற்றியூர்க் கல்வெட்டில் காணப்படும் வயிரமேகனும் இவனும் ஒருவனே என்பது இந்தக் கல் வெட்டில் இவன் 'குறும்ப கோலாலன்' என்றும் திருவொற்றியூர்க் கல் வெட்டில் இவன் போகி குறும்ப கோளலி என்றும் குறிக்கப்பட்டிருப்பதினின்று நன்கு விளங்கும்

இம்மன்னன் ஆதிக்கம் திருவண்ணாமலை, திருக்கோயிலூர்ப் பிரதேசங்களிலும் இருந்துவந்திருக்கிறது. திருக்கோயிலூருக்குப் பக்கத்தில் உள்ள நெற்குன்றம் என்னும் கிராமத்துக்கு வயிரமேக சதுர்வேதி மங்கலம் என்ற பழம் பெயர் கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. இன்னும் மணம்பூண்டியிலும் அவனுடைய கல்வெட்டு இருக்கிறது. † வாணகோவரையர் சித்தவடவனர் மகனை வயிரமேகன் கல்வெட்டும் கிடைத்துள்ளது. ‡

இவற்றால் வயிரமேகன் என்பான் பல்லவ அபராஜித வர்மனுடைய தமக்கை மகன் என்பதும், வாணகோவரையன் என்பதும் நன்கு விளங்கும்.

---

* தென்னிந்திய சாஸனங்கள் வால்யூம் 8. சாஸனம் 65.

† 1935-ஆம் வருஷத்து 233-ஆம் சாஸனம்.
மணம் பூண்டிக் கல்வெட்டுப் பின்வருமாறு காணப்படுகிறது.
"ஸ்வஸ்தி ஸ்ரீ விலாடராயர் மகள் அணிகோவன் ஒற்றியூர் பிராட்டி வயிரமேக வாணகோவரையர் தேவியார் நிச்சவினீத மங்கலனு ஏரி கண்டு தூம்பு இடுவித்தார்."

‡ 1937-38-ஆம் வருஷத்து 469-ஆம் சாஸனம்.

வீட்டில் தயாரித்த
பனீர் கட்லெட்
டால்டாவில் செய்தால்
சுவைமிக்கதாயிருக்கும்!
5 கப் பாலை கொதிக்கவைத்து சில சொட்டுகள் எலுமிச்சஞ்சாறை பிழியவும். பால் பிரிந்ததும் அடுப்பிலிருந்து எடுத்து தனியாக வைக்கவும். உறைநீர் தெளிந்ததும் வடித்துவிட்டால் கெட்டியான பனீர் கிடைக்கும். (புளித்துப்போன் பாலிலிருந்தும் மேற்கூறியபடி பனீர் எடுக்கலாம்). பனீரை மஸ்லின் துணியில் கட்டித் தொங்கவிடவும், சுமாராக உலர்ந்ததும் பச்சைமிளகாய் அல்லது மிளகு, பொடித்த சீரகம், ருசிக்குத் தகுந்த உப்பு இவைகளை கலக்கவும். கலவையின் மேல் பளுவை வைத்து சமமாக பரத்தவும். பனீர் கெட்டியானதும் சதுரம் சதுரமாக கத்தியால் நறுக்கவும். குழிவு குறைந்த வாணலியில் டால்டாவை சூடாக்கி சதுரக் கட்டிகளை சீக்கிரமாக பொரித்தெடுக்கவும். பனீர் கட்லெட்களை பொரித்த வெங்காயம், எலுமிச்சந் துண்டுகள் இவையோடு சூடாக பரிமாறவும். இதை போட்டு குழம்பு தயாரித்து சாப்பிட்டால் மிக ருசியாயிருக்கும்.
எந்த உணவுகள் எளிதில்
ஜீரணமாகின்றன ?
இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது
என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள் !
தி டால்டா
அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1
DALDA
VANASPATI
HVM. 100-50 TM

ஜம்மியின்

லிவர்க்யூர்

குழந்தை களின் ஈரல் குலைக்கட்டி களினால் ஏற்படும் பயத்தைப் போக்கடிக்கிறது.

மிகவும் முத்திப்போன சந்தர்ப்பங்கள் தவிர எல்லா ஈரல் குலைக்கட்டி களுக்கும் ஜம்மியின் லிவர்க்யூர் கண்டிப்பான குணம் அளிக்கிறது என்பதை கடந்த பல ஆண்டுகளாக குணமாகி வரும் ஆயிரக்கணக்கான குழந்தைகளினால் நிரூபிக்கப் படுகிறது.

ஜம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்
மைலாபூர், மதராஸ். (போன் நெ. 8139)
தேப்பகுளம் திருச்சினாப்பள்ளி, பெரிய தெரு கும்பகோணம், பெங்களூர்,
பம்பாய் 4, (போன் நெ. 41593) மற்றும்: லக்னோ, கல்கத்தா.

J-235. Tamil

சக்தி ★ மாதப் பத்திரிகை

தனிப் பிரதி 'தபால்'	0 8	ஒரு வருஷம்	6 0
ஆறு மாதம்	3 8	2 வருஷம்	11 0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு
0-4-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப் பிரதி	0 9	ஆறு மாதம்	4 0
ஒரு வருஷம்	7 0	2 வருஷம்	13 0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப் பிரதி	0 10	ஒரு வருஷம்	8 0
ஆறு மாதம்	4 8	2 வருஷம்	15 0

சக்தி காரியாலயம்

சென்னை 14.

என்ற விலாசத்திற்குச் சந்தாத்தொகை அனுப்பவேண்டும்

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது பழமொழி. ஆனால், முகத்தில் அழகிருந்தால் அகத்திலும் அழகிருக்க வேண்டுமென்று கட்டாயமா? அழகு ஆக்கவும் செய்யும்; அழிக்கவும் செய்யும். அந்தச் சிற்பியின் நினைவில் எது அழிந்தது? இது சென்னை ரேடியோ நிலையத்தில் ஒலிப் பரப்பப் பெற்றது.

சிலை பேசிற்று

○

ரகுநாதன்

[இரவுதான் என்றாலும் பட்டப் பகல் போல நிலவு பால் மழை பொழிகிறது. வருணி ஆற்றங் கரையில் குளிர்காற்றின் சீதத்தோடு தாழை மடலின் மண மயக்கம் புரையோடி வீசுகிறது. அதோ எட்டாத் தொலைவில், எங்கோ ஒரு குயில் ஏங்கி ஏங்கிக் கூவுகிறது. மோன சமாதி நிறைந்த முன்னிலாக் காலத்தில் எங்கிருந்தோ வீணையில் ஆனந்த பைரவி ராகம் இழைகிறது; இடை இடையே சிலை செதுக்கும் உளிச் சத்தமும் கேட்கிறது.]

பூமி நாதன்: நிலவுதான் என்னமாய்க் காய்கிறது! இந்த அழகைக்காண இவளுக்கும் கண்ணிருந்தால்?

[பாதக்குறடு நெருங்கி வரும் சப்தம் கேட்கிறது.]

யாரது?...யாரங்கே?

விசாகன்: நான்தான், பூமி நாதா.

பூமி: விசாகனா? வா வா. ஏது, இந்த வேளையில்?

விசா: நீ மட்டும் இந்த வேளையில் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்? உன் சிலையோடு உறவாடுகிறாயா?

பூமி: ஆமாம். நாளை சித்ரா பௌர்ணமி. நாளை இவளுக்குக் கண் திறந்துவிடும். தன்னைப் படைத்த என்னைப் பார்த்து மகிழுவாள்!

விசா: பிரமாதமாகக் கற்பனை செய்கிறாயே. சிலை எங்காவது பார்க்குமா? அல்லது பேசுமா?

பூமி: என் உள்ளம் பேசினால், அவளும் பேசுவாள். என் கண்கள் பார்த்தால்—

விசா: அவள் கண்கள் நாணத்தால், வெட்கித் தலை குனிந்து விடுமோ? நல்ல பைத்தியம்!

பூமி: பைத்தியமா? பைத்திய நிலையில்தான் மேதாவிலாசம் பளிச்சிட முடியும், விசாகா!

விசா: பைத்தியம் பிடிக்கா விட்டால், இந்தக் கல்லைக் கட்டிக் கொண்டு மாரடிப்பாயா?

பூமி: விசாகா, நானே கலைஞன். அழகை அனுபவிப்பவன்.

விசா: பூமிநாதா. கனவிலும் காவியத்திலும் காணும் அழகைக் கட்டிய மனைவியிடத்திலும் எதிர் பார்க்கலாமா? மேலும், உன் மனைவி குமுதம் நல்ல குணவதி.

பூமி: குணம் இருந்தென்ன? கண்ணுக்கு குளிர்ச்சியாக இருக்க வேண்டாமா?

விசா: இதயம் குளிர்ந்தால் போதாதா? அழகு அழிந்து விடும்; அன்பு அழியாது.

பூமி: அழகு அழிந்து விடுமா? அழியாத அழகைத் தானே இதோ உருவாக்கிக் கொண்டிருக்கிறேன். பார் இதோ...

விசா: பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன்.

பூமி: மேக சஞ்சாரத்திலே ஊடு பாய்ந்து வெட்டும் மின்னல் கொடி, ஆற்றங்கரைத் தாழை மடல் தண்ணீரைக் குனிந்து தொட்டு, மணத்தை உரசி விடும் லாகவம், வானத்து ஸப்தரிஷி மண்டலத்தில் வண்ணக் கோல நாட்டியம்—எங்கெல்லாமோ நான் அனுபவித்த அழகைத்தான் இப்படி உருவாக்குகிறேன். இந்தச் சிலை மட்டும் உயிர் பெற்று விட்டால்...

விசா: உயிர் பெற்று விட்டால்? உடனே கட்டி அணைத்து விடுவாயோ

பூமி: இப்போது கூடத்தான் என் கை துறுதுறுக்கிறது.

விசா: அழகு அழகு என்று மாரடிப்பதற்கு, அந்த அழகே உன் உயிரைக் குடித்துவிடாமல் இருந்தால் சரிதான்.

பூமி: என்ன அப்படிச் சொல்கிறாய்? அழகு என்ன அழிக்கும் சக்தியா?

விசா: பின்னே? கொல்லி மலைப் பாவையைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாயா? அவள் காலடியில் விழுந்து இறந்தவர்களைப் போல, எங்கே நீயும் இதன் காலடியில் தவம் கிடந்து விடுவாயோ என்றுதான் பயமாயிருக்கிறது.

பூமி: கிடந்தால்தான் என்ன? இந்த அழகின் உபாசனையில் என் ஆயுள் முழுவதையும் கழித்து விடுவேனே. இவள் மட்டும் உயிர் பெற்று எழுந்து விட்டால்?

விசா: கல்லில் மட்டும் தானே உன்னால் உயிர் பெய்ய முடியும். அவள் இதயத்தைத் துடிக்கச் செய்ய முடியுமா?

பூ: தேவ கிருபையால் அப்படிக்கூட நடந்து விடும்.

விசா: அப்படியானால் உனக்கும் அழிவு நெருங்கி விட்டதென்று கொள்ள வேண்டியது தான். அழகை ஆராதித்தவர்கள் இன்றுவரை போர்க் களத்தைத் தான் முத்தமிட்டார்கள்.

பூ: நீ என்னைச் சரியாக அறியவில்லை. கேவலம் வெறும் இச்சை வசப்படமாட்டேன் நான்.

விசா: தெரிகிறதே. இதய சௌந்தர்யத்தை உணரத் தெரியாது, இந்தச் சிலையைக் கண்டு மோகிக்கிறாயே. இதிலிருந்தே தெரியவில்லையா?

பூ: சரி, உன்னோடு வழக்காட நேரமில்லை. போ, எனக்கு வேலை முடியவேண்டும்.

விசா : அதுவும் சரிதான். அழிவு என்னவோ நிச்சயம். நீயா, சிலையா என்பதுதான் கேள்வி. சரி: நான் வருகிறேன்.

[பாதக் குறட்டின் சப்தம் சென்று மறைகிறது.]

பூ: விசாகன் என்ன சொன்னான்? அழகு அழிக்கும் சக்தியா? இதயம்தான் அழியாதா?...இவள் மட்டும் உயிர் பெற்று விட்டால்? அப்புறம் இவளோடு பேசுவேன், கொஞ்சுவேன், குலாவுவேன்.

[பின்னணியில் நீலாம்புரி ஆலாபனையின் தந்தி நாதம் கேட்கிறது. உளிச் சப்தம் தேய்ந்து குறைகிறது.]

கொஞ்சுவேன் குலாவுவேன்.

[மெல்லிய முனகல்]

ஆண்டவா, உலகத்து அழகையெல்லாம் இதோ உருவாக்கித் திரட்டி விட்டேன் இவளுக்கு உயிர்கொடு...என் இதய ராணிக்கு இன்னுயிர்கொடு...கொடு...சீக்கிரம்கொடு.

[பின்னணியில் மெல்லிய ஸ்தாயியில் தொடங்கி விறு விறு என்று ஓங்கார நாதம் உச்சிக் கேறுகிறது]

அதோ அவள் கண்கள் துடிக்கின்றன! பச்சை நரம்புகளில் பசிய ரத்தம் ஓடத் துவங்குகிறது! நெஞ்சம் துடிக்கிறது! அந்த மோஹன உதட்டில் முல்லை வெடிக்கிறது. வா, என் கண்ணே.

2

பூ: வேடித்த கடலமுதை
எடுத்து வடிவு செய்த
மேனியாள்—ஒரு
வீமப்பாக மோத்த
காமப் பாலுக் கோத்த
சீனியாள் (வேடித்த)

[பாதச் சிலம்பின் புலம்பல் நெருங்கி வருகிறது.]

மோ: யாரைக் கூப்பிடுகிறீர்கள், இவ்வளவு உற்சாகமாக?

பூ: யாரை, உன்னைத்தான். சரி. நான் உன்னை என்ன பெயரிட்டழைக்கலாம்?

மோ: அது உங்கள் இஷ்டம்.

பூ: வாஸ்தவம்தான். ரோஜாவை எந்தப் பெயரிட்டு அழைத்தாலென்ன, அதன் மணம் குன்றி விடுமா?

மோ: ரோஜாவா? அதற்கு முள் இருக்குமே.

பூ: கெட்டிக் காரிதான். உன்னை மோகினி என்றே அழைக்கட்டுமா?

மோ: மோகினியா? அவள் ரத்தத்தைக் குடித்து விடுவாளே.

பூ: நீமட்டு மென்ன? என் இதயத்தையே குடித்துவிட்டாயே! மோகினி இங்கு வா.

மோ: அதோ...பொறுங்கள். ...அதோ பாருங்கள்.

பூ: ஆம். நிலவு அமிருத வர்ஷம் பொழிகிறது.

மோ: தங்கள் அன்பும் அந்த நிலவைப் போல வளர வேண்டும்.

பூமி, அன்புக்கு அம்புலியை உதாரணம் காட்டாதே. அது தேயவும் கூடுமல்லவா?

மோ: காதலும் அப்படித் தானே. ஒன்று அது வளர வேண்டும் அல்லது தேய வேண்டும். சரிதானே?

பூமி: என்னைச் சந்தேகிக்காதே. என் காதல் சந்திரனல்ல; சூரியன்.

......

மோ: வீணாக ஏன் வார்த்தைகளை வைத்துக்கொண்டு விளையாடு

கிறீர்கள்? அப்பா! இந்த வார்த்தைகள் பச்சோந்திகளைப் போன்றவை. கணத்துக்குக் கணம் மாறும் தன்மை கொண்டவை.

பூமி: சூரியனுக்கு ஏழு வர்ணம் இருந்தாலும் நாம் காண்பது ஒரே நிறந்தானே.

மோ: உங்கள் பேச்செல்லாம் எனக்குப் புரியாது. நான் ஒரு பேதை.

பூமி: மோகினி. உன் அழகால் உண்மையில் என்னைத்தான் பேதையாக்கி விட்டாய். உன் மையலில் கட்டுண்டு கிடக்கிறேன். இந்த சுகத்துக்காக எத்தனை வருஷம் தவம் கிடந்தேன், தெரியுமா? அதை நினைத்தால் - ?

மோ: சென்றதை நினைத்து வருந்துவதுதானே பேதைச் செயல். இன்று, இப்பொழுதுக் காலத்தை இன்பமாகக் கழிப்போம். அதுதான் வாழ்க்கை. ஆமாம். வாழ்வென்பது இந்தப் பொழுதுதான். மது நுரை வடியுமுன் குடித்துவிடவேண்டும். வா போகலாம்.

3

பின்னணியில் :

கோடை கோதித்தது
சூடு பொழிந்தது
கூதிரும் வாடையில்
நஞ்சைக் கலந்தது
ஓடைப் புனலினில்
ஊறும் வசந்தமும்
உள்ளவெறியினைக்
கிண்டி யலுத்தது
ஆடிப் பருவத்துச்
சூறையங் காற்றும்......
அலைத்து இயற்கை
வனப்பை குலைத்தது
ஓடின காலமும்
நில்லாது ஓடின
ஓடின மாதமும்
ஓடின, ஓடின......

பூமி: ஒரு வருஷம். அப்பா, ஓடிப் போனதே தெரியவில்லையே.

[கால் சிலம்பின் ஓசை நெருங்குகிறது.]

மோகினி, வந்து விட்டாயா? குழந்தை எங்கே? நம் காதற்கனி எங்கே ?

மோ. காதற் கனியல்ல. பாபத்தின் சுமை!

பூமி: மோகினி, என்ன சொல்கிறாய்? நமது அருமைக் காதல் அளித்த பரிசல்லவா, இது.

மோ: நான் காதலைத்தான் வேண்டினேன்; கைக் குழந்தையை வேண்டவில்லை.

பூமி: காதலைப் பாபமென்று கருதுகிறாய்?

மோ: காதலைப் பாபமென்று நான் கருதினால், உங்களோடு இத்தனை நாள் வாழ்ந்திருக்கவே மாட்டேன். நான் காதலியாகத்தான் இருக்கமுடியும்; தாயாக முடியாது.

பூமி: மோகினி, இல்வாழ்வின் இன்பமே குழந்தைகள் தானே. அதைப் பழித்தால்—

மோ: நான் குழந்தையைப் பழிக்கவில்லை; வேண்டாமென்று தான் சொல்கிறேன்.

பூமி: அப்படியானால் நீ என்ன தான் செய்ய வேண்டுமென்கிறாய்?

மோ: அழையாத விருந்தாளிக்கு நுழைய இடமேது ?

பூமி: அடி பாவி!

மோ: பாவமாவது ? மேனகையும் இப்படித்தானே செய்தாள்.

பூமி: விசுவாமித்திரன் நிரா கரிக்கப் போய்த்தானே. நான்...

மோ: நீங்கள் வைத்துக் கொள்கிறேன் என்கிறீர்களா? ஒன்று குழந்தை அல்லது நான். உங்கள் அன்பு யாருக்காவது ஒரு வருக்குத்தான் உதவ வேண்டும்.

பூமி: ஏன் உனக்கு இந்தப் புத்தி?

மோ: அழகை உபாசித்தால், மற்றவற்றை மறந்துவிட வேண்டியதுதான். என்ன சொல்லுகிறீர்கள்?

[பின்னணியில்ஒருகணம் தந்தி நாதம்]

பூமி: உன் இஷ்டம்.

மோ: சரி வாருங்கள்.

[பாதச் சிலம்பொலி சென்று மறைகிறது]

4

பின்னணியில்:

கோடை கோதித்தது
சூடு பொழிந்தது
கூதிரும் வாடையில்
நஞ்சைக் கலந்தது
ஓடின காலமும்
நில்லாது ஓடின
ஓடின மாதமும்
ஓடின ஓடின
கோடை கோதித்தது......

மனோகரன்: கண்ணே, உன்னுடன் இருப்பது எவ்வளவு ஆனந்தமா யிருக்கிறது. உன்னை எட்டாப் பழம் என்றல்லவா இது வரை எண்ணி யிருந்தேன்.

மோ: இப்போது எட்டி விட்டேன் அல்லவா?

மனோ: ஆமாமடி மோகினி. பூமிநாதன்?

மோ: நான் என்ன அவர் சொத்தா?

மனோ: என் சொத்தா?

மோ: நான் ஒருவர் சொத்தும் அல்ல.

மனோ: வேண்டாததை எண்ணி சிந்தா குலப்படுவானேன்? இதோ நீயும் நானும் ஒருவர் பக்கம் ஒருவராய் இருக்கிறோமே. இதுதான் சுவர்க்கம்.

மோ: ஆமாம், மனோகரா.

மனோ: சரி. நான் உன்னை விரும்பினேன் என்று உனக்கு எப்படித் தெரிந்தது?

மோ: அதுவா? என் உள்ளம் சொல்லிற்று; உங்கள் கண்கள் பேசின. மேலும், இதோ வீசும் தென்றல், அந்த மலர்கள், பறவைகள் எல்லாம் தூது சொல்லின.

மனோ: அப்படியா? ஆம். காதல் தூது செல்வதற்கென்று தான் காற்றும் மலரும் கருங் குயிலும் பிறந்திருக்கின்றன.

மோ: ஆமாம்...ம்......அந்த நிலவைப் பார்த்தீர்களா?

மனோ: நமது காதலும் அந்த நிலவைப்போல்...

மோ: வளர வேண்டும், கண்ணாளா.

[தூரத்தில் "மோகினி! மோகினி!" என்னும் பூமி நாதனின் குரல் கேட்டு பக்கம் நெருங்குகிறது]

அதோ பூமிநாதன் குரல் கேட்கிறது.

பூமி: மோகினி, எத்தனை நாளாக இந்த வேஷம்?

மோ: ......[மௌனம்]

பூமி: ஏன் பேசாமல் இருக்கிறாய்? அன்று உனக்காக என் பிள்ளையைப் பறி கொடுத்தேன். அதற்கு மேனகையை உதாரணம் காட்டினாய். இன்று யாரைக் காட்டுவாய்?

மோ: ஊர்வசியைத் தெரியுமா உங்களுக்கு? புரூரவஸைக் காதலித்த அதே ஊர்வசி அர்ஜுனனையும் காதலித்தாளே. கதை தெரியுமா? எங்கள் வர்க்கமே அப்படித்தான்.

பூமி: எதிர்த்தா பேசுகிறாய்? மலர் மலராய்த் தேடித் திரியும் பொன் வண்டுதானா நீ? உன்னைக் கண்டா நான் மயங்கினேன்?

மோ: ஆண்கள் மட்டும் என்ன?

பூமி: புதுப்புது மது வேண்டுமோ உனக்கும்?

மோ: ஆமாம். நான் அழகு. பிறரைக் கவர்வதற்காகத்தான் வாழ்கிறேன். அடிமையாவதற்கல்ல.

பூமி: இதற்காகத்தானா இத்தனை வருஷம் பாடுபட்டேன். என் வேட்கை இப்படியே வெந்து நீறாக வேண்டியதுதானா?

மோ: வேறுவழி? அழகு சாச்வதம். யௌவனம்?

பூ: இத்தனை துணிச்சல் வந்துவிட்டதா? இனி நீ இருந்தாலென்ன போனாலென்ன?

[சுத்தியால் கல்லின் மீது மோதியடிக்கும் சப்தம் டங்காரம் செய்கிறது]

மோ: [சிரிக்கிறாள்]

5

...

பூ: விசாகா, இதோ கேள், என்னை அழிக்க வந்த அழகை நான் அழித்து விட்டேன். இதோ, விசாகா, குமுதா, மோகினி, விசாகா

[ஓரே கதறல். மீண்டும் டங்காரச் சப்தம். பின்னணியில் பூபாள ராகத்தின் தந்தி இசை. காலைப் பறவைகள் கூவுகின்றன.
பாதக் குறடின் ஓசை நெருங்குகிறது]

விசா: பூமிநாதா இன்னுமா உன் வேலை முடியவில்லை? என்ன இதெல்லாம்? சிலை ஏன் உடைந்தது? பூமிநாதா, என்ன தலையெல்லாம் ரத்தம்? பூமிநாதா...

பூ: யாரது? [முனகுகிறான்]

விசா: நான்தான் விசாகன். எழுந்திரு என்ன இதெல்லாம்?

பூமி: விசாகா நான் உணர்ந்து விட்டேன்.

விசா: சரி: இந்தச்சிலை ஏன் உடைந்து போய் விட்டது? உன் உயிருக்கு உயிரானதாச்சே.

பூ: அது போனதே நல்லதாயிற்று. குமுதா எங்கே?

விசா: வீட்டில்தான்.

பூமி: வா, போகலாம்.

பின்னணியில்:

கோடை கோதித்தது
சூடு போழிந்தது
கூதிரும் வாடையில்
நெஞ்சைக் கலந்தது
ஓடின காலமும்
நில்லாது ஓடின
ஓடின மாதமும்
ஓடின ஓடின......

*

‘பாரத வெண்பா’ என்பது பரிபூரணமாக நமக்குக் கிடைக்காத தமிழ் நூல்களில் ஒன்று. அதில் அருமையான கவிகள் நிரம்பியுள்ளன. அந்த நூலைப்பற்றி விரிவாக ஆராய்ந்து, பல விஷயங்களைத் தெரியப்படுத்துகிறார் நம் ஆராய்ச்சித்தலைவர். ஈழகேசரியிலிருந்து.

பாரத வெண்பா

எஸ். வையாபுரிப்பிள்ளை

சங்க காலத்தில் ஒரு பாரதம் தமிழில் இயற்றப் பெற்றிருந்த தென்பர். இதற்குச் சான்றாக 10-ம் நூற்றாண்டில் தோன்றிய சின்ன மனூர்ச் சாசனம் உளதென்று கொள்வர். இச் சாசனத்தில் ‘மதுராபுரிச் சங்கம் வைத்தும் மாபாரதம் தமிழ்ப்படுத்தும்’ என வருகின்றது. ஆனால் இப் பாரதம் எப்போது தமிழ்ப்படுத்தப் பட்டதென்பதைத் தெரிய ஒருகுறிப்பும் இல்லை. பொதுப்படத் தமிழ்-இலக்கிய - சரித்திரத்தை நோக்கினால் இத் தமிழ்ப் பாரதம் 6-ம் நூற்றாண்டில் தோன்றி இருக்கலாமென்று கொள்ள இடமுண்டு. இதன் பின்பு, 9-ம் நூற்றாண்டில் ஒரு தமிழ்ப் பாரதம் இயற்றப் பெற்றிருக்க வேண்டும். திவாகரத்தில் 10-ம் தொகுதியின் இறுதியில் இப் பாரதம் குறிக்கப்பெற்றிருக்கிறது. பின்னர், 11-ம் நூற்றாண்டில் ஒரு பாரதம் இயற்றப் பட்டதாகும். இது ‘பாரதம்பலவரில் பஃறொடை வெண்பா’ என்ற யாப்பருங்கலச் சூத்திர உரையிற் குறிக்கப்பட்டுளது.

இதற்குப்பின் 13-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதமொன்று தமிழில் இயற்றப் பட்டதாகச் சாஸன வாயிலாக அறிகிறோம். இதனைக் குன்றவத்தனக் கோட்டத்து இல்லத்தூர் நாட்டு அரும்பாக்கமுடைய அருணிலை விசாகன் திரைலோக்கிய மல்லன் வத்ஸராஜன் என்பவன் இயற்றினன். சாஸன காலம் மூன்றாங் குலோத்துங்கனது 32-ம் ஆட்சியாண்டு.

இவ்வரசன் கி. பி. 1178-ல் அரசாட்சி மேற்கொண்டானாதலின், கி. பி. 1210-ல் சாஸனம் பொறிக்கப்பட்டதாம். (சாஸனத் தமிழ்க் கவி சரிதம். பக். 90: சென்னை எபிகிராபிக்கல் ரிப்போர்ட்டு. 1905, எண் 482). ‘அருணிலை விசாகன் பாரதத்தை இனிய செந்தமிழ்ப் படுத்தியவன்’ என்றும் அவன் சிவநெறியில் ஒழுகுபவன் என்றும் சாஸனம் தெரிவிக்கின்றது. இப்பாரதம் மறைந்துவிட்டது.

பிறிதொரு பாரதம் குறைப் பிரதியாய் நமக்கு அகப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் வெண்பாவினால் பாடப்பெற்றதாதலால், பாரத வெண்பா எனப் பெயர் வழங்குகிறது. பெருந்தேவனார்

என்பவர் இதன் ஆசிரியராகக் கருதப் படுகின்றனர். நூல் முற்றும் அகப்படாமையினலே, ஆசிரியர் பெயர் உறுதியாய்த் தெரியக் கூடவில்லை. சங்க நூல்கள் பலவற்றில் முதலாவது வரும் கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் பாரதம் பாடிய பெருந்தேவனர் இயற்றியன என்று காணப்படுகின்றது. நச்சினர்க்கினியர்,

கங்கை சிறுவனும்
காய்கதிரோன் செம்மலும்
இங்கிருவர் வேண்டா
எனவள்ளிக்—கங்கை
சிறுவன் படைக்காவல்
பூண்டான் செயிர்த்தார்
மறுவந்தார் தத்தம்
மனம்.

என்ற பாரதச் செய்யுளைக் காட்டி (தொல். புறத்திணை 17) இது பெருந்தேவனர் பாட்டு என்றனர். ஆனல், இச் செய்யுள் இப்போது அகப்படும் பாரத வெண்பாப் பகுதியில் உளதாக வேண்டுமாயினும், இதிற் காணப்படவில்லை. பெருந்தேவனர் என்ற பெயரோடு சார்த்தி, பாரதம் நெடுங்காலமாக வழங்கபபடுதலால், பாரத வெண்பாவும் இவர் பாடியதென்று கொள்ளப்பட் டிருத்தலும் கூடும். அல்லது உண்மையிலே இப் பாரத வெண்பாவைப் பாடியவர் பெருந்தேவனர் என்ற பெயர் கொண்டவராயிருத்தலும் கூடும். ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்தாலன்றி உண்மை தெரிய வழியில்லை.

பாரத வெண்பாவை இயற்றியவர் வைஷ்ணவ சமயத்தினர். நூலகத்துப் பருவந்தோறும் வரும் காப்புச் செய்யுட்கள் இதற்குச் சான்று பகரும்.

தேனேங்கு சோலைத்
திருவேங்கட மென்றும்
வானேங்கு சோலை
மலையென்றும்—தானேங்கு
தென்னரங்க மென்றும்
திருவத்தி யூரென்றும்
சொன்னவர்க்கும் உண்டோ
துயர்.

என்ற வீடுமப் பருவத்துச் செய்யுளைக் காண்க.

இப் பாரதவெண்பா தோன்றிய காலம் கி. பி. 9-ம் நூற்றுண்டென ஆராய்ச்சியாளர் கூறிவந்தனர். இதற்கு முக்கியமான சான்ருகக் கொண்டது இந் நூலகத்துள்ள ஒரு செய்யுளாகும்.

வண்மையால் கல்வியால்
மாபலத்தால் ஆழ்வினையால்
உண்மையால் பாரான்
உரிமையால்—திண்மையால்
தேர்வேந்தர் வானேறத்
தெள்ளாற்றில் வென்ருனேடு
யார்வேந்தர் ஏற்பார்
எதிர்.

என்பதே அச் செய்யுள். தெள்ளாற்றில் வென்ற ஓர் அரசன் காலத்தில் இந்நூல் இயற்றப்பட்டதென்பது இதனல் வெளியாகும். இதன் உரை நடைப் பகுதியில்,

அல்லிபீடத் தரிவைக்குத்தன்
அழகமர்தோளே ஆலயமாக்கிய
பல்லவர்கோமான் பண்டித
ராலயனைப் பாவினேம்

என வந்துள்ளது. இதனல் தெள்ளாற்றில் வென்றவன் ஒரு பல்லவன் என்பதும், அவனுக்குப் பண்டிதராலயன் என்ற சிறப்புப் பெயர் இருந்தது என்பதும் விளங்கும். பல்லவன் என்று கூறியதனைக் கொண்டு மூன்ருவது நந்திவர்ம பல்லவனே இவ்வரசன்

என்று முடிபு கண்டனர். ஆனால், இவ்வனம் துணிந்த காலத்து, இந் நந்தி யொருவனே தெள்ளாற்றில் வெற்றிகொண்டவனாகக் கருதப்பட்டான். இப் பல்லவனைத் தவிர 13-ம் நூற்றாண்டில் வாழ்ந்த வேறொரு பல்லவனும் தெள்ளாற்றில் வெற்றி கொண்டுள்ளதாக ஒரு பல்லவ சாஸனம் தெரிவிக்கிறது. (தென்னிந்திய சிலாசாஸனம் 12-ம் தொகுதி எண் 128 = எபிகிராபியா இந்திக்கா 23-ம் தொகுதி பக். 180-181) கோப்பெருஞ்சிங்கன் என்பவன்தான் இப் பல்லவன். தெள்ளாற்றில் வெற்றி கொண்ட இந்த இரண்டு பல்லவர்களுள் யாவர்காலத்து இப் பாரத வெண்பா இயற்றப்பட்டது?

இதனைத் துணிதற்குச் சொல் வழக்காறு முதலியன நமக்குத் துணை புரிகின்றன. 13, 14-ம் நூற்றாண்டுகளில் நாலாயிரத்திவ்யப் பிரபந்த வியாக்கியானங்களில் ஆளப்பட்டுள்ள சொற்களும் தொடர்களும் பிற பிற்காலச் சொற்களும் பாரத வெண்பாவிலும் அதன் உரைநடைப் பகுதியிலும் காணப்படுகின்றன. உதாரணமாக,

மருமகன் (பக்.5) விவஸ்தை (பக்.48) சமயவிரோதம்(பக்.48) அருளிப்பாடு (பக்.73). அடா (பக். 248,) ஈண்டான் (பக். 22, 40, 79, 87, 129, 190, 199, 253), புருஷகாரம் (பக். 107), சுப்பிரமணிய சுவாமி (பக். 213) இலச்சித்தல் (பக். 141, 156, 129), அப்போ (பக். 253), போட்டு (பக். 150, 151, 161) என்றனுடை (பக். 256) என்ற சொற்களையும் தொடர்களையும் காண்க. வீராகம் (வீராபிஷேகம் பக். 211) என்பது சோழர் காலப் பிற்பகுதியில் சாஸனங்களிற் பயின்று வருவதாகும். அசதி (அசரீரி. பக். 80), சுரோணிதம் (சோணிதம் பக். 129, 134, 135, 255) என்ற பிழைபட்ட சொல் வழக்காறுகளும் பிற்பட்ட காலத்தையே உணர்த்துகின்றன. முடிவாக, கொன்றைவேய்ந்தனில் வரும் மீகாம னில்லா மரக்கலம் ஓடாது என்பது,

யாயாகி யெந்தையுமா யென்னையுமென்
மக்களையு மெடுத்து நாட்டி
ஓயாது நீநிற்க உரியதோ
ரிவ்விடத்தே உலந்தா யம்மா
தீயானை யென்மகனைச் செருக்களத்தே
யின்றுநீ தமிய னாக்கி
மீகாம னில்லாத மாக்கலந்தா
னாக்கினாய் வேந்த ரேறே.

(பக். 211)

என்ற செய்யுளில் எடுத்தாளப்படுகின்றது. இவ்வாறு எடுத்தாளும் வழக்கம் இப் பெருந் தேவனார்க்கு உண்டென்பது,

நில்லா வுயிர்கொடுத்து
நின்ற புகழ்படைக்க
நல்லார் கடனென்ற
நன்குணத்தார்—சொல்லார
முந்தியா னாகின்றேன்
மூவாத குண்டலத்தை
எந்தை கொடுக்கின்றேன்
இன்று.

(பக். 81)

என்ற செய்யுளால் அறியலாகும். கொன்றை வேய்ந்தனை இயற்றிய ஔவையார் கம்பன் காலத்தவர் என்று கொள்வார்கள். ஆகவே, பாரத வெண்பா 13-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் இயற்றப் பட்டதெனக் கொள்ளுதலே ஏற்

புடையதெனத் தோன்றுகிறது. தெள்ளாற்றுப்போர் கி. பி. 1231-32-ல் நிகழ்ந்த தென்பர் (தென்னிந்திய சிலாசாசனம், தொகுதி 12, பக். 180).

இது முடிவாயின், நந்திக் கலம்பகம் எப்பொழுது இயற்றப்பட்டது என்ற கேள்வி எழுதல் இயல்பே. நமக்கு அகப்படும் நூற்பிரதியிற் பிற்காலச் செய்யுட்கள் பல இடைச் செருகலாய்ப் புகுந்து விட்டன. இவற்றை நீக்கி விட்டோமாயின், உண்மையான கலம்பகம் மூன்றும் நந்தியின் காலத்தே அவன் மீது பாடப் பெற்ற தெனக் கொள்ளுதலில் தடையில்லை. ஆனால், நந்திக்கலம்பகத்தைத் தனிப்பட நன்கு ஆராய்ந்த பின்னரே திட்டமான ஒரு துணிவுக்கு நாம் வருதல் கூடும். அந்த ஆராய்ச்சி பிறிதோர் அமையத்துச் செய்யத்தக்கதே யன்றி, இங்கே வேண்டாததாம்.

பாரத வெண்பாவில் வரும் செய்யுட்கள் கட்டுரைச் செறிவின்றி யுள்ளன. வெண்பாவிற்குத் தனித்துரிய செப்பலோசை பிறழ்ந்து வரும் இடங்களும் மிகப் பலவாய்க் காணப்படுகின்றன. உதாரணமாக, ஈற்றுச் சீரொழிய ஏனையவை காய்ச் சீரால் அமைந்த வெண்பாக்களைக் கூறலாம்.

மின்பயிலு மாமணிப்பூண்
வேல்வேந்தர் தந்திறையை
முன்பொழுதே யந்தணர்க்கு
முற்றுவித்துப்—பின்பொழுது
நேரிழையாள் தன்னோடு
நேயமுடன் மெய்ச்சூதின்
போரடையத் தானடைந்தான்
புக்கு.

(பக். 72)

என்ற வெண்பாவைக் காண்க. உண்மையில் இதிற் காணும் ஓசை கலிப்பாவிற்குரிய ஓசையாம். பிற்காலத்தார் இங்ஙனம் கலியோசையை வெண்பாவிற்கு ஊட்டிச் செய்யுளை நெகிழச் செய்து வெண்பாவின் ஓசையினிமையைச் சிதைத்து விட்டனர். இதில் வரும் உரைநடைப் பகுதியில் ஒரு சில, பெரும்பாலும் வடமொழி தழுவாது வந்துள்ளன. 'இவ்வகையேத்தி இன்சொற் பலகொடுத்து, எம்பெருமாட்டி, நீர் என் பக்கல் எழுந்தருளியறியாதீர்; இன்று எழுந்தருளிய காரணம் என்? என்று பலபடியாலும் கன்னன் வினவக் கண்டு, விம்மி விம்மி வெய்துயிர்த்து யாது சொன்னாள் குந்தி தேவி' (பக். 90) என்ற பகுதியை நோக்குக. வேறுசில, தமிழும் வடமொழியும் கலந்து இனிமையாய் ஒழுகுகின்றன 'எழின்மணி முடிவேந்தர் இடுதிரை யெல்லாம் முன்பொழுதில் தானம் பண்ணிப் பின்பொழுதில் அபராண்ணிய தரித்திரன் என்னும் பெயரெய்தித் தன் நேரிழையாளோடும் சூது பொருதுகின்ற கன்னன் விவஸ்தையறிந்து யாது செய்தான் ஸ்ரீ வாசுதேவன்' (பக். 72) என்ற பகுதியால் இதனை உணரலாம். வேறு சிலபகுதிகள் வடமொழிச் சொற்கள் நிரம்பியுள்ளன. உரை நடையின் முக்கிய கதி இதுவேயாகும். 'பராஷ்டிரத்து க்ஷத்திரியர் முன் என்னை அர்த்தாதரில் வகுத்துப் பரிபவம் பண்ணின ஸ்ரீ வீஷ்மன் சேனாபத்தியத்துக்குள் நில்லேனென்றும், நின்னையுடைய நான் இப்படிவீரசௌரிய பங்கமாவதோ என்றும்' (பக். 142) என்ற பகுதி இதற்குச் சான்று.

இங்ஙனமாக, செய்யுள் செறிவின்றி நெகிழ்ந்து, உரை நடையும் பலதிறப்பட்டுச் சென்றபோதிலும், பாரத வெண்பா பலவகையிலும் போற்றத் தகுவதாயுள்ளது. கதையைச் சுவைபட அமைத்துக் கூறும் முறை மிகவும் பாராட்டத் தக்கது. உரைப்பகுதியும் கதையில் வாசகர் மனம் ஊன்றி ஈடுபடும்படி இயன்றுள்ளது. 13-ம் நாட்போரை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். இப்பகுதியிலுள்ள ஒரு சில விருத்தங்கள் தெளிந்த நடையில் பொருட் சிறப்பு ஒன்றையே முக்கியமாகக்கொண்டு அமைந்தன. உதாரணமாக,

களிமா ஞுலகுக்கோர்
　காலனே சொல்லீர்
கடல்வண்ணன் தங்கை
　கருவுயிர்த்த தென்பார்
தெளிமாண வாளேந்திச்
　செய்கின்ற போரிற்
சிலையேந்திச் செய்த
　செருவென்ன தென்பார்
ஒளிமா லொடன்றே
　படையின்ற தென்பார்
ஒள்ளிலைவேற் பார்த்தன்சே
　யல்லனே வென்பார்
புளிமாவ தாகுமோ
　தேமாங்கன் றென்பார்
புலிக்குப் பிறந்தது
　எலியாமோ என்பார்.

(பக். 252)

என்ற செய்யுளைக் காணலாம். வாசுதேவன் தூது சென்ற காலத்துத் துரியோதனனது வஞ்சனை கண்டு விசுவரூபம் எடுத்து வளர்ந்ததை வருணிக்கும் பகுதி மிகச் சிறந்த தொன்றாகும்.

அரைகுறையாய் அகப்பட்டுள்ள இந் நூலை வாசிக்கும்போது நூல் முற்றும் கிடையாமற் போய்விட்டதே என்ற ஆராமை நமக்கு மிகுகின்றது.

*

யார் அரசியல் வாதி?

அமெரிக்காவில் பதினொரு வயதுப் பையன் ஒருவனைப் பார்த்து "அரசியல் வாதி என்பவன் யார்?" என்று கேட்டார்கள். பையன் சொன்ன பதில்:

"பணக்காரர்களிடமிருந்து பணத்தையும், ஏழைகளிடமிருந்து ஓட்டுகளையும் வாங்கிக்கொண்டு, 'ஏழைகளிடமிருந்து உங்களைக் காப்பாற்றுகிறேன்' என்று பணக்காரர்களிடமும், 'பணக்காரர்களிடமிருந்து உங்களைக் காப்பாற்றுகிறேன்' என்று ஏழைகளிடமும் சொல்கிறவனே அரசியல் வாதி."

—தி அட்லாண்டா ஜர்னல்

குழந்தையின் சந்தேகம்

கணவனுடன் விவாகரத்து செய்துகொண்ட ஜான்ஸிபாவர் என்ற ஸ்திரீ தன் ஏழு வயதுப் பெண்ணைச் சினிமாவுக்கு அழைத்துக்கொண்டு போயிருந்தாள். அந்த சினிமாப் படத்தில், ஒரு தகப்பன் மகனைப் பார்த்து கல்யாணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்திக் கொண்டே இருந்தான். மேலும், "இவ்வளவு வயதாகியும் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருக்கலாமா?" என்று மகனைப் பார்த்து அங்கலாய்த்தான்.

ஏழு வயதுப் பெண், விவாகரத்து செய்துகொண்ட தன் தாயாரைப் பார்த்து, "அம்மா! நீயும் இவ்வளவு வயதாகியும் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருக்கிறாயே!" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

கட்டுரையாளர் ஒரு பிரசித்திபெற்ற பிரேஞ்சு நாவலாசிரியர். பைரன், ஷெல்லி போன்ற ஆங்கிலக் கவிஞர்களின் சரிதைகளையும் அவர் எழுதி யிருக்கிறார். இன்று அவருக்கு 64 வயது ஆகிறது. குடும்ப வாழ்வில் கணவனுக்கும் மனைவிக்குமிடையே காதலும், அன்பும் தினம்தோறும் வளர்ந்துவர நான்கு யோசனைகள் கூறுகிறார். இந்த அருமையான யோசனைகளை இன்றையக் கணவன்மார்களும், எதிர்காலக் கணவன்மார்களும் நன்கு கவனிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

கணவனும் காதலும்

○

ஆந்திரே மோருவா

நான் ஒரு சிறந்த நாடகாசிரியரைப் பார்த்து, "நல்ல நாடகம் ஒன்றை எழுதுவது கஷ்டமான காரியமா?" என்று கேட்டேன். "கஷ்டமா? இல்லை. அசாத்தியமானது!" என்றார் அவர். என்றாலும் அவர் பல நல்ல நாடகங்களை எழுதித் தானிருக்கிறார். அதே போல, "பரிபூர்ணக் காதலை எய்துவது கஷ்டமா?" என்று கேட்டால் "கஷ்டமா? அசாத்தியமானது" என்று பதிலும் கூறிவிடலாம். என்றாலும் அந்தக் காதலை எய்துவதற்கு முயற்சிகள் நடந்தன; நடக்கின்றன. அப்படி நடப்பதிலும் பயனுண்டு. ஏனெனில், இந்த உலகத்தில் ஆண்-பெண் உறவின் ஆத்ம, சரீரக் கலப்பில்தான் பரிபூர்ண இன்பத்தைக் காண முடியும். என்றாலும் அந்த இன்பம் அபூர்வமாகத்தான் சித்தியடைகிறது. பல மனிதர்களுக்கு உயர்தரக் காதல் என்பதே இன்னதெனத் தெரியாது; காரணம், அதைப் பற்றிய கரிசனையோ கவலையோ அவர்களுக்கு இல்லை. ஒரு பெண் ஒரு ஆடவனை மணந்த பின்னால், புருஷன் அவளுக்குத் தக்கபடி தன் வாழ்வைச் சுதாரித்துக் கொள்ளா விட்டாலும் கூட, அவள் அவனைக் காதலிக்கிறாள் என்று அவர்கள் கருதுகிறார்கள். அது தப்பு. உண்மையான காதல் அவள் உள்ளத்தில் தானாக உந்தப் படாதவரை, ஒருபெண்-அவளாக விரும்பினாலும் கூட—பரிபூரணமாகக் காதலிக்க இயலாது.

ஆண்கள் மனசிலிருத்த வேண்டிய முக்கியமான உண்மை இதுதான். ஆண்களின் கண்ணோட்டத்தைவிட, பெண்களின் கண்ணோட்டத்தில் ஆத்மார்த்தக் காதல் அதிக முக்கியத்துவம் பெறுகிறது என்பதுதான். ஆண்களுக்கு சரீர இச்சை லகுவில் தூண்டப் பெற்று, சரீர திருப்தியும் லகுவில் சித்திக்கப் பெற்றுவிடும். பிரத்தியக்ஷமான புலனுணர்ச்சியை விட, கற்பனுபாவம் ஆண்களிடம் அதிகம் ஏற்படுவதில்லை. பெண்ணின் உணர்ச்சிகளோ, கற்பனு பாவத்தில் தான் பரிபூர்ணமாக ஊசலாடுவன. சூழ்நிலையின் சௌந்தர்யம், காதலனின் சிருங்கார வாசகம் முதலியன எல்லாம் அவளுடையகாதலின் கட்டுக்கோப்புக்கு உரம் அளிப்பன. நாவலி

லும் சினிமாவிலும் வரும் சிருங்கார பாவத்தை அவள் ரசிக்கிறாள்; ஏனெனில் வாழ்விலும் அவள் அம்மாதிரியான சிருங்காரத்தை எதிர்பார்க்கிறாள்; ஆனால் அவளுக்குக் கிட்டுவதோ மிகவும் அற்பம்தான்.

பெண்கள் ஏன் இதயபாவக் காதலுக்கு ஆண்களைவிட அதிகமுக்கியத்துவம் அளிக்கவேண்டும்? ஏனெனில் காதல் என்பது அவள் வாழ்வில் முதுகெலும்பு; ஜீவநாளம்! ஆண்மகனோ கிரியாம்சமான பிறவிதான். டோரதி பார்க்கர் எழுதிய ஒரு கதையில் ஒரு இளம் காப்டன் யுத்தத்திலிருந்து திரும்பி வருகிறான். தன் மனைவி தனக்காக தயார் செய்திருந்த வரவேற்பு ஏற்பாடுகளைப் பாராட்ட மறந்து விட்டான். அவளுக்கோ அதன் சின்னஞ் சிறு அம்சங்கள்கூட முக்கியமானதாய்த்தோன்றின. நீண்ட காலப் பிரிவுக்குப் பின் ஏற்படும் அத்தச் சந்திப்பைச் சகல வகையிலும் புதுமையும் கலா உணர்ச்சியும் கொண்டதாக ஆக்கவேண்டும் என்று அவள் அக்கரை எடுத்திருந்தாள். அவனுக்கோ அந்தப் பெருநாள் யுத்த அலுப்பிலிருந்து சடைவாறும் ஒரு நல்ல நாள் மாதிரியே தோன்றியது. அவனுடைய மனசும் கடல் கடந்து வாழும் தனது பட்டாளத்தின் மீது கவிந்திருந்தது. கர்ம சிரத்தையோடு தன் மனைவி தேர்ந்தெடுத்துக் கட்டிக் கொண்ட ஆடையணிகளைக் கூட அவன் கவனிக்கவில்லை; அவள் அழகாக அடுக்கி வைத்திருந்த பூங்கொத்துக்களைக்கூட அவன் பொருட் படுத்தவில்லை. யுத்தகால அகவிலைக் கிராக்கிக்கு மத்தியிலும் அவள் அவனுக்குப் பிரியமான பண்ட பதார்த்தங்களைச் செய்து படைத்தாள்; அதையும் அவன் பாராட்டவில்லை.

இது ஒரு உள்ளமுருக்கும் கதைதான். அவள் தனது பரிபூரணக் காதலையும் சமர்ப்பிக்க விரும்பினாள்; ஆனால் அசிரத்தையும், உணர்வின்மையும் வளர்த்த சுவரின் மீது தான் அவள் மோதிக் கொண்டாள்.

ஆகவே ஆண்மக்களுக்குரிய முதல் விதி இதுதான்: **காதல் கொண்ட பெண்ணின் கண்ணோட்டத்தில் காதல் ஒன்றுதான் முக்கியமானது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்.** அவளுக்கு அயனசயன போகபாக்கியங்களெல்லாம் கொடுங்கள்; அதற்குப் பிரதியாக, உங்களுக்கு நன்றியறிதலும், பாராட்டும், நட்பும்தான் கிடைக்கும். ஆனால், அது பரிபூர்ணக் காதல் அல்ல. அந்தக் காதலைப் பெறுவதற்கு நீங்கள் உங்களையே அர்ப்பணித்து விட வேண்டும். அவளுடைய காதல் தான் உங்களுக்கு மிகவும் உயர்ந்தது என்ற கருத்தை அவள் புரியும்படி பண்ணுங்கள்.

இன்ப வாழ்வின் பல அம்சங்களில் காதலும் ஒன்றுதான் என்று நீங்கள் கருதினால், நீங்கள் உண்மைக் காதலை உணரவில்லையென்றுதான் அர்த்தம். உணர்ந்திருந்தால், மற்றவை யாவும் இத்தனை பெரியதல்ல என்பதையும் உணர்ந்துகொள்வீர்கள். ஒரு பெண்ணுக்காக, உங்கள் மற்ற கடமைகளைப் புறக்கணித்து விடவேண்டும் என்று நான் சொல்லவில்லை. கௌரவமுள்ள எந்தப்பெண்மகளும் உங்களை அப்படிச் செய்யும்படிச் சொல்ல மாட்டாள். ஆனால், வாழ்வில் ஒவ்வொரு அம்சத்துக்கும் பிரதான காலம் உண்டு. உங்கள் மனைவியை மகிழ்விப்பதும், உங்கள் குடும்ப வாழ்வை மங்கலமாக்குவதும், அதன் மூலம் உங்களுக்குள் பரஸ்பரச் சிந்தனைப் பரிவர்த்தனையும், அமைதியும் நம்பிக்கையும் ஏற்படுத்துவதும் உங்கள் கடமையில் ஒரு பகுதியாக விளங்க வேண்டும். காரியாம்சத்தில் தலைசிறந்தவர்களாக விளங்கும் சில பெரியார்கள் கூட, தம்மை ஒரு பெண்ணுடன் எப்படி இணைத்துக் கொள்வது என்ற விஷயத்தையும் தெரிந்துதான் வைத்திருக்கிறார்கள்.

சிலர் ஆக்ஷேபிக்கலாம்; "பெண்களின் வாழ்வில் காதல் ஒன்றுதான் சிகரமானது என்று நீங்கள் சொல்ல உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?" என்று கேட்கலாம். "காரியாம்சத்தில் கர்மயோகிகளாக விளங்கி ஆண்களைப் போலவே பல துறைகளிலும் வெற்றி கண்ட பெண்மணிகள் இல்லையா?" என்று அவர்கள் கேட்கலாம்.

இருக்கலாம். என்றாலும் பெண்களின் வாழ்க்கையில் நிகழும் காரியாம்சாதிகள் இன்பத்தின் பாதைக்கு வழிகாட்டியாகவோ, இன்பத்தின் துணைப் பகுதியாகவோ தான் விளங்கமுடியும். அதுவே பரிபூரணமான இன்பம் அல்ல. "காரிருளில் ஒரு கன்னிகை" என்ற நாடகத்தைப் படித்திருக்கிறீர்களா? அது ஒரு வெற்றிகரமான பெண்ணின், கதை. அவள் ஒரு பத்திரிகையின் பிரதம ஆசிரியை. காதலற்ற வாழ்வு வாழ்வதில் அவள் பெருமைகூட பட்டுக்கொண்டாள். ஆனால், வாழ்க்கை அது மட்டும் போதாது என்று அறிவுறுத்தியது. அவளுக்கு ஒரு காதலன், ஒரு கணவன் தேவைப் பட்டான்! தொழில் முறையில் வெற்றி கண்ட பெண் தான் அவள்; என்றாலும் வாழ்க்கை காதலும் முக்கியமானது என்று அவளுக்கு அறிவுறுத்திவிட்டது. இந்த உண்மையை உணராத மனிதன், பெண்ணையும் உணர்ந்து கொள்ளமாட்டான்.

இரண்டாவது விதி: **பெண்ணுலகத்தில் உன்னையும் ஒரு பகுதியாக்கிக் கொள்.**

அவர்களுக்கு முக்கியமான விஷயங்களில் நீங்களும் அக்கரை காட்டுங்கள். அவர்களது ஆடையணிகள், வீட்டை மேம்படுத்துவதில் அவர்களுக்குள்ள சிரத்தை, குணாதிசயங்களையும் உணர்ச்சிகளையும் அவர்கள் அலசிப் பார்க்கும் தன்மை முதலியவற்றிலும் நீங்கள் சிரத்தை காட்டுங்கள். இதெல்லாம் சில்லரை விஷயங்கள் என நீங்கள் கருதலாம்! முதலில் இதில் சிரத்தை கொள்வதே சிரமமாகத் தானிருக்கும். ஆனால் நாளடைவில், இந்தச் சிறு காரியங்களின் மூலமாகவே மணவாழ்வின் சுகம் சிருஷ்டிக்கப்பட்டு வருகிறது என்று உணர்வீர்கள்.

வீட்டுக்கு வரும்போது அழகிய பொருள்கள் உங்களைக் குளிர் விக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் முக்கியமற்றதல்ல. அப்படி எதிர்பார்ப்பதானது உங்கள் வாழ்வில் வர்ணஜாலத்தை மின் வெட்டச் செய்யும்.

பெண்களின் ஆடையலங்கார அழகு விஷயத்திலும் நீங்கள் பங்கெடுத்துக் கொள்ளுங்கள். நேரமிருக்கும்போது, அவர்களுடன் கடை கண்ணிகளுக்குப் போய் வாருங்கள். அங்கு உங்கள் ஆலோசனைகளையும் கூறுங்கள். உங்கள் ஆலோசனை மோசமானதாகக் கூட இருக்கலாம். இருந்தாலும் குடும்ப வாழ்க்கைக்கு அவையெல்லாம் இன்றியமையாதவை. உங்கள் மனைவிமாரை எதற்காகவேனும் பாராட்டுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் தாராளமாய் தட்டிக் கொடுத்துப் பாராட்டுங்கள். தான் காதலிக்கும் மனிதனை சின்னஞ் சிறு விஷயங்களில்கூட மகிழ்விக்க வேண்டும் என்பது தான் பெண்களின் குணம். நீங்கள் அதை அலட்சியம் செய்துவிடக் கூடாது; அது அவளுக்கு வேதனை தரும்.

அவளுடைய வாழ்வின் சின்னஞ் சிறு அம்சங்களான குழந்தைப் பருவ அனுபவங்கள், நண்பர்கள், சங்க அலுவல்கள் முதலியவற்றிலும் நீங்கள் சிரத்தை காட்டுங்கள். அவளுக்கு சங்கீதம், சித்திரம், புத்தகம் முதலியனவற்றைப் பிடித்திருந்தால், நீங்களும் அந்தக் கலைகளில் ருசி காண முன் வரவேண்டும். நாளடைவில் உங்களுக்கே அதில் ருசி தட்டிவிடும். காதலுக்கு ஆரம்பத்தில்தான் சில தடைகள் உண்டு; பின்னால் எதுவுமே

கிடையாது. அவளுடைய சகல காரியங்களிலும் நீங்கள் பங்கெடுத்துக் கொண்டால், பரிபூர்ணக் காதல் நிலையை எய்துவதற்கு உங்களுக்குச் சந்தர்ப்பம் லகுவில் கிடைக்கும்.

மூன்ருவது விதி: **சரீராம்சக் காதலில் சுயநலமிகளாக இராதீர்கள்.** சரீர இச்சை ஆண்களைவிட பெண்களுக்கு மிகவும் மெதுவாகத்தான் வெளிப்படத் தொடங்குகின்றது. ஆகவே உங்களுக்குப் பொறுமையும் பெருந்தன்மையும் மிகவும் வேண்டும். சரீராம்சக் காதலில் நீங்கள் அடையும் இன்பத்துக்குச் சரி சமானமாக உங்கள் மனைவியரும் அடைகிருர்களா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். அப்படி இல்லையென்ருல், எங்கோ ஏதோ தவறு நேர்ந்துவிட்டது என உணர்ந்து, அதைத் தெரிந்து கொள்ளவும் நீங்கள் முயலவேண்டும். சரீராம்சக் காதலில் உங்களுக்கு எவ்வளவோ திறமையும் ஞானமும் இருந்தால்கூட, இதயானுபவ முறையில் சரீரக் கலப்பை எய்துவதுதான் சிறந்தது உங்கள் காதல் அறிவைப் பற்றி எப்போதுமே முடிவுகட்டி விடாதீர்கள்; தெரியா விட்டால் தெரிந்து கொள்ளுங்கள். மேலும் பெண்கள் அனைவரும் உணர்ச்சி வடிவங்கள் என்பதையும் ஞாபகத்தில் வைத்திருங்கள். அவர்கள் தங்கள் சரீரத்துக்கு அடிமைகள். மாதவிடாயும் கர்ப்பமும் அவர்களுடைய மனநிலையை முடுக்கி விடுவதுண்டு அந்தக் காலங்களில் பெண்கள் தாமே அறியாத சில உணர்ச்சிகளை அனுபவிக்கிருர்கள். சரீராம்சக் காரணத்தால் ஏற்படும் மனமாறுதல்களை ஒழுக்க சம்பந்தமான காரணங்களோடு அவர்கள் ஒத்துப் பார்க்க முயல்கிருர்கள்.

இதைப்பற்றி எவ்வளவு ஆராய்ந்தாலும் அது உபயோகமற்றதுதான். ஏனெனில் உடற்கூற்றை அறிந்துதான் இதையெல்லாம் சமனப்படுத்த முடியும். அவளுக்கு அன்பும் ஆதரவும் அளித்து அவளது மனச் சலனத்தை மறக்கடிக்க முயலுங்கள். புத்திசாலியான கணவன் எப்போதுமே கோபப்படுவதில்லை. அவன் புயலில் அகப்பட்ட மாலுமிபோல, பாய் மரத்தை குறைத்துக்கட்டி, நல்ல பருவ நிலைக்காகக் காத்து நிற்பான். அவனுக்கு புயல் பிடிக்காது; என்ருலும் கடலை வெறுக்கமாட்டான்.

கடைசியாக, நாலாவது விதி: **காதல் சரசங்கள் முடிந்துவிட்டதென்றும், காதல் நிரந்தர வெற்றியடைந்து விட்டதென்றும் நம்பாதீர்கள்.** வெற்றிகரமான மணவாழ்க்கை என்பது முதலிலேயே முழு உரிமையோடு விலைக்கு வாங்கும் பொருள் அல்ல; அந்த உரிமையுடன் என்றும் நிரந்தரமாக வாழலாம் என்று அர்த்தமும் அல்ல.

அதற்கு மாருக, அது மனத்தின் செயல்; நம்பிக்கையின் செயல். அந்தச் செயல்களையும் தினம் தினம் புதுமை பெறச் செய்யவேண்டும் என்று கருதுங்கள். காதலை எய்திவிட்டதாக என்றும் கருதாதீர்கள். கொஞ்சங்கூடத் தடுமாற்றமற்ற மணவாழ்க்கையில்கூட எப்போதும் ஏதாவது ஒரு இன்பம் கண்டுபிடிக்காமலே எஞ்சி நிற்கிறது.

உபதேசம்

பெண்களை ஏன் உபதேசம் செய்ய விடுவதில்லை தெரியுமா? அவர்கள் குற்றமற்ற போதும், கண்டிப்பார்கள்; விவாதிக்காமலே ஒப்புக் கொள்ளவும் வைத்துவிடுவார்கள்.

—நியூட்டன்

சோகத்தை வெளியிடுவதிலும் நமது நாட்டு மக்களின் சொல்லாட்சி அழுத்தத்தோடுதான் விழுகிறது. இதிலுள்ள பாடல்கள் செட்டி நாட்டில் சேகரித்தவை.

நாட்டுப் பாடல்கள்

அ. அண்ணாமலை

இல்லறத்தை இனிது நடத்தி வருகின்றாள் ஒரு பெண். திடீரென்று அவள் கணவன் இறந்து விடுகிறான். அவள் சோகம் உருவெடுக்கிறது. சொல்கிறாள்.

பொன் அணையும் மேனியிலே
 போர்வையை போட்டீரே
முத்தணையும் மேனியிலே
 முக்காட்டைப் போட்டீரே

இன்னொரு நிகழ்ச்சி. அருமையாக வளர்த்து வந்த செல்வக் குழந்தை இறந்து விடுகிறது.

கட்டிமுத்தே ரத்தினமே
 கைநிறைந்த குஞ்சரமே
வாச்சமுத்தே ரத்தினமே
 மடி நிறைந்த குஞ்சரமே

என்று பெருமைப் படுகிறாள். பெருமைப்பட்டு என்ன செய்வது? அடுத்த அடி வருகிறது துக்கத்தின் சிகரமாக:

கோடித்திரவியமே
 கொடுத்து வையாப் பாக்கியமே
அணையாத் திரவியமே
 அதிட்டமில்லா அச்சரமே
பொன்னே பொருளே
 பொருளிருக்கும் பொட்டகமே
நல்ல பொருளே
 நகையிருக்கும் நாணயமே

என்கிறாள்.

அழகை எழுதியவன்
 ஆயுள் எழுதலையே?
வடிவை எழுதியவன்
 வயது எழுத மாட்டலையே

என்று குறைப்படுகிறாள்.

ஆக்கப் பொருளை நினைந்தாள். அழித்த சக்தி ஞாபகத்திற்கு வருகிறது:

ஈகடிக்கச் சம்மதியோம்
 எமன் வரச் சம்மதித்தோம்
காற்றடிக்க சம்மதியோம்
 காலன்வரச் சம்மதித்தோம்

என்று விதியை நொந்து கொள்கிறாள்.

மலையாளி வைத்தியனை
 மடிவசமாய் கூட்டி வந்தோம்
மலையாளி வைத்தியனும்
 மருந்தறிய மாட்டலையே
சீமை வைத்தியனை
 சீக்கிரமாய்கூட்டி வந்தோம்
சீமை வைத்தியனும்
 சீக்கறிய மாட்டலையோ

என்று தங்களது அலைச்சலை வெளியிடுகிறாள்.

பச்சைக்கிளி வளர்த்தோம்
 பறக்கையிலே தப்பவிட்டோம்
குஞ்சுக் கிளி வளர்த்தோம்
 கூவையிலே தப்பவிட்டோம்

என்றுஅந்த தாயுள்ளம் ஏங்குகிறது.

குழந்தைக்குப் பால் புகட்டுவது மிகவும் கவனமாகச் செய்ய வேண்டிய காரியம். தாய்ப் பாலையோ,புட்டிப் பாலையோ, குழந்தைகளுக்குப் புகட்டும் முறைகளை இங்கே காண்கிறோம். நல்வழியிலிருந்து.

தாய்ப் பால்

○

டோரதி லி. விப்பிள்

பசிக்கும் குழந்தை அழும். தாய் பால் கொடுத்தவுடன், அது திருப்தியாகி உறங்கும். தூக்கத்திற்கு அடுத்தபடியாக, பால் உண்ணுதலே குழந்தையின் முக்கிய தொழில்.

வைத்தியர்களும் மனோதத்துவ ஞானிகளும் குழந்தைக்கு தாயின் பாலேசிறந்ததெனக் கூறுகிறார்கள். தாய்ப்பால் கொடுப்பதில் அனேக சௌகரியங்களும், சிற்சில கஷ்டங்களும் கூட உள்ளன.

சௌகரியங்கள்

இதுதான் இயற்கை கற்பித்த வழி. அதனைப் பின்பற்றினால், சுகம் கிட்டும்.

பால் கொடுக்கையில், தாய் தனது உடல் அமைப்பின் பயனைப் பெறுகிறாள்.

சிரமமும் தொந்தரவும் இல்லை. நள்ளிரவில் சமையல் அறைக்கு எழுந்து செல்லவும் புட்டியைக் கழுவவும் தேவை இல்லை.

தாய்ப் பாலில் கிருமிகள் நுழைய வழியில்லை. அது மிகவும் சுத்தமான பால்.

எல்லாவற்றிலும் முக்கியமான நன்மை குழந்தைக்கும் தாய்க்கும் இடையே ஏற்படும் நல்லுறவேயாகும்.குழந்தையினிடம் தாய்க்கு அன்பு அதிகரிக்கிறது. குழந்தை தாயை முற்றும் நம்புகிறது. அவளையே பற்றிக் கொள்கிறது. இதை விடப் பெண்களின் தாயுள்ளத்திற்குத் திருப்தியளிக்கக் கூடிய அனுபவம் ஒன்றுமில்லை.

கஷ்டங்கள்

தாய், பால் கொடுக்கையில், அவளும் குழந்தையும் ஒரே இடத்தில் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. தாயோ அல்லது குழந்தையோ ஒருவரை விட்டு ஒருவர் வெகு நேரம் பிரிந்து வாழ முடியாது. முதல் மாதத்தில் தாயானவள் வீட்டில் தனது உடல்நலத்தைக் கருதி இருப்பாள். அதற்குப் பின் அது கஷ்டம். அதுவும் அவள் தன் ஜீவனோபாயத்திற்காக ஏதேனும் வேலைக்குப் போக வேண்டியிருந்தால் மிகவும் கஷ்டம்.

தாய் அதிக நேரம் இளைப்பாற வேண்டியதிருக்கும். இரண்டு

மூன்று மணி நேரம் அதிகம் இளைப்பாற வேண்டும். கர்ப்பமாக இருந்த காலத்தை விட இப்போது அதிக நேரம் தூங்கவேண்டும்.

அவளுடைய ஆகாரமும் விசேஷித்ததாக இருக்க வேண்டும். பசுவின் பால் மிகுதியாகக் குடிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் முட்டையும் உருளைக் கிழங்கும் பழங்களும் தானிய வகைகளும் போதியவாறு உண்ண வேண்டும். இவற்றோடுகூட இனிப்பான பல காரங்களும் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் சரீரம் புஷ்டியாவதாகத் தெரிந்தால் அவைகளைச் சாப்பிடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தாய் வேண்டிய அளவு பானம் அருந்துவது முக்கியம். தாகம் எடுக்கும் போதெல்லாம் கண்டிப்பாகத் தண்ணீர் குடிக்க வேண்டும்.

அவள் பச்சை வெங்காயத்தையாகிலும் முட்டைக் கோஸையாகிலும் சாக்கலேட்டையாகிலும் தின்னலாகாது. இவை குழந்தைக்குச் சுகவீனத்தை உண்டாக்கும்.

தான் உபயோகிக்கும் சகல மருந்துகளைக் குறித்தும் அவள் அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். மருந்துகள் பாலோடு சேரக்கூடியவை.

சில வேளைகளில் தாயின் சுகவீனத்தினால் பால் இல்லாதிருக்கையில், புட்டியில் போட்டு ஏதாவது மாற்றுப் பால் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும். தாய்ப் பாலும் புட்டிப்பாலும் மாறி மாறிக் கொடுப்பதும் உண்டு. இது நல்லதல்ல.

மாற்றுப் பால் புகட்டும் போது, சில காரியங்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும்:

முதலாவதாக, எந்தப் பால் புகட்ட வேண்டும் என்று தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இதை வைத்தியரிடம் தெரிந்து கொள்ள வேண்டும். வைத்தியர் கூறும் வண்ணம் செய்யவேண்டும்.

இரண்டாவதாக, அந்தப் பாலைக் கலக்குவதற்கு ஒரு சுத்தமான ஆள் தேவை. புட்டியும் அதனோடு கூட உபயோகிக்கப்படும் மற்றப் பொருட்களும் கொதிக்கும் தண்ணீரினால் கழுவப்பட வேண்டும். நல்ல கவனம் செலுத்தக் கூடிய ஆள் தேவை. அளவுப்படி யாவும் கலக்கப்பட வேண்டும். கவனம் பிசகி, அளவு தவறினால் குழந்தைக்குக் கஷ்டம் ஏற்படும்.

தாயினிடம் பால் இல்லா விட்டால், பசுவின் பாலைக் கொடுக்க வேண்டும். ஆனால் சுத்தமான பசுவின் பாலைக் குழந்தையினால் ஜீரணிக்க இயலாது. ஆகவே அத்துடன் சுத்தமான தண்ணீர் கலக்கப்பட வேண்டும்.

அநேக குழந்தைகளுக்குப் பால் பொடியும் தண்ணீரும் 'கார்ன் ஸிரப்'பும் சேர்த்துப் புட்டிப்பால் கொடுக்கப் படுகிறது. இதுவும் வைத்தியரோடு ஆலோசித்துச் செய்யப் பட வேண்டும்.

குழந்தை வளர்ந்து நல்ல சுகமும் பலனும் அடையும் போது கடைசியில் காணும் அட்டவணையில் கூறப்பட்டுள்ளபடி கொடுக்க வேண்டும். வாரந்தோறும் அளவை அதிகப் படுத்திக்கொள்ளவும்.

இந்த அட்டவணையின் பிரகாரம் கொடுத்து வருகையில், ஏதாகிலும் சங்கடம் ஏற்படுமாயின், வைத்திய ரிடம் கலந்துகொள்ள வேண்டும்.

பால் கலக்கும் போது அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

1. பால் கொடுத்து முடிந்ததும் புட்டியை நன்கு கழுவ வேண்டும். அப்புறம் அதிலே தண்ணீர் நிரப்பி வைக்க வேண்டும்.

2. தினம் ஒரு தடவையாகிலும் புட்டியையும் அதோடு சேர்ந்த பொருள்களையும் கொதி தண்ணீரி னால் கழுவவேண்டும்.

3. பாலில் கலக்குவதற்கு நன்கு கொதித்து ஆறின தண்ணீரையே உபயோகிக்க வேண்டும். அதையும் அளவுப்படியே கலக்க வேண்டும்.

குழந்தை அழுமுன் பால் கொடுக்கலாகாது. அதற்குப் பசிக்குப் போது தான் கொடுக்க வேண்டும். அது தானாகவே பாலைத் தன் வாயினுள் வைக்கட்டும். இருபது நிமிஷங்கள் குடித்த பின் அநேகமாகத் திருப்தியாகி விடும். அதற்குப்பிறகும் குழந்தை அழுமாயின் புட்டியின் துவாரத்தைச் சிறிதாக்கி, அதிக நேரம் குடிக்க வைக்க வேண்டும்.

ஆரம்பத்தில் நான்கு மணி நேரத்திற்கு ஒரு முறை பால் கொடுக்க வேண்டும். சிறந்த நேரங்கள்: காலை 6, 10 மணி; மாலை 2, 6 மணி; இரவு 10, 2 மணி. ஏற்கெனவே சொன்னபடி, குழந்தை அழு முன் பால் கொடுக்கலாகாது. ஆனால் இந்த நேரங்களுக்கு முன் அழுதால் கொடுக்க வேண்டும். பசிக்கும் போது பாலூட்டவும். எப்பொழுது பசிக்கும், எவ்வளவு சாப்பிடவேண்டும் என்ற விஷயம் குழந்தைகளுக்கே நன்ருய்த் தெரியும். பிறந்த குழந்தை சின்னஞ் சிறு பருவத்திலேயே கணக்காய் ஆகாரக் கிரமங்களை நிர்ணயித்துக் கொள்ளுகிறது என்று நாம் உறுதியாகக் கொள்ள லாம்.

அட்டவணை

பால்பொடி அவுன்ஸ்	தண்ணீர் அவுன்ஸ்	கார்ன் ஸிரப்	மொத்தம் அவுன்ஸ்	நாள் ஒன்றுக்கு முறை	முறை ஒன்றுக்கு அவுன்ஸ்
4	12	1	16	6	2 +
6	12	1	18	6	3
7	13	2	20	6	3 +
9	14	2	22	5 அல்லது 6	3 அல்லது 4 +

✲

முதல் அங்கம்

மனிதப் பிராணி கருவாக இருக்கும் போது முதல் முதலில் உற்பத்தியாகும் அவயவங்கள் கண்கள் தான். அப்போது அவை இரண்டு குழிகளைப் போல இருக்கும்

—பி. வி. இன்ஸ்டிடியூட்

சோழ ராஜ சபையில் வித்யா கர்வத்துடன் விளங்கிய புலவர் ஒட்டக் கூத்தர். அவர் எழுதியுள்ள மூன்று உலாக்கள் உலாப் பிரபந்தங்களிலேயே தலை சிறந்தவை. அந்த அருமையான நூல்களை நல்ல முறையில் அறிமுகம் செய்து வைக்கிறார் கட்டுரையாளர்.

மூவர் உலா

○

ல. சண்முகசுந்தரம்

பரம்பரையாக வந்த மூன்று சோழர்கள்மீது தனித்தனியாகப் பாடப்பட்ட மூன்று உலாக்களைக் கொண்ட தொகுதிதான் மூவர் உலா. ஒவ்வொரு உலாவும் கிட்டத் தட்ட எழுநூறு கண்ணிகளை உடைய கலிவெண்பாக்களால் ஆகியது. இந்த மூன்று உலாக்களுக்கும் ஆசிரியர் ஒட்டக்கூத்தரே. ஒட்டக்கூத்தர் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து அதன் பிற்பகுதிவரை வாழ்ந்து வந்தவர். தமிழிலக்கியத்தின் உன்னதமான மறு மலர்ச்சிக்கு இந்தக் காலம்தான் கட்டியம் கூறியது; மறுமலர்ச்சியை ஆரம்பித்தும் வைத்தது.

தமிழில் கவிதைகள் தோன்றிய காலம் கி. மு. நாலாம் நூற்றாண்டு என்றோ அல்லது அதற்கு சிறிது காலம் முற்பட்டு என்றோ வைத்துக் கொள்ளலாம். எப்படி வைத்துக் கொண்டாலும் கி. பி. நாலாம் நூற்றாண்டுவரை அதாவது எழுநூறு வருடகாலமாக சுவைமிக்க தனித் தனிப் பாடல்களே உண்டாயின. அந்தப் பாடல்களின் தொகுப்புக்களைத்தான் எட்டுத் தொகை, பத்துப் பாட்டு என்று இப்பொழுது நாம் சொல்லி வருவது. வாழ்க்கையின் அகம், புறம் முதலியவற்றின் மேலெழுந்தவாரியான சில அம்சங்களை இயல்பான வருணனைகளோடும் கற்பனைகளோடும் இந்தப் பாடல்கள் சித்திரிக்கின்றன.

பெரும்பாலும் இந்தப் பாடல்களில், அரசர்களையோ வள்ளல்களையோதான் பாட்டுடைத் தலைவர்களாக சித்திரிக்கப்பட்டிருக்கும். இந்தச் சங்க காலத்தை இலக்கியத்தின் ஆரம்ப காலம் என்று சொல்லிவிடலாம். இதன் பின்பு பதினெண் கீழ் கணக்கு என்ற தொகுப்பில் பல நீதி நூல்கள் உண்டாயின. அதன் பின்பு தமிழ் நாட்டில் கிராமியமாகவும், பொதுவாகவும் வழங்கி வந்த கதைகளை வைத்துக்கொண்டு பெருங் காப்பியங்கள் தோன்றின. மேரு மந்தர புராணம், சூளாமணி முதலிய காவியங்களும் அடுத்துத் தோன்றின. மேலே குறிப்பிட்ட நூல்கள் தமிழின் படிப்படியான

வளர்ச்சியைத் தெரிவித்தாலும் ஒரு பாஷைக்குரிய பூரண திசையை எட்டவில்லை என்பது தெளிவாகும். அதற்குரிய மறு மலர்ச்சி கி. பி. 8-ம் நூற்றாண்டில் தான் உண்டானது. அடியார்களும், ஆழ்வாராதிகளும் பக்தி மயமான பாசுரங்களைப் பாடினார்கள். முத்தொள்ளாயிரம் தமிழ் மன்னர்களின் கீர்த்தியையும், தமிழ் மக்களின் பண்பாட்டையும் துலாம் பரப் படுத்தியது. சிக்கெடுத்து விட்டதுபோல தமிழுக்கு ஒரு தெளிவும், கம்பீரமும் இதன்மூலம் ஏற்பட்டது. வகுத்துக்கொடுத்த பாதை வழியே தங்குதடையற்றுப் பவனிவர தமிழ் பாஷை தயாராக இருந்தது.

கப்பும் கவருமாகப் பலதுறைகள் அதில் இன்னமும் கிளைக்கவில்லை. கி. பி 10-ம் நூற்றாண்டிலிருந்து பக்தி, சமூகம் முதலிய பல விஷயங்களைப் பொறுத்தும் இலக்கியங்கள் பெருகலாயின. நந்திக் கலம்பகம், கலிங்கத்துப் பரணி, மூவருலா முதலிய இலக்கியங்களை அவைகளின் முன்னோடியாய்ச் சொல்லலாம். உலா என்பது அரசனோ தெய்வமோ (காவிய நாயகன்) தெரு வழியாகப் பவனி வர, அவனைக் கண்டு * ஏழு பருவத்துப் பெண்களும் மோகமுற்று வருவதாகச் சித்திரிக்கின்ற ஒரு நெடும் பாடல். இவற்றில் காவியங்களில் பார்ப்பதுபோன்ற கதா நிகழ்ச்சிகளையோ மனித உணர்ச்சிகளின் குண சித்திரங்களையோ பார்க்க முடியாது. இருந்தாலும், இந்த உலா முதலிய தொண்ணூற்றாறு வகை பிரபந்தங்களையும், சிறு காப்பியம் என்ற பகுப்பிலேயே அமைத்து விட்டார்கள். ஒட்டக் கூத்தர் பாடிய இந்த மூன்று உலாக்களும் முறையே விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன், ராஜ ராஜ சோழன் என்ற மூவருடைய பவனியைப்பற்றியும் விஸ்தரிக்கின்றன.

ஒரு அரசனுடைய பவனியைப் பல பருவத்து மங்கையர்களும் கண்டு மோகிப்பதையே அடிநாதமாக வைத்துக்கொண்டு பின்னப் படுவதால் இலக்கியத்தின் சுரமோ பார்வையோ இதில் பல அல்ல; ஒன்றுதான். இருந்தாலும் குறிப்பிட்ட விஷயத்தை எவ்வளவு துலாம்பரமாகவும் அழகாகவும் விஸ்தரிக்க வேண்டுமோ அவ்வளவையும் இந்த உலாக்கள் செய்து முடிக்கின்றன. கிளை இல்லாத ஒரு தனிச் சுரத்தைக்கொண்டு பூரண உருவத்தோடு கூடிய ஒரு இலக்கியத்தைச் சுத்தமாகவும் நயமாகவும் இப்படி (ஆற்றுப் படை, ஊசல், உலா, தசாங்கம் முதலியன போன்ற சிறு காப்பியங்களாக) படைத்துவிடுகின்ற பெருமை தமிழில்தான் உண்டு. இந்த மூன்று உலாக்களிலும் சொல்லாட்சியும், அதன் தெளிவான நாதம், சுதி முதலிய கம்பீர சாதனைகளும் பூரணமாகக் கையாளப் பட்டுள்ளன. வருணனைகளும் சித்திரிப்புகளும் நுணுக்கமாகவும் அழுத்த

* பெண்களின் ஏழு பருவங்களாவன : பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்பன. ஏழு முதல் முப்பத்து ஐந்துவரை ஒவ்வொரு பருவப் பெண்ணுக்கும் ஒரு குறிப்பிட்ட வயது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாகவும் அமைக்கப்பட்டுள்ளன. மூன்று உலாக்களாக இருப்பதனுல்,அதுவும் ஒரே பரம்பரையில் வந்த அரசர்களைப் பற்றியதாகையால், மூன்றிலும் ஒரேவிதமான வருணனைகளும், போக்குகளும் பல இடங்களில் பேசுகின்றன.

முதலாவது, அரசனுடைய வம்சாவளி விஸ்தரிக்கப்படுகிறது. அதோடு ஒட்டிக் குறிப்பிட்ட மன்னனுடைய பவனி வருணிக்கப்படுகிறது. இரண்டாவது அந்தப் பவனியைக்கண்டு ஏழு பருவத்துப் பெண்களும் தனித்தனியாக வந்து தங்களின் காதல் பரிதாபத்தை தெரிவிக்கிருர்கள். கடைசியில் அதாவது பேரிளம் பெண்ணின் மோக விலாசத்தைச் சொல்லி முடித்த பின்பு,

கூறி வணங்கிடும்
இவ்வளவும் கோதைமேல்
சீறி அனங்கன்
சிலைவளைப்ப—மாறழியக்
குத்தும் கடாக்களிற்றுப்
போந்தான் கொடைச்
சென்னி
உத்தங்க துங்கன் உலா

என்று முடிக்கப்பெறுகின்றது.

ஒவ்வொரு உலாவின் முடிவிலும் காதலின் உயர்தரமான அம்சத்தை, பருவ வேறுபாடு இல்லாமல் பொதுவாக ஒரு வெண்பாவில் பேசப்படுகிறது. உதாரணமாக......

கையும் மலரடியும்
கண்ணும் கனிவாயும்
செய்ய கரிய
திருமாலே—வையம்
அளந்தாய் அகளங்கா
ஆலிலை மேல் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாளிம்
மான்

இந்த வெண்பா உலாவிற்கு ஒரு முத்தாய்ப்பாய் விளங்குகிறது. வருணனைகளிலும், கற்பனைகளிலும் நீண்ட தூரம்சஞ்சாரம்செய்து தவித்து வருகின்ற உள்ளங்களுக்கு இந்த வெண்பாக்கள் தாகசாந்தியாய் விளங்குகின்றன. மூன்று உலாக்களிலும் காவிய நாயகர்களாக வரும் சோழ அரசர்களைத் திருமாலின் அம்சமாகவே சொல்லப்பட்டுள்ளது. ஆனுல் அவர்களுடைய மத ஆசாரங்கள் சைவ சமய ஆசாரங்களாகவே சொல்லப்பட்டுள்ளன. அரசர்களைத் தெய்வ அம்சமென்றும் அதனுல் காவல் தெய்வமாகிய திருமாலை உவமித்துச்சொல்வதே தகுதி என்றும் இருந்த ஒரு வழக்கத்தை இது பிரதிபலிக்கிறது.

"திரு உடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்" என்கின்ற நம்மாழ்வார் வாக்கும்,

அரிமா சுமந்த
அமளி மேலானைத்
திருமா வளவன்
எனத் தேறேன்—திரு
மார்பின்
மானமால் என்றே
தொழுதேன் தொழுதகைப்
போனவா பெய்த
வளை

என்ற பழம் பாடலும் இதை நிரூபிக்கின்றன.

பவனியைச் சித்திரித்துப் போவதும் அதை லாகவமாக வளைத்து முடிப்பதும் கம்பீரமாக விளங்குகிறது. பெண்களின் பருவங்களுக்கு ஏற்ற வருணனைகளும், அவர்களுடைய ஆடல் பாடல் முதலிய நிகழ்ச்சிகளும் படிக்கப் படிக்க இன்பமாக இருக்கின்றன.

பருவத்திற்கேற்ற மனக்கிளர்ச்சியையும், காதல் வேகத்தையும் அற்புதமாக இழைத்துக்கொண்டு வருகின்றார் ஒட்டக் கூத்தர். அரசனுடைய பவனிச் சிறப்பையும் பெண்களின் வரவுகளையும் விஸ்தரித்து அதைச் சுழிவாக முடித்து விடுவது ஒரு தனி அழகு. ஆசையின் உத்வேகத்தில் சிக்கி அலமருகின்ற பெண்களுக்கு முன்னால் கம்பீரமாகப் பட்டத்து யானை வந்து நிற்பதும், தன் முறம் போன்ற காதுகளை விசிறி வீசுவதும் நம் கண் முன்னே தத்ரூபமாக நிற்கின்றன. விஷயத்தை எடுத்து முடிக்கின்ற அளவைகளும், எல்லைகளும் காவியத்தில் வருவதுபோன்று நிர்ணயமாக உள்ளன. மொத்தத்தில் இந்த மூன்று உலாக்களும் தமிழில் உள்ள எல்லா உலாக்களினும் சிறந்தவை. இவற்றிற்கு ஈடு சொல்ல வேண்டுமானால் திருப்பூவண நாதர் உலா ஒன்றைத்தான் சொல்லலாம். விஷயத்தை எவ்வளவு பெருக்க வருணித்துக் கொண்டு போனாலும், அருவருப்புத் தட்டாமல் போகப் போகச் சுகமாக இருப்பது அற்புதமான விஷயம். இதற்கு ஒட்டக் கூத்தர் கையாளுகின்ற சொல்லாட்சியும் அதன் வலுவும் தான் காரணம்.

விக்ரம சோழன் தேவ கடன்களை முடித்துப் பவனி புறப்படுவதை

.........முன்னை
மறைக் கொழுந்தை வெள்ளி
  மலைக் கொழுந்தை மௌலிப்
பிறைக் கொழுந்தை வைத்த
  பிரானை—கறைக்களத்தும்
செக்கர் பனி விசும்பைத்
  தெய்வத் தனிச் சுடரை
முக்கட் கனியை
  முடி வணங்கி—மிக்குயர்ந்த
தானத் துறை முடித்துச்
  சாத்தும் தகைமையன
மானக் கலன்கள்
  வர வருளி.........

என்று சொல்லப் படுகின்றது. பக்தி ரசம் சொற்களில் நெளிந்து குழைகின்றது.

பருவ மங்கையரின் மோகத்தை வரிசைப்படுத்தி வருகின்ற கவிஞர்,

............மண்ணளிக்கும்
ஆதி மனுகுலம் இவ்
  அண்ணலாள் மேம்படுகை
பாதியே அன்றால்
  எனப் பகர்வார்—தாதெடுத்த
கொங்கை பசப்பார் தம்
  கோல்வளை காப்பார் போல்
செங்கை குவிப்பார்
  சிலர் செறிய

என்று, பவனியை முடிக்கிறார். முடித்துவிட்டு,

......அங் கொருத்தி
வந்து பிறந்து
  வளரும் இளந் திங்கள்
கொந்து முகிழாக்
  கொழுங் கொழுந்து—பைந்தழைத்
தோகை கொடா மஞ்ஞை
  சூடுண்டு தோற்றவன் மேல்
வாகை புனைய
  வளர் கரும்பு—கோகிலத்தின்
பிள்ளை இள அன்னப்
  பேடை பிறந் தணிய
கிள்ளை பவளம்
  கிளைத்த கிளை—கள்ளம்
தெரியாப் பெருங் கண்
  சிறு தேறல் தாயர்
பிரியாப் பருவத்துப் பேதை

என்று வருணிக்கிறார் ஒட்டக் கூத்தர். பெண்களின் பருவத்திற்கு ஏற்றபடி எல்லாம் வருணிப்பதும், அவர்களின் குணம், தொழில் முதலிய அம்சங்களை நுணுக்க

மாகத் தொடுவதும், தமிழில் புதுமையான பார்வை; தெளிவானதுங் கூட. ஒட்டக் கூத்தரைப் போல பிற் காலப் புலவர்கள் வருணிக்க முற்பட்டும் அவர்களுக்கு இந்த நகாசு கைவர வில்லை.

சொல்லாட்சியில் அழுத்து மானம் அதிகமாக இருப்பதால் விஷயத்திற்கு வேகமும் வலுவும் உண்டாகி விடுகின்றன. உணர்ச்சியின் ஆழ நீளமான அம்சங்களைத் தீண்டாது ஸ்தூல நிகழ்ச்சிகளின் பருவட்டான பாகங்களையே தொட்டாலும் அவருடைய பதப் பிரயோகத்திலுள்ள உத்வேகம் காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும் துல்லியமாக நம் கண் முன் நிறுத்திவிடுகின்றன.

காதலை உன்னதமாக வருணித்து அதன் போக்கு வரவுகளை அமைதியாகச் சித்திரிப்பது இலேசான காரியமல்ல. இதை ஒட்டக் கூத்தர் மிகத் தெளிவாகவும், லகுவாகவும், முடித்துவிடுகிறார்.

கவிதா சக்தியின் லகான் அவர் கையில் எப்பொழுதும் நழுவாமல் கிடக்கின்றது. உதாரணமாக மங்கைப் பருவத்துப் பெண் ஒருத்தி கனவிலும், நனவிலும் சோழனை எண்ணி உருகிக் கொண்டிருக்கிறாள். அவள் மனசு வெட்ட வெளியாய், பாழுனியமாய்க் கிடக்கிறது. அரசன் பவனி வருவதைக் கேள்விப்பட்டாள்.

வருகின்றான் என்று
மணி யணிகள் யாவும்
தருகென்றாள் வாங்கித்
தரித்தாள்—விரிகோதை
சூடினாள் பைம் பொன்
துகி லுடுத்தாள் சந்தனச் சே(று)
ஆடினாள் தன் பேர்
அணி யணிந்தாள்

பந்தடித்தல், பூப் பறித்தல், நிலா முற்றம் ஏறி யாழ் வாசித்தல் முதலிய ஒவ்வொரு விஷயங்களும் மூவர் உலாவில் சிறப்பாகக் கையாளப் பட்டுள்ளன. 1000-ம் வருடங்களுக்கு முன்பிருந்த தமிழ் நாட்டின் நாசரிகம் ஜனங்களின் வாழ்க்கை முதலியவற்றில் ஒருசில அம்சங்களை இந்நூல்களின் மூலமாக நாம் தெரிந்து கொள்ளலாம்.

பிற் காலத்தில் கிளம்பிய காஞ்சிப் புராணம், பாகவதம், வில்லி பாரதம் போன்ற புராணங்களை துருவித் துருவி ஆராய்ந்தாலும் இந்த உலாக்களில் உள்ளது போன்ற ஒரு வரியைக் கூடப் பார்க்க முடியாது.

கம்பனுடைய மாகாவியம் என்கின்ற தேவ சந்நிதிக்கு சுற்றுப் பிரகாரங்கள்தான் 10-வது நூற்றாண்டின் இந்த மறு மலர்ச்சி இலக்கியங்கள்.

இப்படி அழகான பிரகாரங்கள் அமைக்கும் திருப்பணியில் ஒட்டக் கூத்தரும் தம்மாலியன்ற கைங்கரியத்தை இந்த உலாக்களின் மூலமாகச் செய்து முடித்திருக்கிறார். அவருக்குக் கிட்டியதும் பூரண வெற்றிதான்.

❋

மேதாவி

நான் ஒரு மேதாவியாக இருக்கப் போய்த்தான் எனது நாற்பதாவது வயதுவரை எனக்கென்று ஒரு சைகிள் கூட வாங்க முடிய வில்லை!

—பெர்னார்ட்ஷா



இன்னும் கறக்க வேணும்
எங்கள் பஞ்சம் தீர வேணும்



பாலுக்கும் காவல்



பூனைக்குத் தோழன்



ஆப்கானிய சுதந்திர தினத்தன்று, ஆப்கன் பிரதிநிதி டில்லி ஜிம்கானு
கிளப்பில் அளித்த வரவேற்பில் கவர்னர் ஜெனரல் ஸ்ரீ ராஜகோபாலாச்
சாரியாரும், பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேருவும்

சக்தி வாசகர்களுக்கு மாக்ஸிம் கார்க்கியை அறிமுகம் செய்ய வேண்டியதில்லை. உலகில் நேர்மையாக வாழ முடியாமல், விபசாரம் போவதும், குடித்து விட்டு மயங்கிக் கிடப்பதுமான ஒரு பெண்ணின் வாழ்வு, அவள் வாழ்விலும் சுரந்து கனியும் பிள்ளைப் பாசம், அந்தப் பிள்ளையின் கனவு நினைவுகள்—முதலியவற்றைக் கொண்டு அருமையாகப் புனைந்துள்ள சிறு கதை இது.

தாலாட்டு

○

மாக்ஸிம் கார்க்கி

புழுக்கம் நிறைந்த அந்தக் கோடையிரவில், நகருக்கு வெளியே ஒதுக்குப் புறமாயமைந்த அந்தப் பாதையில் ஒரு காட்சியைக் கண்டேன். சேறு நிறைந்த குட்டையொன்றின் நடுவே காலூன்றி நின்றுகொண்டு, சிறு பிள்ளையைப் போல, சகதியை வாரியடித்துக் கொண்டிருந்தாள் ஒரு பெண். காலூன்றி நின்றவாறே, ஆபாசமான பாட்டொன்றை மூங்கைக் குரலில் பாடிக் கொண்டிருந்தாள்.

அன்று ஊருக்குள் சரியான புயல் அடித்து ஓய்ந்திருந்தது; பலத்த மழை கரிசல் பூமிப்பாதை முழுவதையும் சேறாக்கி விட்டது. அந்தக் குட்டை ஆழம் உள்ளது. அந்தப் பெண் முழங்காலளவு ஆழம் வரையிலும் அதில் இறங்கியிருந்தாள். அவளுடைய குரலை வைத்து நிதானித்தால், அவள் குடித்திருக்கிறாள் என்பதை அறியலாம். ஆட்ட பாட்டத்தால் களைப்புற்று அவள் சாய்ந்தால், அந்தச் சேற்று நீரில் அவள் லகுவில் மூழ்கிவிடக் கூடும்.

நான் எனது நெட்டையான பூட்சுகளை இறுக்கிக் கட்டிக் கொண்டு, குட்டைக்குள் இறங்கி அவளது கரங்களைப் பற்றியிழுத்து கரைக்குக் கொண்டுவந்தேன். முதலில், அவள் திடுக்கிட்டுப்போனாள். வாய்திறவாது, என்னைப் பின் தொடர்ந்தாள். பிறகு திடீரென்று தனது முழு உடம்பையும் ஒரு உலுப்பு உலுப்பி, தனது கையை விடுவித்துக்கொண்டு, என் மார்பில் அறைந்தாள்; கூச்சலிட்டாள்: "உதவிக்கா வாரே!"

மீண்டும் மீண்டும் என்னையும் இழுத்துக் கொண்டு, அந்தக் குட்டைக்கு ஓடினாள்.

"பிசாசுப் பயலே! நான் போக மாட்டேன். என்னை விட்டுவிட்டு நீ போய்விடு. நானும் உன்னை விட்டுப் போகிறேன்... உதவியா...?" அவள் குழறினாள்.

இராக் காவலாளி இருளிலிருந்து தோன்றினான்; எங்களிடமிருந்து ஐந்தடி தூரத்தில் நின்று கொண்டு கடூரமான குரலில் கேட்டான்:

"யாரங்கே லூட்டி யடிப்பது?"

நான் அவனுக்கு அந்தப் பெண் சேற்றில் மூழ்கப் போனதையும், ஆகவே அவளை நான் வெளியே இழுத்ததையும் தெரிவித்தேன். காவலாளி அந்தக் குடிகார ஸ்திரீயை உற்று நோக்கி, காறித் துப்பிவிட்டுச் சொன்னான்:

"மாஷ்காவா? வா வெளியே."

"மாட்டேன்!"

"நான் சொல்கிறேன்— வா வெளியே!"

"நான் வரவே மாட்டேன்"

"சீ சிறுக்கி! உன்னை உதைப் பேன்" என்று காவலாளி அவளைப் பார்த்துச் சொல்லி விட்டு, என்னிடம் திரும்பிச் சொன்னான். "அவள் இங்கே பக்கத்திலேதான் வசிக்கிறாள். அவுரிக் கட்டைகள் பொறுக்கி, ஜீவனம் செய்கிறாள். பேர் மாஷ்கா...ம்... சிகரெட் இருக்கிறதா?"

நாங்கள் சிகரெட்டுகள் பற்ற வைத்தோம். அவள் அந்தச் சேற்றுக்குள் இறங்கிக் கொண்டே அடிக்கடி சத்தமிட்டாள்:

"அதிகாரமா செய்கிறீர்கள்! எனக்கு நான்தான் அதிகாரி. வேண்டுமென்றால், இதிலே நான் குளிக்கக்கூடச் செய்வேன்; அது என் இஷ்டம்."

"வா. உன்னைக் குளிப்பாட்டுகிறேன்" என்று அந்தத் தாடி வளர்த்த தடிக் காவலாளி சொன்னான். "இரவெல்லாம் இப்படித்தான். வீட்டிலே இவளுக்கு ஒரு நொண்டிப் பிள்ளையும் இருக்கிறான்."

"இங்கிருந்து அவள் தொலைவிலா வசிக்கிறாள்?" எனக்குப் பதில் கூறாமலே அவன் சொன்னான்: "அவளைச் சுட்டுத்தள்ள வேண்டும்."

"அவளை வீட்டுக்குக் கொண்டு போகவேண்டும்" என்றேன் நான். அந்தக் காவலாளி சிரிப்பது தாடிக்குள் தெரிந்தது; சிகரெட்டை எனது முகத்துக்கு நேராய் ஏந்திப் பிடித்தவாறே அந்தச் சகதிப் பாதையில் நடந்தான்.

"கூட்டிக்கொண்டுபோ. ஆனால் அவள் மீது படிந்திருக்கும் சகதியைக் கவனி."

அதற்குள் அந்தப் பெண் சேற்றுக் குட்டையில் அமர்ந்து கொண்டு, சகதியைக் வாரியிறைத்துக் கொண்டு, மூங்கைக் குரலில் பயங்கரமாய்க் கத்தினாள்.

"அந்த..ஆழமான...கடலிலே!"

கொழு கொழு வென்றிருக்கும் அந்தச்சேற்று நீரில், பரந்த வானக் கருமையின் ஓரத்திலே நின்று மினுங்கும் பெரிய தாரகை ஒன்று பிரதிபலித்தது. அந்த நீரில் ஒரு சிற்றலை வீச்சினால், பிரதிபிம்பம் மறைந்தொழிந்தது. மீண்டும் நான் அந்தக் குட்டையில் இறங்கி, அவளுடைய கட்கத்தில் கைகொடுத்துத் தூக்கி, என் முழங்காலால் அவளைத் தாங்கி, வேலிப் புறமாகக் கூட்டி வந்தேன். அவளோ கைகளை ஆட்டிக்கொண்டு, இடக்கு பண்ணிக் கத்தினாள்.

"அடிக்கத்தானே செய்வே! அடி. நல்லா அடி. பரவாயில்லெ. சீ, மிருகமே! கொலைகாரா! போரியா! இல்லியா! அடிக்கவா செய்தே!"

அவளை வேலியின்மீது சாத்தி வைத்துஅவளது இருப்பிடத்தைக் கேட்டேன். அவள் தனது வெறியேறிய தலையை உயர்த்தி, கரும் புள்ளி போன்ற கண்களால் கூர்ந்து பார்த்தாள். அவளுடைய மூக்கு உள் வாங்கிப் போயிருப்பதைக்

கண்டேன். வெளியே நீட்டிக் கொண்டிருந்த பாகம், ஏதோ பித்தானைப்போலத் தானிருந்தது. அவளுடைய மேலுதடு கோரைப் பட்டு கோணி ஒதுங்கி யிருந்தது; சிறு பற்கள் வெளியே தெரிந்தன; அந்த வதங்கிய முகத்தில் வெறுக்கத்தக்க புன்னகை நெளிந்தது.

"சரி. நாம் போகலாம்" என்ருள் அவள்.

நாங்கள் இருவரும் அந்த வேலிப் புறமாகவே சென்றோம்; அவளுடைய சட்டையில் படிந்திருந்த சேறெல்லாம் என்னுடைய கால்களில் தெறித்து விழுந்தது.

"வா...என் அன்பே!" அவள் அமைதியோடு முனகினள்.

"உள்ளே கூட்டிச் சென்று உனக்கு வசதி பண்ணுகிறேன்."

அவள் என்னை ஒரு பெரிய இரட்டை மாடிவீட்டு முற்றத்துக்கு கொண்டு சேர்த்தாள். குருடனைப்போல ஜாக்கிரதையுடன் அவள் அங்கு கிடந்த பெட்டிகள், விறகுக் குவியல்கள், வாளிகள், வண்டிகள் முதலியவைகளைக் கடந்து சென்று சுவரையொட்டிய ஒரு பொந்தருகே நின்று என்னை அழைத்தாள்.

"உள்ளே வாருங்கள்"

அந்த பலமற்ற சுவரைப் பிடித்துக்கொண்டு, அந்தப் பெண்ணுடைய இடுப்பையும் சுற்றி வளைத்துப் பிடித்துக் கொண்டு அவளுடைய நிலைகொள்ளாத உடம்பை இழுத்தவாறே சென்றேன்; வழுகும் படிகள் வழியாக இறங்கினேன்; கதவை நெருங்கியதும் நாதாங்கியைத் தடவிப் பார்த்து, திறந்தேன்; திறந்தவுடன் ஒரு கறுப்புக் குழிக்குள் செல்லும் வாசல்நடையில் நான் நிற்பதை உணர்ந்தேன். அதற்குமேல் செல்ல எனக்குத் தைரியம் இல்லை.

"அம்மா! நீதான அம்மா?" இருளிலிருந்து ஒரு மெல்லிய குரல் கேட்டது.

"நான் தாண்டா!"

அழுகல் நாற்றமும், சீலெண்ணெய் வாடையும் என் மூக்கைப் பிடித்தன. ஒரு தீக்குச்சி கிழிக்கப் பட்டது; அந்த வெளிச்சத்தில் ஒரு வெளிறிய குழந்தையின் முகம் தோன்றி மறைந்தது.

"வேறு யாருடா உன்னைத் தேடி வருவார்கள்? நானேதான்" என்று சொல்லிக் கொண்டே என் மீது சாய்ந்தாள்.

இன்னொரு தீக்குச்சி கிழிக்கப் பட்டது; ஏதோ கண்ணுடி கணீரென்றது; முதுமை தட்டிய மெலிந்த கரமொன்று சிறு தகர விளக்கை ஏற்றியது.

"என் கண்ணே!" என்று கூறியவாறே, அவள் சுவர் மூலையில் தடுமாறிச் சாய்ந்தாள்; அங்கு தரையை ஒட்டினற் போல் ஒரு பெரிய படுக்கை கிடந்தது.

விளக்கின் சுடரைக் கூர்ந்து கவனித்தவாறே, அந்தப் பிள்ளை புகை உமிழும் திரியைச் சரியாக்கினன். அவனுடைய முகம் வக்கிர அமைதி கொண்டது; மூக்கு கூரியது; உதடுகள் பெண்களைப் போல் தடித்திருந்தன. மெல்லிய பிரஷ்ஷைக் கொண்டு வரைந் சித்திரம் போலிருந்தது அம் முகம்; இருளும் ஈரமும் நிறைந்த அந்தப் பொந்தில் அப்படிப்பட்ட முகத்தைப் பார்ப்பதே அதிசயந் தான். விளக்கைச் சீர்படுத்திய பின்பு, சுருங்கி வதங்கிப் போன கண்களை என்மீது திருப்பிக் கேட்டான்:

"குடிச்சூட்டு வந்திருக்காளா?"

படுக்கையிலே கிடந்த அவனுடைய தாய் குறட்டைவிட்டாள்; கொர் கொர் என்ற தொறட்டிமூப்பும் வந்து கொண்டிருந்தது.

"அவளுடைய ஆடைகளைக் கழற்ற வேண்டும்" என்றேன் நான். "கழற்றேன்" என்று பதில் கூறிவிட்டு, பையன் கண்களைத் தாழ்த்தினன். அவளது நனைந்த அங்கியை நான் கழற்ற ஆரம்பித்தபோது, அந்தப் பையன் அமைதியாகவும் வியாபாரார்த்தமாகவும் கேட்டான்:

"விளக்கு?—அதை அணைச்சுரட்டுமா?"

"எதற்காக?"

அவன் பதில் கூறவில்லை. நான் அவளை ஒரு மாவு மூடையைப் போல் கையாளும்போது அவனைப் பார்த்தேன். அவன் தரையில் கிடந்த கனத்த பலகைப் பெட்டியின் மேல் உட்கார்ந்திருந்தான்; பெட்டியின் மேல் "ஜாக்கிரதையுடன் கையாளவும். என். ஆர். அண் கோ" என்ற எழுத்துக்கள் காணப்பட்டன. அந்தப் பையனுடைய தோள் அந்தச் சதுர ஜன்னல் பலகையில் சாய்ந்து பதிந்திருந்தது. சுவரையொட்டி சில அரங்குகள்; அவைகளில் சிகரெட்டுப் பெட்டிகளும் தீப் பெட்டிகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பையன் உட்கார்ந்திருந்த பெட்டியை அடுத்து, மஞ்சள் காகிதம் ஒட்டப்பெற்று மேசை மாதிரி விளங்கும் இன்னொரு பெட்டியும் கிடந்தது. தனது தோய்வுற்ற கரங்களை பிடரியில் கோத்தவாறு, இருளடைந்த ஜன்னல் கதவுகளைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

அவளுடைய ஆடை முழுவதையும் களைந்தவுடன், ஈர உடைகளை கணப்பு வெக்கையில் போட்டேன். மூலையிலிருந்த மண் பாண்டத்தில் என் கரங்களை சுத்தி செய்து, கைக்குட்டையால் துடைத்துவிட்டு, அந்தப் பையனை நோக்கிச் சொன்னேன்.

"சரி. அப்போ—நான் வருகிறேன்"

அவன் என்னைப் பார்த்தான்; வாய்க்குள் ஏதோ முனகிவிட்டு, என்னைப் பார்த்துக் கேட்டான்:

"இப்போ—நான் விளக்கை அணைச்சுரட்டுமா?"

"உன் இஷ்டம்"

"அப்போ—நீ வெளியேவா போறே? நீ படுக்கப் போகலியா?" தன்னுடைய சிறு கரத்தினல் தன் தாயைச் சுட்டிக் காட்டி,

"அவளோடே!" என்றான்.

"எதற்காக?" என்று திடுக்கிட்டுப் போய்க் கேட்டேன்.

"அது உனக்கேதான் தெரியுமே" என்று அமைதியுடன் கூறிவிட்டு, கீழே சாய்ந்து கொண்டே சொன்னான்:

"அவங்களெல்லாம் அப்படிச் செய்வாங்க"

நான் என்னைச் சுற்றியுள்ளவைகளைப் பார்த்தேன். வலது புறம் லக்ஷணமற்ற கணப்படுப்பின் அகண்ட வாய்; கணப்பின் மேலே அசுத்தமான பாத்திரங்கள்; மூலையில் பெட்டிக்குப் பின்னல், கிலெண்ணெய் படிந்த கயிறு; அவுரிக் கட்டு; விறகு முண்டுகள்; தீயிடுக்கி; தண்ணீர் வாளிகள் சுமந்து வருவதற் கமைந்த நுகத்தடி. என் காலடியில் அந்த மஞ்சள் உருவம் குறட்டைவிட்டுக் கொண்டிருந்தது.

"நான் ஒன்னோடே கொஞ்ச நேரம் இருக்கலாமா?" என்று கேட்டான் பையன். தலையைத் தாழ்த்தி புருவங்களுக்குக் கீழாக என்னைப் பார்த்தான்: "விடியற வரையில் அவ எங்கிருக்க மாட்டாள்" என்றான்.

"ஆனால்—அவள் எனக்குத் தேவையில்லை" என்றேன் நான்.

அவனுடைய பெட்டி யருகே குந்தி யமர்ந்து கொண்டே அவனது தாயை நான் எப்படிச் சந்தித்தேன் என்ற விஷயத்தை ஹாஸ்யத்துடன் சொல்ல முயன்றேன்: "அவள் சகதியிலே உட்கார்ந்து, கைகளால் அளைந்து கொண்டும் பாடிக் கொண்டும் இருந்தாள்..."

அவன் தனது நெஞ்சுக் கூட்டைச் சொரிந்தவாறே, வதங்கிய புன்னகையுடன் தலையாட்டினான்:

"குடித்திருந்தாள் - அதனால் தான் அப்படி; சுவாதீனமாய் இருந்தால்கூட அப்படித்தான்செய்வாள். ஒரு குழந்தையைப்போல..."

இப்போது நான் அவனுடைய கண்களை நன்றாகப் பார்க்க முடிந்தது. அவனுடைய கண் 'ரெப்பை'கள் நீண்டிருந்தன. கண்ணிமைகளும் அழகாகச் சுருண்ட மயிரிழைகளால் நிறைந்திருந்தன. கண்களுக்குக் கீழே பாரித்திருந்த நீல நிறம், ரத்த மிழந்த தோலின் வெளுப்பைக் கூட்டிக் காட்டியது; சுருக்கம் விழுந்த அகன்ற நெற்றியில், செம்பட்டை மயிர்ச் சுருள் கவிந்து கிடந்தது. ஆர்வமும் அமைதியும் நிறைந்த அந்தக் கண்களின் உணர்ச்சிகள் சொல்லுக் கடங்காதவை; இந்த அமானுஷ்யமான அதிசயப் பார்வையைத் தாங்குவதே கஷ்டமாகத்தானிருந்தது.

"உன் கால்களுக்கு என்ன கேடு விளைந்தது?"

துணிச் சுருள்களுக் கிடையிலிருந்து அந்தச் சூம்பிய காலை வெளியே எடுத்தான்; முட்டைகோஸ் தண்டைப்போலிருந்த அந்தக் காலை தனது கையினால் தூக்கி, பெட்டியோரத்தில் வைத்தான்.

"இரண்டு கால்களும் இப்படித்தான் இருக்கு. பொறந்ததிலேருந்து அப்படித்தான். அதிலே நடக்கவனுவும் கிடையாது; சீவனும் கிடையாது. அப்படியே இருந்தது இருந்தாற் போலத்தான்."

"சரி. அந்தப் பெட்டிகளில் என்ன இருக்கின்றன?"

"காட்சி சாலை!" என்று பதில் கூறிவிட்டு, தனது காலை ஒரு கம்பை எடுப்பதுபோல் எடுத்து, மீண்டும் பழந் துணிகளால் சுற்றிச் சுருட்டி வைத்துவிட்டு, புன்னகை புரிந்தான்:

"அதை யெல்லாம் ஒனக்குக் காட்டட்டுமா? சரியா உட்காரு. இந்த மாதிரி நீ வேறெ எங்கேயும் பாத்திருக்கமாட்டே!' சுட்டிகத்துடன் தனது நீண்ட கைகளை நீட்டி, அரங்கிலிருந்த ஒவ்வொரு பெட்டியையும் எடுத்தெடுத்து என்னிடம் கொடுத்தான்.

"ஜாக்ரதை! திறக்காதே. திறந்தா அதுகள் ஓடிப்போயிரும். மெதுவா காதை வெச்சுக் கேளு. தெரியுதா?"

"ஆமாம் ஏதோ அசைகிறது"

"அஹ்ஹா. அதுக்குள்ளே ஒரு சிலந்தியாக்கும் இருக்கு...பொல்லாதது! அது பேரு டிரமர்; கெட்டிக்காரப் பய!"

அந்தப் பையனின் கண்களில் உயிரும் உணர்வும் கூடிற்று; ஒளியற்ற முகத்தில் புன்னகை சுழிந்

தோடியது. விறுவிறென்று அரங்கி லிருந்து ஒவ்வொரு பெட்டியாக எடுத்து, தனது காதருகே வைத்துப் பார்த்துவிட்டு, என்னிடமும் கொடுத்தான். கொடுக்கும்போதே பேசினான் :

"இதோ இதுக்குள்ளே அனிசிம் என்கிற பாச்சைப் பூச்சி இருக்கு—இது ஒரு சிப்பாய் மாதிரி. இதிலே ஈ இருக்கு. இது இன்ஸ்பெக்டரோடே பொஞ்சாதி. மோசமானது!...படு மோசமானது!...நாள் முச்சூடும் இரைஞ்சுகிட்டே இருக்கும். எல்லாத்தையும் திட்டும் ; அம்மாவோடே தலை மயிரைக் கூட ஒருநாள் புடிச்சி இழுத்திட்டுது. அது ஈ இல்லெ...ஆனா இன்ஸ்பெக்டரோடே பொஞ்சாதி. அதன்வீட்டிலே தெருவெப் பாக்க சன்னலெல்லாம் உண்டு. பாக்கிறதுக்குத்தான் ஈ மாதிரி. இது வந்து...இது கரும்பாச்சை; பெரிசு; தலைவன். ரொம்ப ஒழுங்குள்ளது. ஆனால், குடிகாரமட்டை; மான ஈனங்கிடையாது. முற்றத்திலே போய் நிர்வாணமாத் திரியும்; சடை நாய் மாதிரி 'கறும்கம்'னு இருக்கும். இது ஒரு மூட்டைப் பூச்சி : பேரு நிக்கோடிம் மாமா. முற்றத்திலே தான் பிடிச்சேன். இது ஒரு பரதேசிச் சாமி; தன்னை எல்லாரையும் அப்படி மதிக்கவச்சி, கோயிலுக்கு பணந் திரட்டுது. அம்மா இதை 'ஏமாளி'ன்னு கூப்பிடுவா. அது அவளுடைய காதலன். அம்மாவுக்கு எத்தனையோ காதலர்கள், ஈக் கூட்டம்போல. நீ அவ்வளவையும் எண்ணிட முடியாது. அம்மாவுக்கு மூக்கு இல்லாட்டியுங் கூட, அத்தினி பேர் !''

"அவள் உன்னை அடிக்கமாட்டாளா ?''

"அவளா? உனக்கென்ன பைத்தியமா ? நான் இல்லாமெ அவளாலெ வாழ முடியாது. அவ மனசு ரொம்ப நல்ல மனசு ; ஆனா, குடிக்க மட்டும் செய்யிறா. அன்பும் அருமையும் உள்ளவள்தான் ; ஆனா, சிறுக்கி!—குடிக்க மட்டும் செய்யிறா. அவள்ட்டெ நான் சொல்றேன் : 'முட்டாள்! ஒட்காவை குடிக்கிறதை மட்டும் விட்டுரு ; நீ பணக்காரி ஆயிருவே.' அப்படின்னா அவள் வெறுமனே என்னைப் பாத்து சிரிக்கிறாள். பொம்பிள்ளை—இப்பிடி முட்டாத்தனமா யிருக்கா. ஆனா, நல்ல மனுஷிதான். தூங்கியே பொழுதைக் கழிச்சுருவா ; நீ தான் பாரேன்.'' அவனுடைய கவர்ச்சி நிறைந்த அந்தப் புன்னகையை நீங்கள் கண்டால் உடனே அவன்மீது அனுதாபம் பிறக்கும் ; அவனுக்காக அனுதாபத்துடன் வாய் திறந்து ஓலமிட்டு, ஊர் முழுதும் ஒலிக்கும்படி செய்துவிடுவீர்கள். அவனுடைய அழகமைந்த தலை ஒல்லியான கழுத்தின் மேல், ஒரு அபூர்வ மலர்போல ஆடியது; தாங்க முடியாத சக்தியோடு, அவனுடைய கண்கள் உயிர் பெற்று ஒளி வீசின.

அவனுடைய குழந்தைப் பேச்சில், பொல்லாத வாயளப்பில் மயங்கிக் கேட்டுக் கொண்டிருக்கும் போது சூழ் நிலையையே மறந்துவிட்டேன். மறு கணம் நான் அந்த சிறை வீட்டின் ஜன்னல், வெளிப்புறம் சகதி வாரியடிக்கப் பட்ட சுவர், கணப்பு அடுப்பின் கறுத்த வாய், மூலையிலே கிடந்த அவுரிக் கட்டு, வாசலேஒட்டி கந்தைத் துணியில் வெண்ணெயைப்போல் உருண்டு கிடக்கும் அவனுடைய

தாய்—எல்லாவற்றையும் பார்த்தேன்.

"நல்ல காட்சி சாலே தானு?" என்று பையன் பெருமையுடன் கேட்டான்.

"ரொம்ப நல்லதுதான்"

"ஆனு, எங்கிட்ட வண்ணுத்திப் பூச்சிகளோ, அதன் வர்க்கமோ கிடையாது"

"உன் பெயரென்ன?"

"லெங்கா"

"அடெ. என் பேரே தான்"

"நிசம்மாவா? நீ எந்த மாதிரி மனுஷன்?"

"ஒரு மாதிரியுமில்லே"

"நீ பொய் சொல்றே, ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரிதான். எனக்குத் தெரியும். நீ ரொம்ப நல்லவன்"

"இருக்கலாம்"

"எனக்குத் தெரியுமே—ஆனு நீ ஒரு பயந்தாங்கொள்ளி"

"ஏன் அப்படிச் சொல்கிருய்?"

"எனக்குத் தெரியும்" அவன் சிரித்துக் கொண்டே என்னேப் பார்த்து கண்ணேச் சிமிட்டினுன்.

"ஏன் அப்படி நினேக்கிருய்?"

"சரி என்னுேடெ உட்காரு. நீ ராத்திரி தனியா வீட்டுக்குப் போகப் பயப்படுறே"

"ஆனு. அதோ பொழுது விடிந்துவிட்டதே"

"அப்பன்னு, நீ போகப் போரியா?"

"திரும்பியும் வருவேன்"

அவனுல் என்னே நம்ப முடியவில்லே. தனது அமைதி நிலவும் கண்களே மூடி அவன் சொன்னுன்:

"எதுக்காக?"

"ஏன்? உன்னேப் பார்க்கத் தான். நீ ஒரு ரசமான பேர்வழி. சரி. நான் வரட்டுமா?"

"நிச்சயமா?—எல்லாருந்தான் இங்கே வருவாங்க" பெருமூச்சு விட்டுவிட்டு மீண்டும் சொன்னுன்: "நீ என்னே ஏமாத்தறே"

"சத்தியமாச் சொல்கிறேன். வருவேன்"

"கட்டாயம் வா. என்னேப் பாக்க வா. அம்மாவைப் பாக்கிற துக்கில்ல, அவ எப்படியும் போகட்டும்!—நீயும் நானும் சிநேகிதமா இருப்பமா...ம்...?"

"ரொம்ப சரி"

"சரி. நீ பெரியவனு இருந்தா பரவாயில்லே. உனக்கு வயசு என்னுச்சு?"

"இருபது"

"எனக்கு பதினெண்ணு. எனக்கு சினேகிதர்களே கிடையாது. கட்கா மாத்திரம், அவள் அந்தத் தண்ணீர் வண்டிக்காரனின் மகள். என்னுேடே சேர்ந்தா அவளோடே அம்மா அவளே அடிக்கிரு ...ம்...நீ திருடனு?"

"இல்லே. ஏன் திருடன் என்கிருய்?"

"ஒன் வாய்—பயங்கரமாயிருக்கு. வெறுந் தோல்மயம்!... ஒன் மூக்கு திருடனேப்போலவே இருக்கு. இங்கே இரண்டு திருடர்கள் வருவாங்க. ஒண்ணு, ஸாஷ்கா; முட்டாள்; அசிங்கமானவன். இன்னெண்ணு, வானிச்கா; நல்லவன; நாய்மாதிரி நல்லவன்....ஒங்கிட்டே சின்னப் பெட்டிகள் இருக்கா"

"வரும்போது கொண்டு வருகிறேன்"

"கொண்டு வா. நீ வாரதாக அம்மாவிடம் சொல்லமாட்டேன்"

"ஏன்?"

"மாட்டேன். மனுஷாள் வந்தா அவளுக்கு எப்போதும் சந்தோ

ஷம். நாய்!...மனுஷர்களை யெல்லாம் அவள் காதலிக்கிறாள். சகிக்கலெ! ஆனா, அம்மா ரொம்ப நல்லவள். பதினஞ்சு வயசுலெ என்னைப் பெற்றாள்; என்னை எப்படி 'உண்டானாள்' எங்கிறதே அவளுக்குத் தெரியாதாம்....... நீ எப்ப வருவே?''

"நாளை மாலையில்''

"மாலையிலா? அப்போ அவள் குடிச்சிட்டிருப்பாள்...ம்...நீ திருடன் இல்லென்னா என்ன தொழில் பாக்கிறே?''

"பவேரியன் பீர் விற்கிறேன்''

"அப்படியா? எனக்கு ஒரு பாட்டில் கொண்டு வாயேன். வருவியா?''

"நிச்சயமாய் ஒன்று கொண்டு வருகிறேன். சரி. நான் வரட்டுமா?''

"ஓடு ஓடு. வருவியா நீ!''

"அநேகமாய்!''

அவன் தனது நெடிய கரங்களை என்னிடம் நீட்டினான். நான் அந்த மெல்லிய குளிர்ந்த கரங்களைப் பிடித்து அழுத்திக் குலுக்கி விட்டு, திரும்பிப்பார்க்காமல் குடிகாரனைப் போல் முற்றத்துக்குத் தாவி வந்தேன்.

பொழுது விடிந்துகொண்டிருந்தது. அரைகுறையாய்ப் பாழடைந்துள்ள கட்டிட வரிசைக்கு மேலாக, சுக்கிர வெள்ளி சிலிர்த்து நடுநடுங்கி மறைந்துகொண்டிருந்தது. அந்த வீட்டுச் சுவருக்கடியிலுள்ள அசுத்தமான குழியிலிருந்து, பாதாள அறையின் ஜன்னல் கதவுகள் குடிகாரன் கண்களைப்போல் இருண்ட தூசிபடிந்த சதுரக் கண்களால் என்னை விறைத்து நோக்கின. வாயில் பக்கம் நின்ற வண்டியில் ஒரு சிவத்த விவசாயி தனது பெரிய கால்களை அகல விரித்துப்போட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான். அவனுடைய அடர்ந்த தாடி வானை நோக்கி நிமிர்ந்து நின்றது; அதனிடையில் வெண் பற்கள் மின்வெட்டின. அந்த விவசாயி கண்களை மூடிக்கொண்டு, வெறுப்போடு சிரிப்பதுபோலிருந்தது அந்தக் காட்சி. காயம் பட்டதனால் மயிரிழந்து முதுகிலே வழுக்கை பெற்ற கிழட்டு நாயொன்று எனது காலடியில் மோப்பம் பிடித்துச் சிணுங்கியது; பசியோடு மெதுவாக ஊளையிட்டது. எனது இதயத்தில் அதற்கு அனுதாபம் பிறந்தது. உஷத் காலத்தின் வெளிறிய பழுப்பொளி சேற்றுக் குட்டங்களில் பிரதிபலித்தது; அந்த அசுத்தமான குட்டைகளிலே கண்ட பிரதிபலிப்பு இதய நிறைவைக் கெடுத்து, வேண்டாத அழுகைவீணுக்கி கொண்டிருந்தது.

மறு நாள் நான் எங்கள் வட்டாரத்துப் பையன்களை சில மூட்டைப் பூச்சிகளும் வண்ணாத்திப் பூச்சிகளும் பிடித்துத் தரும்படி வேண்டிக்கொண்டேன். மருந்துக் கடையிலிருந்து சிறு சிறு பெட்டிகள் வாங்கிக்கொண்டேன். பிறகு இரண்டு பாட்டில் க்வாஸ் பீர், சில இஞ்சி ரொட்டிகள், சர்க்கரை மிட்டாய்கள் முதலியவைகளோடு லெங்க்காவைப் பார்க்கச் சென்றேன். அகல மலர்ந்த கண்களோடும், வியப்போடும் லெங்க்கா எனது பரிசுகளை ஏற்றுக்கொண்டான். அந்தக் கண்கள் பகலொளியில் மேலும் வியப்பூட்டின.

"ஓ-ஹோ-ஹோ''என்று அவன் தணிந்த, குழந்தைத் தனம் அற்ற குரலில் கத்தினான்.

"எல்லாத்தையும் கொண்டு வந்தூட்டியே! நீ பணக்காரனா? அது எப்படி — பணக்காரன்னா... ஆனா, நீ ரொம்ப மோசமாய் உடை உடுத்தியிருக்கே! திருடன் இல்லேன்னும் சொல்றே!...இந்தச் சின்னப் பெட்டிகள்! ஓ-ஹோ ஹோ.... என் கையெல்லாம் சுத்தமாயில்லே. அதைத் தொடவே கூசுது. உள்ளே என்ன இருக்கு? ஆஹா, ஒரு மூட்டை! களிம்பேறிய செம்பு மாதிரியில்லெ இருக்கு! சீ மூதி!....இவையெல்லாம் திறந்தா பறந்தோடிப் பொயிருமா?...நல்லா யிருக்கணும்!" மேலும் அவன் உத்ஸாகத்துடன் திடீரெனச் சத்த மிட்டான்:

"அம்மா! கீழேவந்து, என் கையை யெல்லாம் கழுவி விடும்மா. அசடே, இங்கே வந்து இவன் என்ன கொண்டாந் திருக்கான்னு பாரேன். அவன் தான் — நேத்து ராத்திரி உன்னை இழுத்துக் கிட்டு வந்தானே அவனே தான். போலீஸ் காரன் மாதிரி இருந்தானே, அவன் பேரும் லெங்க்கா தானும்."

"நீ அவருக்கு நன்றி கூற வேண்டும்" என்ற தணிந்த குரல் என் பின்னே கேட்டது.

பையன் அதி விரைவாகத் தலையை ஆட்டினான்.

"வந்தனம்! வந்தனம்!"

அந்தப் பொந்துக் குடிலுக்குள் தூசும் தும்பும் மேகம் போல் கனத்து மிதந்தன. ஆகவே, அவற்றின் ஊடே, கலைந்த தலையும், அங்க ஹீனமான முகமும், பல் வரிசையின் ஒளிரேகையும், வேண்டா வெறுப்பாக வளையும் புன்னகையும் கொண்ட அந்தப் பெண்ணின் மங்கிய உருவை அடுப்பருகே கண்டேன்.

"சௌக்கியமா?"

"சௌக்கியமா?" என்று திருப்பிக் கேட்டாள், அவள். அவளுடைய மூங்கைக்குரல் குழம்பியிருந்தாலும் களிப்பும் பெருமிதமும் கொண்டிருந்தது. அவள் ஓரக் கண்ணால் என்னைப் பார்த்து, கேலி செய்வது போலிருந்தது.

லெங்கா என்னை மறந்துவிட்டு, இஞ்சி ரொட்டியைச் சுவைத்துத் தின்றான். பெட்டிகளைப் பதமாய்த் திறக்கும் போது வாய்க்குள் முனகிக் கொண்டான். அவனுடைய கண்ரெப்பைகள் அவன் கன்னங்களில் நிழலாடி, கண்களுக்குக்கீழ் உள்ள வளைவுகளைத் துலாம்பரமாகக் காட்டின. கிழட்டு மனிதனின் மங்கிய முகம் போன்ற சூரியன் புழுதியடைந்த ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான்; மங்கிய ஒளி பையனின் செம்பட்டைத்தலைமயிர் மீது விழுந்தது. பொத்தான் கழற்றப்பட்ட உடம்பில், அவனுடைய ஹிருதயம் மெல்லிய முருங்தெலும்புகளுக்குப் பின்னால் துடிப்பதையும், மார்புக்கண் மேலும் கீழும் அடிப்பதையும் கண்டேன்.

அவனுடைய தாய் அடுப்புப் பக்கமிருந்து இறங்கி, கழுவு பாத்திரத்தில் ஒரு துண்டை நனைத்தெடுத்துக் கொண்டு, லெங்க்காவிடம் வந்து அவனுடைய இடது கரத்தைப் பிடித்தாள்.

"அவன் ஓடிப் போயிட்டான். நிறுத்து அவனை; ஓடிட்டான்!" என்று கத்தினான். தனது முழு உடம்பையும் அந்தப் பெட்டியில் தாழ்த்தி, நாற்றமடிக்கும் துணிகளைக் கொண்டு மூடிப்பிடித்தான். அவனுடைய நொண்டிக் கால்கள் வெளியே தெரிந்தன. அந்தப் பெண்ணும் சிரித்தாள்; அந்தக்

கந்தைகளை அணைத்துக் கொண்டே சத்தமிட்டாள்:

"பிடி அதை!"

அந்த மூட்டையைப் பிடித்து அவள் அவன் உள்ளங்கையில் விட்டாள்; விட்டு தனது சோளக் கொத்து நிறக் கண்களுடன் அதைப் பார்த்தாள். பிறகு என்னைப்பார்த்துப் பழகிய குரலில் சொன்னாள்:

"இதுமாதிரி நிறைய இருக்கிறது"

"அதை நசுக்கிப் பிடாதே" என்று அவள் பிள்ளை எச்சரித்தான்.

"ஒரு தடவை அவள் குடிச்சிட்டு வந்து, என் மிருகக்காட்சி சாலை மேல் உட்காந்து, எத்தனையோ கொன்னு தள்ளிட்டா"

"அதை மறந்துவிடடா கண்ணு!"

"நானு அவைகளையெல்லாம் புதைக்க வேண்டியதாகப் போச்சு"

"ஆனால், பிறகு நான் உனக்கு நிறையப் பிடித்துக் கொடுத்தேனே"

"நீ பிடிச்சதா? நீ நசுக்கிக் கொன்னதெல்லாம் பழகிப் போன தாக்கும், அசடே! செத்ததையெல்லாம் நான் அடுப்பண்டை புதைச்சேன். ஊர்ந்து போய்த்தான் புதைப்பேன். அங்கே ஒரு இடுகாடு இருக்கு...உனக்குத் தெரியுமா, எங்கிட்ட ஒரு சிலந்திப் பூச்சி இருந்தது. மிங்கான்'னு பேரு. அம்மாவோடெ வைப்பாளன் மாதிரி—அவன் தான் ஜெயில்லெ கிடக்கானே. தடியன்! அவனை மாதிரி இருக்கும்—"

"என் அருமைக் கண்ணு!" என்று கூறிக்கொண்டே, முரமுரத்த கறுத்த கை விரல்களால் தன் மகனின் தலை மயிர்ச் சுருள்களைக் கோதினாள்; பிறகு முழங் கையால் என்னை இடித்துக் கொண்டு, களி துலங்கும் கண்களோடு கேட்டாள்:

"என் மகன் அழகாயிருக்கிறான்—இல்லையா? அவன் கண்களைப் பாருங்களேன்"

கையிலிருந்த மூட்டைப் பூச்சியைப் பதம் பார்த்துக் கொண்டிருந்த லெங்கா, "என் கண்ணிலே ஒண்ணெ வேணுமின்னா எடுத்துக்கோ—எனக்குக் கால்மட்டும் கொடு" என்று சிரித்துக் கொண்டே சொன்னான். மேலும், "அம்மா...இதைப் பாரம்மா. கல்லு மாதிரி! எவ்வளவு தண்டியாயிருக்கு! அம்மா—நீ ஏணி செய்து குடுத்தியே, அந்தப் பாதிரியாரை ஞாபகமிருக்கா—அவரு மாதிரி"

"ஞாபகம் இருக்கிறது"

சிரித்துக்கொண்டே அவள் என்னிடம் சொன்னாள்:

"இதோ பாருங்கள். ஒரு தடவை இங்கே, ஒரு தடி மனுஷன், ஒரு பாதிரி வந்தார். வந்து, 'இங்கே பார். நீ ஒரு அவுரி பொறுக்கிறவள் தானே. அப்படியானால், எனக்கொரு நூலேணி செய்து தாயேன்' என்று கேட்டார். நானோ அந்த மாதிரி ஏணிகளைப் பற்றிக் கேள்விப்பட்டது கூட இல்லை. என்னால் முடியாது என்றேன். 'நான் சொல்லித் தருகிறேன்' என்று அவர் சொல்லிவிட்டு, தமது நிலையங்கியைக் கழற்றி, தமது தொந்தியைச் சுற்றியிருந்த நீளக் கயிற்றை உலைத்தெடுத்தார். பிறகு சொல்லிக் கொடுத்தார். நான் அதைத் திரித்துத் திரித்து செய்யும்போதே 'இவருக்கு இது எதற்கு? ஒருவேளை

எங்கேயாவது ஒரு தேவாலயத்தைக் கொள்ளையிடப்போகிறாரா?' என்று நினைத்தேன்.''

அவள் தன் மகனின் புஜங்களை அணைத்துத் தட்டிக் கொடுத்துக் கொண்டே வாய் விட்டு சிரித்தாள்.

"ஓ! எவ்வளவு திருட்டுத்தனம் உள்ளவர்கள், இவர்கள்? சொன்ன வேளையில் அவர் வந்தார். அவரிடம் நான் 'இதை வைத்துக் கொண்டு நீர் திருடினால், எனக்கும் அதற்கும் யாதொரு சம்பந்தமும் இருக்கக்கூடாது' என்றேன். அவர் மெதுவாகச் சிரித்தார். பிறகு, 'இல்லை யில்லை. இது ஒரு சுவர் மீது ஏறுவதற்குதான். நமக்கு முன்னால் ஒரு பெரிய சுவர் இருக்கிறது. நாமோ பாபாத்துமாக்கள். பாபமோ மறுபுறத்தில் இருக்கிறது—ம். புரிந்ததா?' என்றார். எனக்குப் புரிந்துவிட்டது. இரவில் பெண்களிடம் போவதற்கு அது அவருக்குத் தேவைப்பட்டது. இருவரும் சிரித்தோம்'' என்று கூறினாள்.

"உனக்கும் சிரிக்கணும்னு தோணல்லெ?'' என்று பெரிய மனுஷ தோரணையில் கேட்டான் சிறுவன்: "சரி. அடுப்பைப் பத்த வையி'' என்று தாயிடம் சொன்னான்.

"ஆனால்—சர்க்கரை யில்லையேடா''

"போயி வாங்கிட்டு வா''

"பணமும் இல்லையே''

"எல்லாம் நீ மிடாக்குடி குடிக்கிறதாலேதான்......ம்......அவன் கிட்டேயிருந்து வாங்கிக்கோ''

பையன் என் பக்கம் திரும்பினான். கேட்டான்:

"பணம் வச்சிருக்கியா?''

நான் பணம் எடுத்து அந்தப் பெண்ணிடம் கொடுத்தேன். அவள் துள்ளி யெழுந்தாள். அடுப்பின் மீது, களிம்பேறி நெளிந்து சுழிந்து போன அந்தப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, மூக்கால் முனகிக்கொண்டே, நடையைக் கடந்து மறைந்தாள்.

"அம்மா!'' என்று அவள் மகன் கூப்பிட்டான்: "ஜன்னலைக் கழுவி விடு. என்னாலே எதையும் பாக்க முடியலே, ஏ! உதவாக்கரைச் சிறுக்கி! சொல்றதைக் கேளு'' என்று தொடர்ந்து கூறிக்கொண்டே, பூச்சி பொட்டுக்கள் அடங்கிய அந்தப் பெட்டிகளை அரங்கில் பதனமாக அடுக்கினான். நீரூற்றுப் பாய்ந்த சுவர் வெடிப்புகளில் இறக்கப்பட்டிருந்த ஆணிகளில், அந்த அட்டைப்பெட்டிகளை மாட்டினான். "அவுரி பொறுக்கி, அதை அடித்துக் கட்டும்போது, ஒரே புழுதியைக் கிளப்பி விடுவாள், இவள். புழுதினாலே—நீயெல்லாம் மூச்சடைத்துத் திணற வேண்டியதுதான். 'அம்மா! வெளியே கொண்டு விடு; இங்கே எனக்குத் திகை முட்டுது' என்று கத்துவேன். அதுக்கு அவள், 'அமைதியா யிரு. நீயில்லாமெ என்னாலே தனிமையா இருக்கமுடியாது'ன்னு சொல்வாள். என்மேலே அவளுக்கு அத்தனை பிரியம். அவுரி பொறுக்குவா; பாடுவாள். அவளுக்கு ஆயிரம் பாட்டு தெரியுமாக்கும்!''

ஆவல் நிறைந்த கண்களில் ஒளி தெறிக்க, புருவங்களை உயர்த்தி அவன் பாடவும் ஆரம்பித்தான்:

"அன்னத்தூவி மெத்தையில்,
அரினா படுத்துறங்குவாள்...!''

நான் ஒரு கணம் கேட்டுவிட்டுச் சொன்னேன் :

"சே! அசிங்கமான பாட்டல்லவா?"

"அவுங்களுக் கெல்லாம் இது பிடிக்கும்" என்று நிச்சய தீர்க்கமான குரலில்பதில்கொடுத்துவிட்டு திடீரென, "காது கொடுத்துக் கேள். ஏதோ பாட்டுச் சத்தம் வருது. என்னைத் தூக்கிவிடு" என்ருன்.

வற்றிமெலிந்த தோலுக்குள் அடங்கிய கால்களைப் பற்றி அவனைத் தூக்கி நிறுத்தினேன். திறந்து கிடந்த ஜன்னல் வழியாக தலையை வெளியே நீட்டி ஆவலோடு பார்த்தான். வலியிழந்து சூம்பிப்போன கால்கள் சுவரில் சாய்ந்து பலம்தேடின. வெளிமுற்றத்தில் ஒரு குழலிசைக் கருவி எரிச்சல் தரும் வண்ணம் சுரபேதங்களை வெளியே துப்பியது. உற்சாகத்தில் ஒரு குழந்தை உச்சஸ்தாயியில் சத்தமிட்டது; ஒரு நாயும் ஊளையிட்டது. லெங்க்கா அந்தப் பாட்டைக் கேட்டுக் கொண்டே, தனது வாய்க்குள் அதே இசையை முனகிக்கொண்டான்.

அந்தப் பொந்துக் குடிலுக்குள் மிதந்த தூசி படிந்து தெளிவுண்டாயிற்று. அவனுடைய தாயின் படுக்கைக்கு மேலாக ஒரு பாடாவதிக் கடிகாரம் தொங்கியது; ஒரு செப்புக் காசு அளவுள்ள அதன் பெண்டுலம் மெதுவாக அசைந்தாடியது. கணப்பருகே இருந்த பண்ட பாத்திரங்கள் அழுக்கடைந்திருந்தன. தூசும் தும்பும் அவை மீதும், மூலையிலே நூலாம்படைக் கூடு கட்டிவாழும் சிலந்தி ஊஞ்சல்களிலும் படிந்தன. லெங்க்காவின் வீடு ஒரு குப்பைக் கிடங்கு மாதிரி இருந்தது; வறுமையின் அவலக்ஷணம் அந்தவீட்டில் எங்கணும் நிறைந்து, புலனை உறுத்திற்று.

பாத்திரம் சூடேறிக் கொதித்து இரைந்தது; அதே வேளை "போ வெளியே" என்ற கடூரமான குரல் கேட்டது;இசை திடீரெனநின்றது.

"என்னை உட்கார வையி. அவுங்க அவனை விரட்டிட்டாங்க" என்று பெருமூச்சுடன் சொன்ருன் லெங்க்கா.

நான் அவனைப் பெட்டிமீது உட்காரவைத்தேன்; அவன் தனது நெஞ்சுக்கூட்டைக் கைகளால் தடவிக் கொடுத்துக் கொண்டே இருந்தான்.

"என் நெஞ்சு வலிக்குது. நல்ல காற்றை ரொம்ப நேரம் மூச்செடுத்தாலே எனக்குப் புடிக்காது. ம், சரி. நீ பேய் பிசாசுகளைப் பாத்திருக்கியா?—"

"இல்லே"

"நானும் இல்லே. ராத்திரி அடுப்பையே பாத்துக் கிட்டிருப்பேன். ஏதாச்சும் தலை காட்டுதான்னு— ஆனா அது வராது. இடு காட்டிலேயெல்லாம் பிசாசு உண்டில்ல—?"

"உனக்கு எதற்கு அந்தக் கவலை?"

"வேணும், அது கேட்கவே ரசமாயிருக்கு, அதிலே ஒண்ணே ஒண்ணு அன்பு ஏற்பட்டு, நல்லதா மாறிவிட்டா? தண்ணீர் வண்டிக்காரன் மகள் கட்கா ஒரு குட்டிப் பிசாசைப் பாத்தாளாம். உடனே பயந்துட்டா, நான்—? நான் இப்படிப் பட்டதையெல்லாம் கண்டு பயப்பட மாட்டேன்."

அவன் தனது கால்களைத் துணிக்கந்தையில் சுற்றிக் கொண்டு மேலும் சொல்லிக் கொண்டே போனான்: "எனக்குப் பயங்கர

மான சொப்பனங்கள் கூடப் புடிக் கும். நிசம்மா! ஒரு தடவை ஒரு மரம் தலை கீழாக வளருத மாதிரி கண்டேன். இலை யெல்லாம் தரையிலே—வேரெல்லாம் ஆகாசத்திலே! நான் வேர்த்து விறு விறுத்து பயந்து எழுந்தேன். ஒரு தடவை அம்மாவையே பாத்தேன். அவள் அம்மணமாகக் கிடந்தா. ஒரு நாய் அவள் வயித்தைக் கடிச்சிக் குதைஞ்சிது. ஒரு கடி கடிக்கும்; உடனே அதைத் துப்பும்; கடிக்கும்; துப்பும். இப்படி—ஒரு தடவை எங்க வீடு கிடு கிடென்னு ஆடிச்சி; உடனே தெரு வழியே ஓட ஆரம்பித்தது. கதவு ஜன்னலெல்லாம் பட படன்னு அடிச்சிது; ஓடற வீட்டைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் பொஞ்சாதியோடெ பூனைக் குட்டி ஓடியாந்துது!''

அவன் தனது முதுகை வளைத்தான்; வளைத்து ஒரு சர்க்கரை மிட்டாய் எடுத்து, அதன் மீது சுற்றியிருந்த காகிதத்தை எடுத்து, சரி பண்ணி, ஜன்னல் சட்டத்தில் வைத்தான்.

"நானு இந்தப் பேப்பரை யெல்லாம் வச்சிக்கிட்டு, அழகா ஒண்ணு செஞ்சி பார்ப்பேன், இல்லேன்னு—கட்காவுக்குக் குடுத்திருவேன். கண்ணாடித் துண்டு, ஓட்டுச் சில்லு, காகிதம்—இது மாதிரிச் சாமான் எல்லாம் அவளுக்குப் புடிக்கும். கேளு—ம்...ஒரு விட்டில் பாச்சையை நல்லா உணவு குடுத்து வளர்த்தா, அது ஒரு குதிரை மாதிரி வளர்ந்திருமா?''

அவன் குரலே அவன் அப்படி நம்புகிறான் என்பதைத் தெரிவித்தது. ஆகவே நானும் சொன்னேன்:

"நீ நல்ல ஊட்டம் கொடுத்து வளர்த்தால், கட்டாயம் வளரும்!''

"வளருமில்லா! ஆனா, அம்மா அப்படிச் சொன்னா என்னைக் கேலி பண்ணிச் சிரிக்கிறா'' என்று உத்ஸாகத்தோடு சொன்னான்.

அவன் ஒரு ஆபாசமான வார்த்தையால் அவளைத் திட்டினான்.

"அவள் ஒரு முட்டாள். ஒரு பூனையை மட்டும் அப்படி உணவு குடுத்து வளர்த்தா, அது ரொம்ப சீக்கிரத்திலே குதிரை மாதிரி வளர்ந்துடாது?''

"ஆமாம். வளரும்!''

"ஆனா, எங்கிட்டெ அவ்வளவுக்கு உணவு இல்லே! அதுக்கு நெறைய வேணுமே!'' என்று கூறிவிட்டு, தனது கையை நெஞ்சோடு வைத்து தலையாட்டினான்.

"ஈயெல்லாம் நாய்மாதிரி வளர்ந்துரும்! விட்டில் பாச்சையெல்லாம் செங்கல்மாதிரி வளர்ந்துரும்! அதுமட்டும் ஒரு குதிரை அளவு வளர்ந்துட்டா, அதுக்கு ரொம்பப் பலமாயிருக்கு மில்லெ''

"ஆனால், அதற்கெல்லாம் மீசை இருக்கிறதே!''

"இருந்தா ஒண்ணும் குத்தமில்லே. மீசை கடிவாளம்மாதிரி இருக்கும். ஹை—லகான்!—சிலந்தி எப்படி வளரும்? சிலந்தி ஒரு பூனைக்குட்டி தண்டி வளர்ந்துட்டா, பாக்கப் பயமாயிருக்கு மில்லே. எனக்குமட்டும் கால்கள் இருந்தா!—வியாபாரம் பண்ணுவேன். அம்மாவுக்கு பச்சை வயல்களுக்கு மத்தியிலே ஒரு வீடு வாங்குவேன். நீ எப்பவாச்சும் பச்சை வயல்லே இருந்திருக்கியா?''

"இருந்திருக்கிறேன்''

"அதைப்பத்திச் சொல்லேன்-சொல்லுவியா?"

நான் அவனுக்கு பசும் புல் வெளிகளைப் பற்றியும், வயற்புறங்களைப் பற்றியும் சொன்னேன். குறுக்கே விழுந்து பேசாமல் அவன் கேட்டுக்கொண் டிருந்தான். கண்ணிமைகள் கண்களின் மேல் மூடிப்பதிய, தூங்கிவழியும் முகம் போல் வாய் மெதுவாகத் திறந்திருக்க அவன் கேட்டுக்கொண் டிருந்தான். இதைப் பார்த்து, நான் அமைதியுடன் கூறிக்கொண் டிருந்தேன். அவனுடைய தாய் கொதியேறிய சட்டியைக் கையில் தூக்கிக்கொண்டும், மறு கையில் ஒரு காகிதப் பொட்டலத்தை வைத்துக்கொண்டும், மார்பிடுக்கில் ஒரு ஓட்கா பாட்டிலை வைத்துக் கொண்டு. உள்ளே வந்தாள்.

"நான் வந்துவிட்டேன்"

"எனக்குப் புடிச்சிருக்கு!" என்று கூறிக்கொண்டே பையன் கண்களை அகலத் திறந்தான்.

"வெறும் இடம்—பூவையும் புல்லையுந் தவிர......"

"அம்மா! ஒரு வண்டி அமர்த்திக்கிட்டு வந்து, என்னை ஏன் வயல் புறத்துக்குக் கூட்டிக்கிட்டுப் போகமாட்டேங்கிறே? நான் சொல்றதுதான் மிச்சம்; அவைகளைப் பார்த்தாப்போலேதான். அம்மா!—ஏ! பொட்டை நாயே!-" சோகமும் குத்தலும் நிறைந்த குரலில் சொன்னான்.

அவன் தாய் அவனை அன்போடு கண்டித்தாள்:

"சும்மா திட்டாதே. நீ திட்டக் கூடாது. நீ இன்னும் சின்னவனுத்தான்—"

"திட்டக் கூடாதா? எல்லாம் உன் நன்மைக்குத்தான். நீ பாட்டுக்கு நாய் மாதிரி சுத்தறே. நீ அதிருஷ்டசாலி!" என்று கூறிவிட்டு என்னிடம் திரும்பி, "கடவுள் தானே, இந்த வயலையெல்லாம் படைக்கார்?" என்று கேட்டார்.

"நிச்சயமாய்!"

"எதுக்காக?"

"ஜனங்களெல்லாம் ஆனந்தமாய்ச் சுற்றிவருவதற்குத்தான்"

"பச்சை வயல்கள்!" என்று பெரு மூச்சோடும் பெருமிதத்தோடும் சொன்னான்: "நான் என்னுடைய காட்சி சாலையை அங்கே கொண்டு போயி, அவைகளையெல்லாம் திறந்து விடுவேன். ஓடுங்கடா, பயல்களா? என்பேன்-ம்-கேளு: கடவுளை எங்கே படைக்கிறுங்க?—ஏழையின் வீட்டிலா?"

அவனுடைய தாய் கூச்சலிட்டுக் கொண்டே ஒரேடியாய்ச் சிரித்து ஊளையிட்டாள்; படுக்கையில் விழுந்துச் சத்தமிட்டாள்:

"அட கடவுளே! என் அருமைக்கண்ணு!—கடவுளைப் படைப்பவர்களா?...விலா வெடிக்கும் ஹாஸ்யமடா!— இவன்தான் கெட்டிக்காரன்"

லெங்கா அவளைச் சிரித்தவறே பார்த்தான். ஆபாசமான வார்த்தைகளில் மெதுவாகத் திட்டினன்.

"அவள் ஒரு குழந்தை மாதிரி. சிரிக்கிறதுன்னு போதும்!" அவன் மீண்டும் அந்த அசிங்கமான பாஷையைச் சொன்னன்.

"சிரிக்கட்டும். நீ அதைக் கவனியாதே" என்றேன் நான்.

"நானு—அதை நான் கவனிக்கலே. ஜன்னலைக் கழுவாம இருக்கப் போயித்தான் அவள் மேலே கோவங் கோவமாய் வருது.

ஜன்னலைத் துடைத்துவையின்னு நானும் கேட்டுக் கேட்டுத்தான் பாக்கேன். கடவுளின் ஒளியையே நான் காணமுடியலே. அவளானு, மறந்துக்கிட்டே இருக்கா'' என்றான் பையன்.

அவள் அவ்வப்போது என்னைப் பார்த்து தனது நீலக் கண்களைச் சிமிட்டிக்கொண்டும், டீ பாத்திரங்களைக் கழுவிக் கொண்டும் சொன்னாள் :

“நானும் பிரியமுள்ளவள் தானே. இவன் மட்டும் இல்லாவிட்டால், நான் எங்கேனும் எப்போதோ முழுகி இறந்திருப்பேன், தூக்கேனும் போட்டிருப்பேன்''

சொல்லிவிட்டு அவள் புன்னகை புரிந்தாள்.

லெங்க்கா என்னைப்பார்த்துத் திடீரெனக் கேட்டான் :

“நீ ஒரு முட்டாளா?''

“எனக்குத் தெரியாது, ஏன்?''

“இல்லே—அம்மா நீ ஒரு முட்டாள்னு சொல்லுதா''

“நான் எதற்குச் சொல்லப் போகிறேன்?'' என்று அவள் திகிலடையாமல் பதில் கூறிவிட்டு, “அவர் ஒரு குடிகாரியைத் தெருவிலிருந்து கொண்டுவந்து, படுக்கையிலே போட்டு விட்டு, வெளியே போய் விடுகிறார்! அதைத்தான் சொன்னேன். வேறு ஒன்றும் நான் குறிக்கவில்லே. அதை நீ என் மேலேயே திருப்புகிறாயா— சின்னப் பயலே!'' என்று மேலும் தொடர்ந்தாள்.

அவளும் ஒரு குழந்தையைப் போலத்தான் பேசினாள். அவளுடைய பேச்சு பருவம் எய்தி வரும் இளம் பெண்ணின் பாணியில் இருந்தது. வடுப்பட்டு மூளியான மூக்கும், கோணிய வாயும், இடை விழுந்த பல்வரிசையும் சேர்ந்து, வாலேப் பருவத்தின் புனிதத்துவம் பெற்ற அவள் கண்களையும்கூட பயங்கரமாகக் காட்டின. பேய்க் கனவு கண்டு பதறிய பான்மை போல, அவள் முகம் தென்பட்டாலும் அதிலும் ஒரு குதூகலம் தென்பட்டது.

“சரி. நாம் டீ சாப்பிடுவோம்'' என்று அமைதியுடன் சொன்னாள் அவள். லெங்க்காவுக்குப் பக்கத்திலுள்ள பெட்டியின் மேல் டீ பாத்திரம் இருந்தது. கீறல் விழுந்த இடைவழியே வரும் நீராவிப்புகை அவன் தோளில் பாய்ந்தது. அவன் தனது சின்னக் கையை அதற்கு எதிராக ஏந்தி, உள்ளங்கை ஈரமானவுடன் தலையில் துடைத்துக் கொண்டு, தனது கண்களை ஏறச் சொருகுவான்.

“நான் பெரியவனான பின் அம்மா எனக்கு ஒரு வண்டி செய்து தருவா. அதிலே நான் இருந்து, தெரு வழியே ஊர்ந்து சென்று பிச்சை கேட்பேன். வேண்டுமட்டும் ஜனங்கள் தந்தப்புறம் நான் பச்சை வயல்களின் பக்கம் போவேன்'' என்றான் சிறுவன்.

“ஹோஹோ!'' என்று பெருமூச் செறிந்துவிட்டு தாய் வாய் விட்டுச் சிரித்தாள் : “என் கண்ணுவுக்கு ஊரெல்லாம் சொர்க்கம் மாதிரிதான்! ஆனல், நாடு முழுதும் என்ன காண்கிறாய்?—முகாம்கள்! மிருகத்தனம் படைத்த சிப்பாய்கள்! குடிகாரக் குடியானவர்கள் !—''

“நீ பொய் சொல்றே'' என்று லெங்க்கா முகத்தைச் சுருக்கிச் சொன்னான் : “இவனைக் கேளு— ஊர்ப்புறமெல்லாம் எப்படி இருக்

குன்னு—இவன் அதைப் பாத்திருக்கான்.''

"அப்படியானல் நான்—நான் மட்டும் பார்க்கவில்லையா?''

"ஆமாமா, குடிச்சுக்கிட்டுக் கிடக்கிறப்போ!''

அவர்கள் இருவரும் சிறு குழந்தைகளைப்போல உற்சாகத்துடனும் தர்க்க ரீதியாகவும் வாதித்தார்கள். அச்சமயம் மாலை வெயில் வெளி முற்றத்தில் விழுந்தது. புறு நிறங் கொண்ட கனத்த மேகம் செக்கர்வானில் நிலைத்துத் தொங்கியது. பொந்துக் குடிலில் இருள் புகுந்து கொண்டிருந்தது.

பையன் ஒரு கப் டீ குடித்தான்; வியர்த்தது. என்னையும் தன் தாயையும் பார்த்துச் சொன்னன்:

"நான் சாப்பிட்டாச்சு, நான் குடிச்சாச்சு, இப்போ—எனக்குத் தூக்கமா வருது''

"சரி, தூங்கப் போ" என்று சொன்னுள் தாய்.

"ம்....அவன்—அவன் போயிருவான்—நீ போவப்போறியா?''

"கவலைப்படாதே, அவரைப் போகாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறிக்கொண்டே அவள் தன் முழங்கையால் என்னை இடித்தாள்.

"நீ போக வேண்டாம்'' என்று வேண்டியவாறே கண்களை மூடி பெட்டிக்குள் சாய்ந்தான். திடீரென்று தலையை உயர்த்தித் தன் தாயிடம் கண்டிப்பான குரலில் சொன்னுன்:

"இவனை ஏன் நீ கலியாணம் பண்ணிக்கக் கூடாது? கலியாணம் பண்ணிக்கிட்டு, மத்த பொம்பளைகளைப் போல நீயும் ஏன் இருக்கக் கூடாது? எல்லா மாதிரி ஜனங்கள்கிட்டேயும் ஏன் பழகுதே? அவங்க உன்னை அடிக்கத்தானே செய்தாங்க. ஆனு, இவன்—இவன் ரொம்ப நல்லவன்''

"உஷ். உறங்கு" என்று மெதுவாகக் கூறிவிட்டு, அவள் தன் கையிலிருந்த டீ கப்பில் தனது முகத்தைக் கவிழ்த்தாள்.

"இவன் பணக்காரன்!''

ஒரு கணம் அவள் அமைதியாயிருந்தவாறே, கோப்பையிலிருந்த டீயைத் தனது உதடுகளால் உறிஞ்சினுள். பிறகு ரொம்பப் பழகிப் போனவள்மாதிரி என்னைத் திரும்பிப் பார்த்தாள்.

"இப்படித்தான் நானும் அவனும்—நாங்கள் இருவர்மட்டும்—வாழ்கிறோம். அக்கம் பக்கத்தில் என்னை ஒழுங்குமுறையற்றவள் என்று தூற்றுகிறார்கள். ஆனல், நான் யார் முன்னும் வெட்கப்படுவதில்லை. நான் எவ்வளவு அவலக்ஷண மானவள்—இருந்தாலும், நான் எதற்கு நல்லவள் என்றுதான் ஒவ்வொருத்தரும் பார்க்கிறார்கள். ஆம். என் மகன் தூங்குகிறான். எனக்கு இவன் நல்ல பிள்ளைதானே!—ம்''

"ஆமாம். ஆமாம்''

"ஆனல், நான் அவனைச் சரியாகக் கவனிக்க முடியவில்லை. அவனுடைய மூளையைத்தான் பாருங்களேன்!''

"ஆமாம், ரொம்பக் கெட்டிக்காரன்தான்''

"வாஸ்தவம். அவன் தந்தை ஒரு பெரிய மனுஷர்; கிழவர். அவரை நீங்கள் என்ன சொல்லுவீர்கள்?—அவர்களுக்கு பல ஆபீஸ்களும் உண்டு. அப்பா! எப்போதும் பேப்பர்களோடுதான் மாரடிப்பு!''

"என்ன சொல்கிருய்?— அவர் ஒரு பிரமுகர் என்கிருயா?"

"ஆமாம். அவர் அன்பானவர்; வயதானவர். ரொம்ப அன்புடைய வர். அவர் என்னைக் காதலித்தார். நான் அவர் வீட்டில் வேலைக்காரியா யிருந்தேன்."

"பிறகு அவர் திடீரென்று இறந்துபோய்விட்டார். அப்போது இரா வேளை. அவர் தரையில் சாய்ந்து உயிர்விட்டவுடனேயே நான் அங்கிருந்து வந்துவிட் டேன். ம்... நீங்கள் 'க்வாஸ்' பீர் விற்கிறீர்களா?"

"ஆமாம்"

"சொந்த வியாபாரமா?"

"இல்லை, இன்னொருத்தர் வியா பாரம். நான் வேலை செய்கிறேன்."

அவள் என்னை நெருங்கி வந் தாள்.

"ஐயோ—என்னைப் பார்த்து முகத்தைத் திருப்ப வேண்டாம். அந்த வாடையே இனி அடிக்காது. தெருவிலுள்ள யாரையும் கேட்டுப் பாருங்கள். அவர்களுக்குத் தெரி யும்" என்ருள்.

"நான் ஒன்றும் முகத்தைத் திருப்பவில்லையே!"

வேலை செய்து மரத்துத் தோய்ந்து போய், நகம் தேய்ந்த விரல்களை என் மடியில் போட்டுக் கொண்டே அவள் சொன்ஞள்:

"லெங்க்காவின் சார்பில் உங் களுக்கு நான் நன்றி கூறவேண் டும். அவனுக்கு இன்று இன்பப் பொழுதாகக் கழிந்தது. எல்லாம் உங்களால்தான்."

"சரி நான் போக வேண்டும்" என்றேன்.

"எங்கே?" என்று ஆச்சரியத் துடன் கேட்டாள்.

"வேலை இருக்கிறது."

"இருங்களேன்"

"இல்லை. முடியாது."

அவள் மகனைப் பார்த்தாள்; ஜன்னலைப் பார்த்தாள். வானைப் பார்த்தாள். பிறகு மெதுவாகச் சென்ருள்; "தங்குங்கள். நான் எனது ஜாடியைக் கைக் குட்டை யால் மூடிவிடுகிறேன். என் மகன் சார்பில் உங்களுக்கு நான் வந்த னம் கூற வேண்டுமல்லவா?"

அவள் ஆணித்தரமாக, அன் பாக இதய நெகிழ்ச்சியோடு பேசி ஞள். அவளுடைய கண்கள், பயங்கர முகத்தில் அமைந்த பச்சி ளம் கண்கள் புன்னகையோடு பிர காசித்தன. பிச்சைக்காரியின் புன் னகையல்ல; நன்றியறிதலை நல்ல வழியில் காட்டும் செல்வந்தனின் புன்னகை அது.

"அம்மா" என்று பையன் கத் தொண்டு உதறியெழுந்தான். "அவைகள் போகின்றன. அம்மா வா"

"சொப்பனம் காணுகிருன்" என்று கூறிக்கொண்டு அவள் குனிந்து பார்த்தாள். சிந்தனையில் மூழ்கியவனுய் நான் வெளி வந் தேன். அந்த மூங்கைக் குரல் ஜன் னல் வழியாக, பாட்டாகப் பாய்ந்து வந்தது. தாய் மகனுக்கு அதிசய மான தாலாட்டுப் பாடினுள். வார்த் தைகள் தெளிவாயிருந்தன.

தேடி வரும்பல ஆசைகளும்
கேடு பலவிதம் கொண்டு வரும்!
கொண்டு வருங் கொடுந்துன்ப
மெனத்
துண்டுதுண்டாக்கியேதுன்புறுத்தும்
கொந்திடுந் துன்பத்துக் கஞ்சிடிலோ
பொந்தினில் வாழ்வதோ சொல்
மகனே!

நான் வாயை இறுக மூடிக்கொண்டு, விறு விறு என்று நடந்தேன்.

குறட்டை விடும் பழக்கம் உலகெங்கும் பரவியிருக்கிறது. அடுத்தவனுக்கு மனிதன் செய்யும் உபத்திரவங்களில் இதுவும் ஒன்று. குறட்டையைப் பற்றிய பல ருசிகரமான விபரங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்.

குறட்டை விடாதே!

எஸ். பி. கோர்நாஹறன்

நட்பைச் சம்பாதிக்க யோசனை கூறும் புத்தகங்கள் கணக்கில்லாமல் வெளி வந்திருக்கின்றன. ஆனால், ஒருவருக்கும் பிடிக்காத வனுகப் போய் எல்லோருடைய வெறுப்பையும் சம்பாதிப்பதற்கு இந்த ஒரு யோசனை கூறினாலே போதும்: 'படு இரைச்சல் இரையும் பயங்கரமான குறட்டை விடுவதற்குப் பழகிக்கொள்!' சாதாரணமான மனிதன் குறட்டை விட்டால், அது அவன் படுத்திருக்கும் வீட்டை மட்டும்தான் பாதிக்கும்; பயில்வான் குறட்டை விட்டால் $1\frac{1}{2}$ பர்லாங்கு குறுக்களவுள்ள ஒரு வட்டாரத்தையே குடி கிளப்பி விடமுடியும். இது உண்மையென்று ருஜுவான விஷயமும் கூட.

அநேகமாக ஒவ்வொருவருமே சில சமயங்களில் கொஞ்சம் குறட்டை விட்டுத்தான் இருக்கிறார்கள். ஆழ்ந்த தூக்கத்தின் போது சுவாசம் வரும் வழியில் வாயை ஒட்டியுள்ள சில மிருதுவான சதைகள் தொய்வுற்று அசைவதால் குறட்டை கிளம்பி விடுகிறது. ஆனால் சாதாரண குறட்டைக்கும், மோட்டார் லாரியைப் பந்தயத்துக்கு அழைக்கும் குறட்டைக்கும் மலையத்தனை வித்தியாசம் உண்டு.

அமெரிக்க விமான இலக்காவில் வேலை பார்த்த ரமோன் ரொட்ரிகஸ் என்பவருக்குப் படுத்து உறங்க ஒரு தனி வீட்டையே கொடுத்துவிட்டார்கள். அதில் 38 பேர் படுத்து உறங்க இடம் உண்டு. அந்த வீட்டில் அவரைத் தவிர வேறொருவர் படுத்து நிம்மதியாக உறங்க முடியவில்லை என்பதோடு, அந்த வீட்டிலிருந்து 450 அடி தூரம் வரையில் உள்ள பிரதேசமும் அபாயப் பிரதேசமாகப் போய் விட்டது. ஏறக்குறைய இவருக்கு சரி ஜோடி என்றுசொல்லத் தகுந்தவர் ஒருவர் உண்டு. அவர் இங்கிலாந்துக்காரர். 1931-ல் அவர் மனைவி தன் கணவனின் குறட்டையைத் தாங்க முடியாமல் விவாகரத்துக்காக வழக்குத் தொடர்ந்தாள். கோர்ட்டில் மாஜிஸ்டிரேட் கேட்ட ஒரு கேள்விக்கு அவள் அளித்த பதிலாவது:

"பக்கத்து அறையில் தூங்கினால் என்ன என்று கேட்கிறீர்கள்? அவர் குறட்டை தெருவெல்லாம் கேட்கும் போது, பக்கத்து அறையில் தூங்குவது எப்படி?"

சில வருஷங்களுக்கு முன்னால் "குறட்டை விடுவோர் சங்கம்" என்று அமெரிக்காவில் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப் பட்டது. அந்த சங்கத்தின் அங்கத்தினர்கள் எல்லோரும் குறட்டை விட்டதன் காரணமாக, கல்யாண வாழ்க்கையைக் குட்டிச் சுவராக்கிக் கொண்டவர்கள். அவர்களுடைய கட்டிடத்தில் அவர்கள் நிம்மதியாகத் தூங்கலாம். யாருக்கும் அதனால் இடைஞ்சல் ஏற்படுவதில்லை. உறங்கப் போகும்போது, அந்த வீட்டைக் கவனித்துக் கொள்ளுபவன் முதலில் உறங்கிக் குறட்டை விடவேண்டுமென்பது சங்கத்தின் விதி அவன் குறட்டை விட்டதும் மற்றவர்களுக்குத் தூக்கம் வரத் தொடங்கி விடும்.

குறட்டை விவாகரத்துக்களுக்கு அடிப்படையாக இருந்த போதிலும், அதைக் குற்றம் சாட்டி எங்கும் சட்டப்படி தண்டிக்கவில்லை. ஆனால் 1921-ல் அமெரிக்க மாகாணம் ஒன்றில் ஒரு மசோதா கொண்டு வந்தார்கள். பக்கத்து வீட்டுக்காரனை இரவு ஒரு மணிக்கு மேல் குறட்டை விடுவதன் மூலமாக தொந்திரவு செய்தால் 20 பவுன் அபராதம் விதிக்கவேண்டும் என்றும், இரண்டாவது தடவையும் அதே குற்றத்தைச் செய்தால் 200 பவுன் அபராதம் விதிக்க வேண்டும் என்றும் மசோதா கூறியது. ஆனால் அந்த மசோதா நிறைவேறவில்லை. கானடாவின் தலைநகராகிய ஒட்டாவாவில் 1924-ல் மாதாகோவிலில் குறட்டைவிட்டதற்காக ஒருவனுக்கு பத்து டாலர் அபராதம் விதிக்கப்பட்டது.

குறட்டை விடுவதைத் தடுப்பதற்கு என்னென்ன வழிகளைக் கூறுகிறார்கள்? மூக்கு, தொண்டை முதலியவற்றின் சதைகளில் ஏதேனும் கோளாறு இருந்தால் அவற்றை நீக்கிவிட வேண்டும். புகை பிடிப்பதை நிறுத்தி விட வேண்டும்; ஜன்னல்களைத் திறந்து வைத்து உறங்க வேண்டும். மல்லாந்து படுத்து உறங்கினால் குறட்டை வரக்கூடும். மல்லாந்து படுத்துத் தூங்குவதைக் தடுக்க சட்டையின் முதுகில் ஒரு டென்னிஸ் பந்தை வைத்துத் தைத்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்து கொண்டால் மல்லாந்து படுத்து உறங்குவதற்கு வசதி இல்லாமல் போய்விடும்.

ஒரு ஆங்கில யுவதி லண்டன் பத்திரிகை ஒன்றுக்கு எழுதி குறட்டையைத் தடுக்கும் வழிகளைத் தனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள். மாய மந்திரங்களிலிருந்து, 'ஹிப்னடிஸம்' வரையிலும் எத்தனையோ உபாயங்களைப் பலரும் தெரிவித்தனர்.

அவள் ஒரே சமயத்தில் பல வழிகளையும் கடைப்பிடித்தாள். குறட்டை நின்று விட்டது. கடைசியில் எந்த குறிப்பிட்ட உபாயத்தினால் குறட்டை நின்றது என்பதை அவளாலேயே கண்டுபிடிக்க முடிய முடியவில்லை. சிலர் வற்புறுத்திக் கேட்டதன் பேரில் அந்த ஆங்கில யுவதி 'இந்த உபாயத்தினால்தான் தனக்குக் குணம் ஏற்பட்டது' என்று தானாக யூகித்து ஏதோ ஒரு உபாயத்தை அவர்களுக்குச் சொல்லி வைத்தாள்.

பிற உலோகங்களைத் தங்கமாக மாற்றிப் பொருள் தேடப் பலரும் விரும்புகிறார்கள். ஆனால் அதற்குரிய வழி தெரியவில்லை. விஞ்ஞான ரீதியாகத் தங்கம் செய்யு முறைகள் இங்கே விவரிக்கப் படுகின்றன.

தங்கம் செய்ய....

எம். ஜே. ஆராச்சி

மனிதனுக்கு பணக்காரனாக வேண்டும் என்ற ஆசை இயல்பாகவே இருக்கத்தான் செய்கிறது: தொன்று தொட்டே இரும்பு, செம்பு, ஈயம் முதலிய கீழ்த்தர உலோகங்களை தங்கமாக மாற்றினால் நல்ல இலாபங் கிடைக்குமே என்று மக்கள் எண்ணினார்கள்; முயற்சியும் செய்தார்கள். அதற்காகச் செலவு செய்த பணத்தைக் கொண்டே சுகமாக ஜீவித்திருக்கலாம். இரசவாதத்தின் பெயரால் ஏமாற்றி வாழ்ந்தவர்கள் பலர். எனவே தற்காலத்தில் இரசவாதம் என்று ஒன்று உண்மையாக இருக்கிறதா இல்லையா என்ற ஐயம் பாமர மக்களிடம் பரவி இருக்கிறது. ஆகவே தற்காலத்தில் மீத் என்பவரும் நகயோகா என்பவரும் இரசத்தை தங்கமாக மாற்றி யிருக்கிறார்கள் என்று கேட்க வியப்படையாமலிருக்க முடியாது. அவர்களது முறை யென்ன என்று அறியவும் ஆவலேற்படாமலிருக்க முடியாது. அவர்களது முறை எவ்வாறு தொன்று தொட்டே விருத்தியடைந்து வந்திருக்கிறது என்று கவனிப்போம்.

இம்முயற்சி நம் நாட்டவரிடமல்ல, எகிப்தியரிடந்தான் முதலில் தோன்றியதாகத் தெரிகிறது. என்றாலும் இதன் உண்மையான வரலாறு நிச்சயமாகக் கூற முடியாதவாறு மிகப் பழமையானது. வேதிக்கலையின் சரித்திரத்தில் இரண்டாவது பாகமாகிய இரசவாத காலத்தில் மிகமுக்கியத்துவம் வாய்ந்தவர் ரோகர்பேக்கன் என்பவர். இவர் தங்கந்தான் பூர்ண வளர்ச்சியுற்ற உலோகம் என்றும், மற்றைய உலோகங்களையெல்லாம் இயற்கை இந்த பூரண ஸ்திதிக்குக் கொண்டுவருகிறது என்றும், ஆகவே கீழ்த்தர உலோகங்களிலுள்ள அதிகப்படியான அசுத்தங்களை மாற்றினால் அவை தங்கமாக மாறும் என்றும் கருத்துக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

கீழ்த்தர உலோகங்களைத் தங்கமாக்க இயற்கையில் பிரயாசைப்படுவது ஒரு பூதம் என்பது ஆதிகால மனிதனது மூடநம்பிக்கை. பின்னுள்ள இரசவாதிகள் உலோகங்கள் பூமியின் வயிற்றில் பூரண வளர்ச்சி யடைகின்றன வென்று நம்பினர். இதற்குப்பின்னுள்ளவர்கள் செயற்கை முறையால் கீழ்த்தர உலோகங்களைத் தங்கமாக்கலாமென்றனர். இதற்கு நமக்குப் புரியாததும், இலகுவில் செய்ய

முடியாததுமான பலமுறைகளை எழுதிவைத்திருக்கின்றனர். அவர்கள் எழுதியிருப்பதைப் பார்த்தால் உண்மையாக ஒருவரும் கீழ்த்தர உலோகங்களைத் தங்கமாக்கியிருக்க மாட்டார்கள் போலிருக்கிறது. இதனாலேயே, பல ஏமாற்றுக்காரர்கள் இருந்தார்களே யொழிய ஒரு உண்மையான இரசவாதியுமிருக்கவில்லை என்று ஜேபோட்டனஸ் என்பவர் நிச்சயமாகக் கூறுகிறார். மேலும் லெமரி என்பவர் இரசவாதிகள் வைத்திருந்த கலையின் ஆரம்பம் வஞ்சகம்; வளர்ச்சி கபடம்; முடிவு யாசகம் என்று சொல்லியுள்ளார். ஆனாலும்சிலர் செம்பை மாற்றித் தங்கம் செய்ய முடியாவிட்டாலும் பாமரரை ஏமாற்றித் தங்கம் சேர்க்கிறார்கள். ரெம்சன் என்னும் பெரியார் அக்கால இரசவாதிகளே தற்கால அறிவியற் கலைக்கு அடி கோலியவர்கள் என்று கூறுகிறார். பல நிறமான கண்ணாடித் துண்டுகளை நொறுக்கினால் கிடைக்கும் தூள் எல்லாம் ஒரே நிறமாகவே யிருக்கும். ஆகவே மிக நுண்ணிய ஸ்திதியில் சகல பொருள்களும் ஒரே தன்மையனவாகவே யிருக்குமென்பது தற்கால விஞ்ஞானிகளின் கொள்கை. இந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே தற்கால இரசவாதம் சித்திக்கப்பட்டது. ஆனால் அக்கால இரசவாதிகளின் இரசவாதம் இந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் தாம் கண்ணால்கண்ட பல உண்மைகளைத் தப்பாக மனதிலாக்கி இரசவாதத்தில் நம்பிக்கை வைத்திருந்தனர். உதாரணமாக செம்புக் கனி வெட்டி யெடுக்கும் சுரங்கங்களில் சுரக்கும் நீரில் இரும்புப் பாத்திரம் நனையும்போது, பாத்திரம் செம்பால் பொதியப்பட்டு செம்புப் பாத்திரம்போல் தோற்றமளிக்கும். இதிலிருந்து அவர்கள் இரும்புப்பாத்திரம் செம்புப் பாத்திரமாகிவிடாதென்றும் அப்படியானால் இதுபோலவே இரும்புப் பாத்திரம் தங்கப்பாத்திரமாக ஏன் முடியாதென்றும் எண்ணலாயினர். ஆனால் செம்புக் கந்தகையாகிய துருசைத் தண்ணீரில் கரைத்து அதில் ஒரு இரும்புத் துண்டைப் போட்டுவைத்தால் கொஞ்ச நேரமானதும் இரும்புத் துண்டு செம்பால் பொதியப்பட்டு செம்புத் துண்டு போல் காணப்படும். மேலும் ஈயக்கனியோடு பெரும்பாலும் வெள்ளிக்கனி கலந்தே யிருக்கும். வெள்ளியை மிகச் சிரமப்பட்டே பிரித்தெடுக்கின்றார்கள். அப்படி யிருக்க ஈயக்கனிகளை புடமிடும்போது சிறிது வெள்ளியும் கிடைப்பதில் ஆச்சரியமில்லை. அக்காலத்தவர்கள் ஈயத்தில் ஒருபாகம் வெள்ளியாகி விட்டது என்று தப்பாக எண்ணினர். இவ்விதத் தப்பெண்ணங்கள் அவர்களை ரசவாதத்தில் நம்பிக்கை வைக்கச் செய்தன. ஆனால் பழங்கால கிரேக்கஞானிகளிடம், மிக நுண்ணிய ஸ்திதியில் சகல பொருட்களும் ஒரே தன்மையானவை என்ற கொள்கையிருந்து வந்ததாகவும் இடைக்காலத்தில் இக்கொள்கை மறைந்துவிட்டதாகவும் தெரிகிறது.

உண்மையான கொள்கைகள் எவையும், ஒரு காலத்தில் நம்பப்படாவிட்டாலும், மற்றொரு காலத்தில் கட்டாயமாக நம்பப்படும். அவ்வாறே இந்தக் கொள்கையும்

திரும்பவும் உயிர் பெற்றிருக்கிறது. மிக நுண்ணிய ஸ்திதியில் சகல பொருட்களும் ஒரே தன்மையன வாக இருக்கும். ஆகவே சகல பொருட்களுக்கும் மூலம், ஒரே தன்மைவாய்ந்த, அணுவைவிடச் சிறிய வஸ்துவாகும். இவ்வஸ் துவை பல விகிதத்தில் சேர்ப்ப தாலேயே பல பொருட்கள் உண்டாகின்றன. பிரௌட் என் பவர் பத்தொன்பதாம் நூற்றுண் டில், இம்மூல வஸ்து நீரக மென் னும் ஒரு வித வாயுவின் அணு வாகுமென்றூர். ஆனல் தற்கா லத்து ரசாயனிகள் அணுவையும் பிளந்து மாறுபட்ட பல தகவல் களைத்தந்துள்ளனர். ஆகவே அணு வைப் பிளந்து அதனுள் அவர்கள் கண்டவற்றை நாம் அறிந்துகொள் வது அவசியமாகிறது. அவர்கள் அணுவும் ஒரு சிறிய சூரியமண் டலமேயெனக் கண்டனர். சூரிய மண்டலத்தில் சூரியன் நடுவிலிருப் பதாகவும் அதைச் சுற்றி பூமி, செவ்வாய் முதலிய கிரகங்கள் ஓடி வருவதாகவும் நாம் அறிந்துள் ளோம். இதுபோலவே ஒரு அணு விலும் நடுவில் ஒரு கருவும் அதைச் சுற்றி பல மண்டலங்களில் பல மின்னுருக்கள் ஓடி வருவதாகவும் கண்டுள்ளனர். அணுக் கருவில் மிகையுருக்களும், அலியுருக்களு மிருக்கின்றனவாம். நடுவிலிருக் குங் கரு, மின்னுருக்களை தன்னைச் சுற்றிவரச் செய்ய பிரமாண்டமான ஆற்றலைப் பிரயோகிக்கிறது. அணுவை சிதைப்பதால் இவ் வாற்றல் வெளிப்படுகிறது. இதுவே அணுசக்தி. சகல பொருட்களுக்கும் மூலவஸ்து இம் மின்னுருக்களேயாகும்.

சுருங்கக்கூறின், ஒரு பொருளின் அணுவை யூகித்துக்கொள் வோம்; இவ்வணுவில் கருவைச் சுற்றி ஓடிவரும் மின்னுருக்களிருக் கின்றனவே, அவற்றின் எண் ணிக்கையைக் கூட்டவோ குறைக் கவோ செய்வோமானுல் ஒரு பொருள் மற்றொரு பொருளாக மாறும். இது எளிதான காரியமல்ல. அணுவோ அதன் பெயருக்கேற்ப மிகச் சிறிது. அப்படியானுல் அது அடக்கிக்கொண் டிருக்கும் மின் னுருவோ சொல்ல வேண்டிய தில்லை. ஒரு ஆரஞ்சுப் பழத்தை யும் ஒரு மின்னுருவையும் சூக்ஷும தரிசனியின் கீழ்வைத்து ஆரஞ்சுப் பழத்தை இவ்வுலகளவு பெரிதாகக் காணும்படிச் செய்து, அதேயளவு மின்னுருவைப் பெரிதாக்கினுலும், மின்னுருவைக் காணமுடியாதென் ருல் மின்னுருவின் அளவை யூகித் துக் கொள்ளலாம். அடுத்தபடி யாக மின்னுருக்களைச் சேர்க்கும் போது உண்டாகும் பெரிய தவிர்ச் சிச் சக்தியை வெல்ல மிகப் பெரிய வெளித்தாக்கம் வேண்டும். இது ஓல்டேஜ் மல்டிப்ளையர், வான்டி கிராப், சைக்கிளோடிரோப் முத லிய இயந்திரங்களி னுதவியால் பெறப்படுகிறது.

யுரேனியமென்னும் ஒருவகை உலோகத்தின் அணுவில் நூற்றித் தொண்ணூற்றிரண்டு மின்னுருக் களும், மிகையுருக்களும், அலி யுருக்களுமிருக்கின்றனவாம். ஒரு குடும்பத்தில் அதிகம் பேர் இருந் தால் சண்டை சச்சரவுகளும், தனிக் குடித்தனங்களும் ஏற்படு வது இயற்கை. அதுபோலவே யுரேனியத்திலிருந்து அவைகள் ஆல்பாகிரணங்கள், பீடாகிரணங் கள் முதலியனவாக வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

ஆல்பா கிரணங்களிலுள்ள துகள்களைக் குண்டாகக் கொண்டு தாக்கித்தான் மற்றப் பொருட்களின் அணுவில் மின்னுருக்களைக் கூட்டவோ குறைக்கவோ செய்கின்றனர். உதாரணமாக காற்றிலிருக்கும் மந்த வாயுவாகிய காலக வாயுவை எடுத்து அதன் அணுவை ஆல்பா துகளால் தாக்குகின்றனர்கள். ஆல்பா துகள் காலக அணுவோடு சேர்ந்து ஒரு ப்ளோரின் அணுவாகிறது. பின்னர் இது தன் அணுவின் கருவிலிருந்து ஒரு மிகையுருவை வெளிவிட்டு பிராண வாயுவாக மாறுகிறது. அகவே தற்கால விஞ்ஞானிகள் கனங் குறைந்த மந்த வாயுவை கனங் கூடிய பிராண வாயுவாக மாற்றியிருக்கின்றனர். இம்முறை நன்கு சீர்படுத்தப்பட்டு வருகிறது. இம்முறையைக் கையாண்டே மீத் என்பவரும் நகயோகா என்பவரும் ரசத்தை தங்கமாக்கி மனிதனது நெடுங்காலக் கனவை நனவாக்கியிருக்கின்றனர்கள். என்றாலும் இம்முறையில் தங்கம் செய்வதற்கு ஆகும் செலவு சாதாரணத் தங்கத்தின் விலையைவிடக் கூடிவிடும். எனவே மனிதனது ஆசை நிறைவேறாமலேயே இருக்கிறது.

*

என்ன இன்ஷ்யூரன்ஸ்?

இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டிடம் ஒரு ஆசாமி வந்தார். அவருக்கு இரண்டு கால்களும் கிடையாது. அதனால் மரக்கால்கள் போட்டு நடந்து வந்தார்.

ஆசாமி: இரண்டு மரக் கால்களால் நடக்கிறவன் நான். நான் இன்ஷ்யூரன்ஸ் செய்து கொள்ளலாமா?

ஏஜண்ட்: என்ன இன்ஷ்யூரன்ஸ்? ஆயுள் இன்ஷ்யூரன்ஸா? நெருப்பு இன்ஷ்யூரன்ஸா?

துப்பறியும் டிரைவர்

பிரபல துப்பறியும் நாவலாசிரியராகிய ஸர் ஆர்தர் கோனன் டாயில் என்பவர் பாரிஸ்மா நகரில் தாம் தங்கியிருக்கும் ஹோட்டலுக்குப் போக வேண்டியிருந்தது. அதற்காக ஒரு கார் அமர்த்திக்கொண்டு சென்றார். கார் டிரைவரிடம் வாடகைப் பணத்தைக் கொடுக்கும்போது, அவன் நாவலாசிரியரைப் பார்த்து, "நமஸ்காரம் மிஸ்டர் டாயில்" என்றான்.

"என் பெயர் உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார் ஆசிரியர்.

"தாங்கள் தென் பிராந்தியத்திலிருந்து இங்கே வருவதாகப் பத்திரிகைகளில் பார்த்தேன். தவிரவும், உங்களைப் பார்த்தால் ஆங்கிலேயராகத் தோன்றுகிறீர்கள். சென்ற வாரத்தில் தெற்கே, பிரான்ஸ் நாவிதன் ஒருவனிடம் முடி வெட்டிக் கொண்டிருக்கிறீர்கள்."

"ஆச்சரியம்! இவற்றைத் தவிர, வேறு அடையாளம் எதுவும் கிடையாதா?"

"உங்களுடைய பெயர் உங்கள் பெட்டியில் எழுதப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் தவிர வேறு அடையாளம் எதுவும் கிடையாது!" என்றான் டிரைவர்.

சுண்டைக்காயில் எவ்வளவு மகத்துவம் இருக்கிறது தெரியுமா ? மூர்த்தி சிறிதானலும் கீர்த்தி பெரிதுதான்.

வத்தல் செல்வம்

○

வை. கோ.

செலவைச் சிக்கனமாகச் செய்து வாழுகிறவனை 'வத்தல் குழம்பு' என்று கேலி செய்வது தமிழ் நாட்டு வழக்கம்.

அவன் வத்தல் குழம்பு சாப்பிடுவதனல் அவனுக்குச் செலவு குறைகிறது. உடல் வலுப் பெறுகிறது. வைத்தியச் செலவு வேறு பூஜ்யமாகி விடுகிறது. ஆதலால் அவனுக்குப் பலவகையிலும் செல்வம் சேருகிறது.

காலங்களிலே கத்தரி, அவரை, கண்டங் கத்தரி, தூதுவளை, மணத் தக்காளி, சுண்டை, மா இது மாதிரி சில காய்வகைகளை தமிழர்கள் வத்தலிட்டு வைப்பது வழக்கமாக இருந்து வருகிறது.

இரவு நேரங்களில் நீர்ச்சத்து அதிகமாக இருக்கும் காய்கறிகளைச் சாப்பிட்டால் தூக்கம் பிடிக்காது. அடிக்கடி எழுந்து மூத்திரம் பெய்ய நேரிடும். ஆதலால்தான் இரவு நேரங்களில் வத்தல் குழம்பு சாப்பிட வேண்டும் என்று பழங் கால உணவு நிபுணர்கள் சொன்னர்கள் என்று எண்ணவேண்டியதிருக்கிறது.

இந்த வத்தல்களிலே சுண்டை வத்தல்தான் மிகுதியாக உபயோகப் படுத்தப் பெறுகிறது.

சுண்டை பெரும்பாலும் மலையில் பயிராகும் செடி.

சுண்டையின் காய், வத்தல், வேர் மூன்றும் உபயோகப் படுகிறது.

பொதுவாகச் சொன்னல் சுண்டை கோழையை அகற்றும். நுண்ணிய புழுக்களைக் கொல்லும். பசியைத் தூண்டும்.

காயைச் சாப்பிடுவதால் நெஞ்சில் தங்கிய கபம், கிருமிரோகம், வாத ஆதிக்கம் இவை போகும்.

சுண்டை வத்தலிலே பெரிதும் குணங்காணலாம். சுண்டை வத்தலுக்குப் பித்தஅருசி, மலக்கிருமி, கிரகணி, ஆசனத் துவாரச் சீதக் கட்டு இவைகள் நீங்கும். மார்ச்சளி, கிருமி ரோகம், அசீரண பேதி, மூல வியாதி முதலிய நோய்களுக்கு சுண்டை வத்தல் கருவேப்பிலை, மாங்கொட்டைப் பருப்பு, ஓமம், நெல்லி வத்தல், மாதுளை ஒடு, வெந்தயம் இவற்றை சமன் எடை எடுத்துத் தனித்தனி இளவறுப்பாய் வறுத்துச் சூரணம் செய்து கூட்டித் திரிகடிப் பிரமா

பட்டினியிலிருந்து

தம்மை டீ எப்படிக்

காப்பாற்றுகிறது?

அயல்நாட்டு நாணயச் செலாவணி நம் நாட்டுக்கு இன்று மிகவும் அவசியமாக இருக்கையில், நாம் ஏற்றுமதி செய்யும் 40 கோடி பவுண்டு தேயிலை, அவசியமான உணவுப் பொருள்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய ஏராளமான தொகையை அளிக்கிறது. டீ நம் நாட்டு கலாசாரத் தூதர் மட்டுமல்ல, பட்டினியைத் தடுக்க உத்திரவாதமும் அளிக்கிறது. ஏற்றுமதித் தொழிலில் இரண்டாவதாக நிற்கும் டீத்தொழில் நாட்டின் பொருளாதாரத் துறையில் பிரதான ஸ்தானம் வகிக்கிறது.

டீயைப்பற்றிய சில உண்மை விவரங்கள்

- ஏழு லக்ஷம் ஏக்கர் நிலத்தில் வருஷமொன்றுக்கு 54 கோடி பவுண்டு டீ உற்பத்தி செய்கிறோம்.
- இத் தொழிலில் 10 லக்ஷம் ஆண்களும் பெண்களும் ஈடுபட்டிருக்கிறார்கள்
- உள்நாட்டில் அருந்தும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 3 அணா வரியும், ஏற்றுமதி செய்யப்படும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 4 அணா வரியும் சர்க்காருக்குக் கிடைக்கிறது. நாட்டு கஜானாவுக்கு வருஷமொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 13 கோடி வரும்படி கிடைக்கிறது.
- மேலும் டீ கம்பெனிகள் செலுத்தும் வருமான வரி மூலமாக சர்க்காருக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.

டீ

ஒரு மகத்தான இந்தியக் கைத்தொழில்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

லிப்டன்ஸ்

என்றால்

முதல்தரமான டீ

LTX-151-TM

ணம் காலையிலும் மாலையிலும் இரு வேளையும் மோரில் கலந்து சாப்பிட்டால் நோய்கள் காற்றாய்ப் பறக்கும்.

பூசணியில் நீர்ச்சத்து (ஆயிரத்தில் 926 இருக்கிறது. புரோட்டீன் 14, நெய்ச் சத்து 1 உலோகச்சத்து 6, நார் கிடையாது. மாச்சத்து 54, கால்சியம் 37, பாஸ்பரஸ்3, இரும்பு 67, வைடமின் எ 100 கிராமிலுள்ள யூனிட் 84 இருக்கிறது. சுண்டை வத்தலில் நீர்ச்சத்து (ஆயிரத்தில்) 123, புரோட்டீன் 83, நெய்ச்சத்து 17, உலோகச் சத்து 51, நார் 176, மாச்சத்து 551, கால்சியம் 37, பாஸ்பரஸ் 18, இரும்பு 2222, 'எ' வைடமின் (100 கிராமில்) 750 இருக்கிறது.

வத்தல் குழம்பு சாப்பிடுவதை அகௌரவம் என்று இது நாள் வரை கருதி வந்திருக்கிறோம். முன்னோர்கள் கண்ட சுண்டைவத்தலின் மகத்துவத்தை இப்பொழுது தெரிந்து கொண்டிருக்கிறோம்.

இனியாவது உடல் நலம்பெற மக்கள் நோயற்ற வாழ்வு வாழ, நாடு செழிக்க வத்தல் செல்வத்தை வளர்க்கலாமல்லவா!

❀

பிரச்னையும் பரிகாரமும்

அமெரிக்காவில் நியூ இங்கிலாந்துப் பகுதியில் ஒரு சிறு நகரத்தில் ஒரு நாள் முனிசிபல் சபை கூடியது. முதல்நாள் அவ்வூரில் பனிவிழுந்திருந்தமையால், ஊரெல்லாம் பார்ப்பதற்குக் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. இந்த அழகைக் கொஞ்சநேரமாவது பேணி வைத்து, பார்த்துப் பார்த்து அனுபவித்துக் கொண்டிருக்க முனிசிபாலிடியார் விரும்பினர். அங்கத்தினர் ஒருவர் ஒரு யோசனை கூறினர். 'தெருவழியாக யாரும் நடந்துபோகாமல்இருந்தால் பனி அப்படியே கலையாமல்உறைந்து கிடக்கும்; நடந்து சென்றால் சுவடுபட்டு அழகு கெட்டுவிடும். அதனால், ஒரு ஆளை நியமித்து ஒவ்வொரு வீட்டிலும் போய், யாரும் தெருவழியாக சிறிது நேரத்திற்கு நடக்கவேண்டாம் என்று சொல்லும்படி ஏற்பாடு செய்யவேண்டும்' என்றார் அந்த அங்கத்தினர்.

"அப்படிச் செய்தாலும், நாம் நியமித்த ஆள் தெருவழியாகத்தானே நடந்து செல்ல வேண்டியிருக்கும். அவனுடைய கால் சுவட்டினால் அழகு பாழாகாதா?" என்று கேட்டார் மற்றொருவர்.

உடனே பழைய படியும் ஆலோசனை செய்தார்கள். பிறகு பின் கண்ட தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்:

"வீடுதோறும் போய் தெருவில் நடக்கக்கூடாது என்று சொல்லுகிறவனுடைய கால்கள் தரையில் படாதிருக்க, அவனை இரண்டு ஆட்கள் தூக்கிச் செல்ல வேண்டும்."

கணவனும் மனைவியும்

கணவன்: அன்பே! நீ உன் தாயாருடைய வீட்டுக்கு வருஷத்துக்கு இரண்டு தடவைகள் போய்வந்தால் போதும் அல்லவா?

மனைவி: போதும்.

கணவன்: போனால் ஒவ்வொரு தடவையும் எத்தனை நாட்கள் தங்கியிருப்பாய்?

மனைவி: தடவைக்கு ஆறுமாதம்.

"மேற்கு மலைத்தொடரின் சிகரம்,—நான் திண்டுக்கல் பக்கமாக எனக்கு நேராகப் பார்த்து, என்னோடு அநேக மைல்கள் ஓடிவந்த அந்தச் சிகரம், இப்போது அதையும்கூட காணவில்லை. மறைந்து விட்டது."

ஓட்டப் பந்தயம்

○

கு. அழகிரிசாமி

ரயில் வண்டி தென் திசையை நோக்கி விசையாக ஓடிக்கொண்டிருந்தது. மேல் பக்கமாக உள்ள ஜன்னலோரத்தில் நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அவ்வளவு கூட்டத்திலும், விதி கட்டளையிட்டு அமர்த்திக் கொடுத்த மாதிரி அந்த மேல் பக்கமாகத்தான் இடம் கிடைத்தது. மாலை ஐந்து மணி இருக்கும். சுமார் ஒரு மாதத்துக்குப் பிறகு, திருச்சி மதுரை மார்க்கத்தில் மறுபடியும் பிரயாணம் செய்ய வேண்டி ஏற்பட்டது.

ஒரு மாதம் தான் ஆகிறது. பரந்த உலகத்தில் என் தலையைத் தேடி வந்து விழுந்த அந்த இடியின் அதிர்ச்சி நீங்க இனி எத்தனை மாதங்கள் கடக்க வேண்டுமோ?

வண்டி ஓடுகிறது. சிறிது தூரத்தில், சமீபத்திலே முளைக்க வைத்த சிறு பனங் கன்றுகள் காணப்பட்டன. ஏதாவது ஒரு காரணத்தை, ஒரு நினைவுப் பொருளை, வைத்துத் தினம் தினம் இதயத்தில் நடக்கும் சோக நாடகத்தின் அன்றைய ஆட்டத்துக்கு அந்தப் பனங்கன்றுகள் காரணமாகிவிட்டன. இப்படி எதையும் பார்த்து மனதை அலட்டிக் கொள்ளாமல் இருக்கக் கண்களை மூடினாலோ, அது இன்னும் சகிக்க முடியாத வேதனையாக இருக்கிறது.

* * *

"இந்தப் பனங்கன்றுகள் வளர்ந்து பலன் தர எவ்வளவு காலம் ஆகும்?"

"சுமார் பத்துப் பதினைந்து வருஷங்கள் பிடிக்காதா? உம்?"

"சரி, ஏதோ பதினைந்து என்று வைத்துக் கொள்ளுவோமே. நாம் இருவரும் ரயிலில் இப்போது போய்க் கொண்டிருக்கிறோம். இருவரும் பிரமச்சாரிகள். ஆனால் இந்தப் பனங்கன்றுகள்—இதை நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்—இவை பெரிய பனைகளாகிக் குலை தள்ளும் போது என்றாவது, நாம் இந்த வழியே ரயில் பிரயாணம் செய்யத்தான் போகிறோம். அப்போது வாழ்க்கையில் என்னென்ன மாறுதல்களோடு எந்தெந்த நிலைகளில் நாம் இருக்கப் போகிறோம் என்று பார்ப்போமா?... ...இன்றைக்குத் தேதி என்ன?"

"பதினைந்து. ஆமாம் இந்தத் தேதியை டைரியில் குறித்து

வைத்துக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பெட்டியைத் திறந்து டைரியில் 15-7-44 என்று குறித்து வைத்தான் குமாரசாமி.

இது ஒரு மாதத்துக்கு முந்திய சமாச்சாரம். அன்று ரயில் வடக்கு நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. என்னுடைய நண்பன் குமாரசாமி தென்காசியிலிருந்து திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் வந்துகொண்டிருந்தான். நான் சந்தர்ப்பவசமாக, மதுரையிலிருந்து வண்டி ஏறும்போது அவனைப் பார்த்துவிட்டேன். அவனும் எப்படியோ என்னை எதிர்நோக்கி ஜன்னல் வழியே தலையை நீட்டிக்கொண்டிருந்தான். ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டோம். அன்று திருச்சிக்கு ஒரு காரியமாகப் புறப்பட்ட எனக்குச் சுமார் ஐந்துமணி நேரப் பிரயாணத்துக்கு ஒரு நண்பனுடைய துணை கிடைத்து விட்டது என்ற ஆனந்தத்துடன் அவன் கையைப்பிடித்து வண்டி ஏறினேன். அவனுக்குத் தென்காசியில் கிடைத்த வேலை முடிவடைந்துவிட்டது. அதனால் சென்னைக்கு ஒரு உத்தியோகத்தை நாடிப் போய் கொண்டிருந்தான். வண்டி ஏறிய பரபரப்பில் ஒருவரோடு ஒருவர் விஸ்தாரமாக வெகு நேரம் வரை பேசிக்கொள்ள முடியவில்லை. வண்டி புறப்பட்டுச் சிறிது தூரம் போகும் வரை ஒன்றும் பேசாமலே இருந்தோம். அப்புறம், விளாங்குடி ஸ்டேஷன் கடந்ததும் மேற்சொன்ன பனைமரத்தைப் பற்றிய சம்பாஷணை நடந்தது. பழையபடியும் மௌனம்.

இதுவரை அவன் சுமார் ஐந்தாறு இடங்களில் பார்த்த உத்தியோகமும் நிலைப்பானதாக இல்லாமல் போய்விட்டது. அவனுடைய பிரிவை ஏற்க மனமில்லமல் அவன் கூடவே வாழ்க்கையைப் போக்க விரும்பி என் சொந்த ஊரில் கிடைத்த என் நிரந்தரமான சர்க்கார் வேலையையும் உதறிவிட்டு அவனோடு அம்பாசமுத்திரத்தில் குறைந்த சம்பளத்திலே ஒரு வேலையில் அமர்ந்தேன். அங்கே ஒரு எட்டு மாதம் இருந்தோம். இருவருக்கும் வேலை முடிந்துவிட்டது. ஊர் திரும்பினோம். இப்படி எத்தனையோ இடங்களுக்கு அவனை நிழல் போல் தொடர்ந்து போயிருக்கிறேன். என்னைத் தொடரும்படிக்கும் அவன் வாழ்க்கையில் பல மாறுதல்கள் செய்திருக்கிறேன். ஆனால் எங்கள் அன்பு-வாழ்க்கையின் இயற்கை, சேர்க்கை யின்பமாக இல்லாமல், பிரிவுத் துயராக வேண்டியதாகி விட்டது.

ஒவ்வொரு சமயங்களில் படாத கஷ்டப்பட்டுச் சந்தர்ப்பத்தைக் கைப்பற்றுவோம். ஆனால், பலன் எதிர் பாராத விபரீதமாக மாறி விடும். அந்தச் சந்தர்ப்ப தேவதையை நம்பிக்கையோடு அணுக, அவள் சில சமயங்களில் புன்னகையோடு இன்பத்தைச் சுரந்தவண்ணம் தன் முகத்தைக் காட்டுவாள். சில சமயங்களில், என்றென்றைக்கும் நிரந்தரமாக முதுகைக் காட்டிப் பிணங்கிவிடுவாள். அவள் ஊடலைத் தணிக்கும் சாதுரியம் எவரிடத்திலும் இருக்கப் போகிறதா?

அன்று எக்ஸ்பிரஸ் சிறு ஸ்டேஷன்களில் நிற்காமல் வேக

மாக ஓடிக் கொண்டிருந்தது. அன்றும் மேல் பக்கத்து ஜன்னலோரம் இருந்த நான் அஸ்தமனமாகும் மேல் வானத்தை என்றும் போலக் கவிச்சுவையோடு அனுபவிக்க ஆரம்பித்தேன். வண்டியை எதிர்த்துக் கற்றுழைகளும் சிறு செடிகளும் ஓடிக்கொண் டிருந்தன. சற்றுத் தண்டவாளத்தை விட்டுத் தூரத் தள்ளியிருக்கும் மரங்கள் கொஞ்சம் சாவதானமாக என் பார்வையை விட்டு ஓடிக் கொண் டிருந்தன. ஆனால் வெகு தொலைவில் நீல நிறத்தில் காணப்படும் மேற்குத் தொடர்ச்சிமலை மட்டும் என் ரயிலோடு தொடர்ந்து வந்து கொண் டிருந்தது. இதிலெல்லாம் எதையோ ஒரு சோக மயமான உவமையை அமைக்க, அஸ்தமன சூரியனையும், வண்டியில் எதிரே இருக்கும் என் நண்பனையும் மறந்து ஈடுபட்டேன்.

என் மௌனத்தைக் கலைத்து நண்பனே பேச்சை ஆரம்பித்தான்:

"நீ திருச்சியிலிருந்து திரும்ப எவ்வளவு நாளாகும்?"

மௌனம் கலைந்து ஏறிட்டுப் பார்த்தேன். அவன் மறுபடியும் தன் கேள்வியைப் போடவே, பதில் சொன்னேன்:

"அதிகமாய்ப் போனால் ஒரு வாரம்."

"திருச்சியில் ஜோலி முடிந்ததும் சென்னைக்கு ஒரு முறை வந்து போயேன்."

"வீண் செலவு எதற்கு குமார்? இது வரை செலவழித்தும், அலைந்து பார்த்தும் கண்ட பலன் என்ன?" என்று சொல்லி அவன் உள்ளத்தைச் சற்றுப் பரிசோதித்தேன். முகத்தையும் மேற்குத் தொடர்ச்சி மலையைப் பார்த்துத் திருப்பிக் கொண்டேன்.

அவன் உடனே பதில் சொல்லவில்லை. திடீரென்று அவன் குரல் விக்கியது. திரும்பிப் பார்த்தேன்.

"வயிற்றுப் பிழைப்பு என்னவெல்லாம்தான் செய்யுமோ? யார் கண்டார்கள்?"

"என்ன? என்ன சொல்லுகிறாய் குமார்?"

"இதோ, என் உடலைத் தொட்டுப் பார். பத்திருபது நாட்களாக ஒரே ஜுரம். நாளை காலையில் பதினொரு மணிக்குள் சென்னையில் பேட்டிக்கு ஆஜராக நிற்காவிட்டால் வேலை கிடைக்காது. இந்த ஜுரத்தையும் தாங்கிக் கொண்டு......"

அவன் கண்களில் கண்ணீர் கொப்பளித்தது.

"பைத்தியம் மாதிரி அழாதேடா......" என்று 'அதட்டி' விட்டு என்மேல் கிடந்த கதர் அங்கவஸ்திரத்தை விரித்து அவன் உடலில் போர்த்தினேன். அவன் உடல் மிகவும் உஷ்ணமாக இருந்தது. உடனே என் வலது கைப்புறம் உட்கார்ந் திருப்பவரை வேண்டுதலாகக் கேட்டு எதிர்ப் பெஞ்சில் உட்காரச் சொல்லி அவனை என் பக்கத்தில் உட்கார வைத்துத் தாங்கிக் கொண்டேன்.

"இப்படி உடம்புக்கு ஏதாவது என்றால் முன்னாலேயே ஏன் லட்டர் போடக் கூடாது? அசடு மாதிரி பேசாதே இருக்கலாமா?"

"போதும் போதும், பக்கம் பக்கமாக லட்டர் போட்டு, உன்னை இவ்வளவு தூரம் ஆட்டிக் குலைத்தது போதாமல் இனியும் லட்டர்

போட்டது போதும். நான் விளையாட்டுக்குச் சொன்னேன். நீ சென்னைக்கு ஒன்றும் வரவேண்டாம். உன்னுடைய உத்தியோகத்தை விட்டுவிடாதே. நீயாவது நிம்மதியாக ஒரு வேலையைப் பார்'' என்று நடுங்கிக்கொண்டே பேசினான்.

"சரி சரி. ஜுரத்தோடு சும்மா பேசாதே...நீ தென்காசியிலிருந்து வருகிறவன்......சென்னைக்கு நேராகவே டிக்கட் எடுத்து விட்டாயோ?''

"நாளை பதினொரு மணிக்கு சென்னையில் இருக்க வேண்டியவன் நேராக டிக்கட் எடுக்காமல் என்ன செய்வான்?''

"நீ சுத்தப் பைத்தியக்காரனடா! காலாகாலத்திலே லட்டர் போடாமல் உன் புத்தி எங்கே போனது? உடம்புக்குச் சுகமில்லாமல் இருந்தால் உடனே மருந்து சாப்பிடுவதுபோய் இப்படியே ஜுரத்தோடு ஊருருக்குப் பைத்தியம் மாதிரி அலைவார்களா?......
......கஷ்டம். என்னோடு உன்னால் இன்றிரவு திருச்சியில் வந்து தங்கக்கூட சாவகாசம் இல்லை போலிருக்கிறதே?''

பதிலுக்குப் புன்னகை செய்தான் ஒருவித உணர்ச்சியுமில்லாமல். இரவு மணி பத்திருக்கும். வண்டிக்கு வெளியே எல்லாம் மறைந்துவிட்டது. இந்தப் பிரபஞ்சத்துக்குள்ளே ரயில் வண்டி ஒன்றுதான் எஞ்சிய பொருளாக எதிர்ப்பாரில்லாத சேனைபோல் முன்னேறிக் கொண்டு ஓடியது. எனக்கோ குமாரின் முகத்தில் வைத்த பார்வையைவிட்டு அந்தப் பக்கம் இந்தப் பக்கம் பார்க்க முடியவில்லை. அடிக்கொரு தடவை அவன் உடலைத் தொட்டுப் பார்த்துக்கொண்டே வந்தேன். திண்டுக்கல் கடந்து விட்டது. அவன் உடலில் இலேசாக வியர்க்க ஆரம்பித்தது. உடனே போர்வைத் துணியை எடுத்துவிட்டேன். அவனோ என் வலது புஜத்தில் தலையைச் சாய்த்து உறங்கிக்கொண்டிருந்தான். ஜுரம் நின்றது என்ற சந்தோஷத்தோடு எதிர் காலத்தைப் பற்றிச் சிந்தித்த வண்ணம் வெளியே இருளை நோக்கினேன். இருளைப் போலத்தான் என் எதிர் காலமும் தெளிவற்று இருந்தது. ஒரே அந்தகாரத்தில் எந்த வழியைக் கடைப்பிடித்து வாழ்க்கையில் முன்னேறுவது? இத்தனை தடவைகளும் எத்தனையோ உத்தியோகங்களை விட்டு அவனை உடலும் உயிருமாகத் தொடர்ந்து பல கஷ்டங்களிடையே வாழ்க்கை நடத்திவிட்டு இனிமேல் தனித்து வாழ்வது எப்படி? இவ்வளவு நாளைய போராட்டமும் என்ன ஆவது?

திருச்சி வரும் முன்பே குமார் விழித்துக்கொண்டான். அவன் முகத்தில் தெம்பு காணப்பட்டது. கலகலவென்று உற்சாகத்தோடு பேசினான். குளிர் காற்றுக்காகப் பயந்து மூடியிருந்த ஜன்னலை வியர்க்கிறது என்று சொல்லித் திறக்கச் சொன்னான்.

"போடா பைத்தியம். இப்படித்தான் ஏதாவது உடம்புக்கு வினை தேடிக்கொள்வது. குளிர் ஊசிமாதிரி பாய்கிறது. சும்மா இரு'' என்று சொல்லிவிட்டு என் முகத்தைத் திருப்பிக்கொண்

டேன். குமார் 'கட கட' வென்று சிரித்தான்.

திருச்சிக்கு நான் போகும் ஜோலி மிகவும் முக்கியமானது. அதனுல்தான் நான் அவனேடு சென்னேக்குப் போய் வர முடியா மல் போய்விட்டது. கடைசியில் திருச்சியில் நான் தங்கப்போகும் ஹோட்டலின் விலாசத்தை அவ னுடைய டைரியில் எழுதி வைத்துவிட்டு, லட்டர் போடும்படி பல தடவையும் வற்புறுத்திச் சொன்னேன். சென்னேக்குப் போய் வேலேயில் அமரும் விபரத்துக்கு உடனே கடிதம் போடுவதாகச் சொன்ஞன்.

திருச்சி வந்துவிட்டது. நான் இறங்கினேன். பெட்டி படுச்கை எல்லாம் இருக்கட்டும் என்று சொல்லிவிட்டு அவனுக்குப் பசிக்கு ஏதாவது வாங்கிவரப் புறப்பட் டேன். ஜுரம் அடிப்பவனுக்கு எதைக் கொடுப்பது என்ற சந்தே கம். கடைசியில், கூஜாவில் கொஞ்சம் காப்பியும், இரண்டு இட்டியும் வாங்கிக்கொண்டு வந்து வண்டி ஏறினேன். அவன் பொட்டலத்தை பிரித்துச் சாப் பிட்டான். காப்பி சாப்பிட்டு முடித்ததும் என் பெட்டி படுக் கையை எடுத்துக்கொண்டு வெளியே இறங்கினேன். வண்டி புறப்படும் சமயம். பதிஞயிரம் தடவை சொல்லிப் பதிஞயிரத்து ஒன்ருவது தடவையாக, "போன தும் டாக்டரிடம் உடலேக் காட்டி மருந்து சாப்பிடு. கண்டபடி எல் லாம் ஒன்றிருக்க ஒன்றைச் செய்து பழையபடியும் ஜுரத்தை வருவித்துக் கொள்ளாதே! போன தும் லட்டர் போடு" என்றேன்.

கடைசியில், "செலவுக்குப் பணம் வேண்டியிருந்தால் வாங்கிக் கொள்" என்றேன். "வராள மாக இருக்கிறது" என்று மறுத்து விட்டான்.

வண்டி புறப்பட்டுப் போய் விட்டது.

'ஒரு வாரமோ ஒரு மாதமோ கழித்து, அவனுக்குச் சென்னே யில் வேலே கிடைத்துவிட்டால், நானும் அவனேத் தொடர்ந்து சென்று எனக்கும் ஒரு வேலே தேடுவதா!' என்று பலவாருக ஹோட்டல் அறையில் இரவெல் லாம் சிந்தித்துக் கொண்டிருந் தேன்.

அவனுடைய எதிர்கால க்ஷேமமே என் கனவாக இருந் தது. அவன் நட்புக்கு எதைச் செய்தாலும் போதுமா? மேல் நாட்டில், பெலிக்கன் என்ற பறவை தன் மார்பை அலகால் குத்திக் குத்தி அதிலிருந்து ரத் தத்தை எடுத்துக் குஞ்சுகளுக்கு உணவாக ஊட்டுமாம்! அதுகூடப் பெரிய காரியமில்லே. நோய்வாய்ப் பட்ட என் 'ஹுமாயூ' னுக்கு இந்த 'பாபர்' தன் எதிர்கால வாழ் வின் வெற்றி, ஆனந்தம் - எதை யும் தியாகம் செய்யத் தயாராக இருந்தேன்.

அன்றிரவு உறக்கமே பிடிக்க வில்லே.

* * *

திருச்சிக்குச் சென்ற ஐந்தாவது நாள், என் ஜோலி முடிந்து ஊருக்குப் புறப்படத் தயார் செய்து கொண்டிருந்தேன். குமா ரிட மிருந்து கடிதம் காணுமல் திகைத்துக் கொண்டிருக்கும் போது, ஒரு கார்டு வந்து சேர்ந்

தது. அவன் எழுதியதுதான். அவனுடைய உடல் பலவீனத்தைக் கண்டு ஒரு மாதத்துக்கு அப்புறம் குணமாக்கிக்கொண்டு வருமாறு, வேலை கொடுக்க நினைக்கும் அதிகாரிகள் சொல்வதாகவும், அதனால் அவன் திருச்சிக்குப் புறப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் எழுதி இருந்தான். இவனுக்கு ஏன் இப்படிப் புத்தி போகிறது? ஏன் இந்த வீண் அலைச்சல்? சென்னையில் பேசாமல் ஒரு ஆஸ்பத்திரியில் இருந்தால் நான் போயிருக்க மாட்டேனா? உண்மையாக அவன் புறப்பட்டு வந்து கொண்டிருப்பானென்று எண்ணியே நான் ஊருக்குப் போவதை ஒத்திப் போட்டுவிட்டுத் திருச்சி ரயிலடியில் போய் எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

மனத்திற்குள் ஒரே சிந்தனை. அவனுடைய கடந்த நாலு வருஷ வாழ்க்கையில் ஒன்பது ஊர்களில் வாழ்க்கை நடத்தி இருக்கிறான். அவனோடு இடைவழியில் தொடர்பு வைத்திருந்த எத்தனையோ நண்பர்கள் அவனை விட்டுப் போய்விட்டார்கள். நான் மட்டும் என் வேலையைப்பற்றிய கவலையில்லாமல் உதறிவிட்டு ஒவ்வொரு ஊருக்கும் பின் தொடர்ந்து ஓடி இருக்கிறேன். இருவரும் ஏதோ ஒரு கற்பனை உலகின் சுகவாசத்தை லட்சியமாகக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தோம். இளைப்பாறக்கூட நேரம் இல்லை. ஆனால் யாருடைய துரதிர்ஷ்டமோ, நான் அவனைப் பின் தொடர்ந்து போய் வாழ்க்கை நடத்தத் தொடங்கிய சிறிது காலத்திற்குள் அவன் வேறொரு புதிய ஊருக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடும். பழைய படியும் என் ஓட்டம்!

இரவு மூன்று மணிக்கு 'எக்ஸ்பிரஸ்' வண்டியில் வந்து இறங்கினான் குமார். அடையாளமே தெரியாதவாறு முக்காடு போட்டிருந்தான். ஒரு வாரத்துக்குள்ளாக எவ்வளவு மாறுதல்! அவனால் 'பிளாட்பார'த்தில் நிற்கவே முடியவில்லை. அவனைக் கைத்தாங்கலாக அழைத்துக்கொண்டு வந்து ஜட்காவில் ஏற்றினேன்.

ஹோட்டல் அறைக்கு வந்ததும் அவனுடைய நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. வார்த்தைகள் குழறிக் குழறி வெளி வந்தன. அவனைப் பத்திரமாகப் படுக்கையில் படுக்கவைத்துப் போர்வையை இரண்டாக மடித்து மூடினேன். அவனால் பேசமுடியாமல் போகவே எனக்கு மிகவும் பதற்றமாகிவிட்டது. இருந்தாலும் மெதுவாக,

"சென்னையில் யாராவது டாக்டரிடம் உடம்பைக் காண்பித்தாயா, குமார்?" என்று கேட்டேன்.

"ஆமாம்" என்ற தோரணையில் தலையை அசைத்துவிட்டுத் தன் சட்டைப்பையிலிருந்து ஒரு காகித மடிப்பை எடுத்தான். அதற்குள் இரண்டு மாத்திரைகள் இருந்தன. ஜுரம் வரும்போது அதை வாயில் போட்டுக்கொள்ளும்படி டாக்டர் சொன்னதாகத் தட்டுத் தடுமாறிச் சொன்னான். ஒரு மாத்திரையை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு திரும்பிப் படுத்தான். மடிந்துகிடந்த போர்வையின் மூலைகளை அவன் கால் பக்கமாக நன்றாக இழுத்துப் போர்த்தி

விட்டு வெளியே வராந்தாவுக்கு வந்தேன். காற்றோட்டத்துக்காக 'ரூம்' வாடகை பிடித்தவர்களில் அநேகர் வெளியே படுத்திருந்தார்கள். சிந்தனை யற்று வானத்தையும், கூச்சல் ஓய்ந்திருக்கும் கடைத் தெருவையும் பார்த்துக்கொண்டு நின்றேன். என் அறைக்குள் விளக்கு எரிந்துகொண்டு இருந்தது.

அங்கே படுத்திருந்தவர்களில் ஒருவர் மிகவும் சாவதானமாகவும் பயத்தோடும் என்னிடம், "நீங்கள் கோபித்துக்கொள்ள மாட்டீர்களே, ஸார். உங்களிடம் ஒரு விஷயம் கேட்கவேண்டும்" என்றார்.

"என்ன? என்ன விசேஷம்?"

"நீங்கள் கைத்தாங்கலாகக் கூட்டி வந்தீர்களே, அந்த ஆளுக்கு உடம்புக்கு என்ன?"

"ஒன்றுமில்லை ஜுரம் காய்கிறது."

"இப்படிக் கஷ்டப்படுகிறவரை டாக்டரை அழைத்து வந்து பார்க்கச் சொல்லக் கூடாதோ?"

"அதைத்தான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். இந்த நேரத்தில் டாக்டரைத் தேடிப் பிடித்துக் கொண்டு வருவது எப்படி? எனக்குத் திருச்சியில் எவரையும் முன் பின் தெரியாது."

இந்தச் சமயத்தில் கக்கூஸ் அறையிலிருந்து ஒருவயது சென்ற கிழவர் ஒருவர் வந்தார் "டாக்டர், ஜுரம்" என்ற வார்த்தைகள் காதில் பட்டதும் "என்ன விசேஷம்?" என்று எங்களை விசாரித்தார். நான் விஷயத்தைச் சொன்னேன். அவர், "உங்களுக்கு எந்த ஊரோ?" என்று கேட்டு விட்டு எங்கள் பதிலை எதிர்பார்க்காமல், "அவர் எங்கே படுத்திருக்கிறார்?" என்று கேட்டார். நான் அறையைக் காட்டினேன். அவர் எங்களை அழைத்துக்கொண்டு என் அறைக்குள் நுழைந்தார். குமார் தூக்கத்தில் ஏதேதோ புலம்பிக் கொண்டிருந்தான். கிழவனார் அவன் கையைப் பிடித்து நாடியைப் பரிசோதித்தார். வைத்தியர் போலிருக்கிறது. வெகு நேரம் கழித்து, "நான் ஒரு மாத்திரை கொடுக்கிறேன். அதை வாயில் போட்டுக்கொள்ளச் சொல்லுங்கள். காலையில் மருந்து கொடுக்கலாம்" என்று சொல்லிவிட்டு அவருடைய அறைக்குள் என்னை அழைத்துச் சென்றார். நான் மிகவும் கவலையோடு,

"நாடி ஓட்டம் சரியாகத்தானே இருக்கிறது?" என்று எப்படியோ கேட்டுவிட்டேன்.

அவர் வருத்தத்தோடு என்னைப் பார்த்தாலும், "காலை ஐந்து மணிக்கு மேல்தான் மருந்து கொடுப்பதைப் பற்றிப் பேசவேண்டும்" என்று சொல்லிவிட்டு மாத்திரையை ஒரு சிறு பெட்டியிலிருந்து எடுத்துக் கொடுத்தார்.

அப்போது மணி நாலு. இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது என்று கடிகாரத்தைப் பார்த்துவிட்டு என் அறைக்குள் வந்து உட்கார்ந்தேன். நண்பனை எழுப்பி அந்தக் கிழவர் கொடுத்த மாத்திரையைக் கொடுத்துவிட்டுப் பக்கத்தில் உட்கார்ந்தேன். அவன் பழையபடியும் உறங்கிவிட்டான். இரண்டு மடிப்பில் போர்த்தியிருந்த கம்பளியின் மேல் கூட

என்னுல் கை வைக்க முடியாதபடி ஜுரம் பொரிந்தது.

சிறிது நேரம கழித்துக் கடிகாரத்தை வந்து பார்த்தேன். நாலு பத்து. சரி, இன்னும் ஐம்பது நிமிஷங்கள் வரை பெரிய சோதனை தான் என்று மறுபடியும் வந்து குமாரின் உடலைத் தொட்டுப்பார்த்தேன். வைத்தியர் போட்ட தவணையை நினைக்கப் பயமாக இருந்தது.

சற்று அதிகமாகவே உட்கார்ந்திருந்து விட்டு இலேசாகப் படுக்கையில் சாய்ந்தேன். பிறகு, வெளியே கடிகாரத்தை வந்து பார்த்தேன். முன்னேயைவிட இப்போது ஏழு நிமிஷங்கள் தான் அதிகமாகக் காட்டின. 'இதென்ன ஏழு நிமிஷங்கள் தானு ஆகியிருக்கும்? ஒரு வேளை நம் படபடப்பினுல்தான் அப்படித் தெரியலாமோ?' என்று சந்தேகித்துக் கொண்டு பழையபடியும் அறைக்குள் வந்தேன்.

கடைசியில், வெகு நேரம் கழித்து அவன் உடலைத் தொட்டுப் பார்த்தேன். உடல் 'ஜில்' விட்டு இருந்தது. ஜுரம் நின்று விட்டதென்று போர்வையை எடுத்துவிட்டேன். இருந்தாலும் பேச்சு மூச்சின்றி கிடந்தான். அப்புறம் தண்ணீர் வேண்டுமென்று கை ஜாடை போட்டான். அந்த இரவில் வெந்நீர் தயாரித்து யார் கொடுப்பார்கள்? நம் மீது அன்பு கொண்டு நம் கஷ்ட நஷ்டங்களை உணருபவர்கள் அங்கே ஏது? வெளியே வந்து தெருவைப் பார்த்தேன். ஜன நடமாட்டமே இல்லை. வீடுதோறும் பிச்சைக்குச் சென்ற என்னை வாசலினின்றும் மிதித்துத் தள்ளி, உலகமே தன் கதவை அடைத்துவிட்டது போன்ற நம்பிக்கையற்ற நிலை.

கடிகாரத்தைப் பார்த்தேன். என்ன இது? பழைய நாலு பதினேழுதான்! அதற்கு அப்புறம் கொஞ்சம்கூட முள்நகரவே இல்லை. கடிகாரம் ஓடும் சப்தம் கேட்கிறதா என்று உற்றுக் கேட்டேன். ஒரே மரண அமைதி!

கடிகாரம் நின்றுவிட்டது!

அடக்க முடியாத பரபரப்போடு அறைக்குள் வந்தேன்.

அவன் மார்பில் கையை வைத்துப் பார்த்தேன்...ஆம்; மிகவும் கவனமாகத்தான். அப்புறம்? அவன் கைகள், கன்னப்பொருத்து ....எல்லாம் தொட்டுப் பார்த்தேன்.........! ஐந்து மணி ஆய்விட்டதா?.......

காரியம் முந்திவிட்டது.

என் கதையை இன்னும் வளர்ப்பானேன்? நூற்றுக் கணக்கான மைல்கள் அவனேடு ஓடினேன்; ஓடவும் இருந்தேன். ஆனுல், அவனே தொடா முடியாத வேகத்துடன் ஓடி மறைந்து விட்டான்.

இதோ ரயில் மதுரையை அடுத்து வந்துவிட்டது. எதிரே வரும் குத்துச் செடிகள், வயல்கள் - எல்லாம் பளிச்சென்று தோன்றி மறைந்தன! ரயிலோடு தொடர்ந்து ஓட முடியாதபடி தூரத்தே தெரிந்த மரங்கள் பின் தங்கிவிட்டன. மிகவும் அதிக தூரத்தில் தெரிந்த அந்தப் பிரமாண்டமான மேற்கு மலைத் தொடரின் ஒரு சிகரம்,—நான் திண்டுக்கல் பக்கமாக எனக்கு நேராகப் பார்த்தது, என்னேடு அநேக மைல்கள் ஓடி வந்த அந்தச் சிகரம், இப்போது அதையும்கூட காணவில்லை. மறைந்துவிட்டது.

புத்தக உலகம்

பழத்தோட்டம் : [ஆசிரியர்: மு. அருணாசலம். கிடைக்குமிடம்: தமிழ்நூலகம், 3. சாம்பசிவம் தெரு, தியாகராய நகர், சென்னை-17. விலை ரூ. 10.]

'பழங்களை அதிகமாகச் சாப்பிடுங்கள்' என்றும் 'உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்' என்றும் நாடெங்கும் பிரசாரம் செய்யப் படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் இப்படிப்பட்ட புத்தகத்துக்கு, இயற்கையான மதிப்பை விட பல மடங்கு அதிக மதிப்பைக் கொடுக்க வேண்டும். பழத்தோட்ட வேலையில் அனுபவம் பெற்ற ஆசிரியர் பழ மரங்களையும், பழச் செடிகளையும் பயிரிடுவதற்குப் பூர்வாங்கமாகச் செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் விவரித்துக் கூறி, பயிரிட்டு, பாதுகாத்து பலன் பெறுவது எப்படி என்ற விவரங்களையும் கூறியிருக்கிறார். எல்லா வகைப் பழங்களையும் உற்பத்தி செய்வதையும், தோட்ட வேலையைப் பற்றிய சகல விவரங்களையும், பழங்களினால் அடையும் நன்மைகளையும் பற்றி இந்நூலில் பரக்கக் காணலாம். தோட்டக்கலை சம்பந்தமாக மேல் நாட்டில் வந்துள்ள நூல்களுக்கு ஒப்பான மிக உயர்ந்த ஸ்தானத்தை 628 பக்கங்களுள்ள இந்த அரிய பெரிய நூல் பெற்றுவிட்டது. படித்துப் பயன் பெறுவதுடன், உணவு உற்பத்திப் பிரசாரம் செய்யும் நம் அரசாங்கமும் அந்நூலைப் பரப்புவதில் முனைய வேண்டும் என்று கூற விரும்புகிறோம்.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்

தாமஸ் மசாரிக் : [ஆசிரியர்: தெரியவில்லை. கிடைக்குமிடம்: முயற்சி வெளியீடு, 64. டிஸ்பென்சரி ரோட், பல்லாவரம், சென்னை. விலை அணா 12.]

தாமஸ் மசாரிக் செக்கோஸ்லேவகியக் குடியரசின் ஸ்தாபகர். உலகப் புகழ் பெற்ற பெருந் தலைவர். ஏழை வண்டி ஓட்டியின் மகனாகப் பிறந்து, தம் முயற்சித் திறத்தினால் தேசத் தலைமையை அடைந்தவர். அவருடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறும் இந்நூலை எல்லோரும் படிக்க வேண்டும்.

வள்ளுவர் நல்கும் காமச் சுவை : [ஆசிரியர்: கே. ராஜகோபாலாசாரியார். கிடைக்குமிடம்: ஸ்வாதி வெளியீடு, 24. பெரியண்ண மேஸ்திரி தெரு, சென்னை-1. விலை ரூ. 5.]

திருக்குறளில் உள்ள காமத்துப் பாலின் 70 குறள்பாக்களுக்கு விரிவான உரையும், விளக்கமும் கொடுத்து இந்நூலை எழுதியிருக்கிறார் ஆசிரியர். மேலும், முடிவுரையில் காமச் சுவையைப் பற்றி பிற புலவர்களின் கருத்துக்களையும் ஆசிரியர் திரட்டித் தந்திருக்கிறார். தமிழ் நடை இன்னும் கொஞ்சம் இலகுவாக இருந்தால் புத்தகம் மேலும் சோபித்திருக்கும். புத்தகத்தில் வர்ணப் படங்களும் இருக்கின்றன.

சிந்தனை ஆண்டு மலர் 1949 : [ஆசிரியர்: அ. சீநிவாச ராகவன், கிடைக்குமிடம்: 14. சிங்கண்ண நாய்க்கன் தெரு, சென்னை-1. விலை ரூ. 1-4-0.]

உயர்ந்த விஷயங்களை வெளியிட்டுக் கடந்த சுமார் ஒரு வருஷ காலமாக சேவை செய்துவரும் "சிந்தனை"யின் இந்த ஆண்டு மலரில் பல அருமையான கதை கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. ஸ்ரீமான்கள் வையா

புரிப் பிள்ளை, கவிமணி, ரா. ஸ்ரீ. தேசிகன், சிதம்பர ரகுநாதன் முதலியோரின் கட்டுரைகள்பிரமாதமானவை. "துறைவன்" எழுதியுள்ள சினந்தி விஞயகர் என்னும் கதையும், ஸ்ரீ அ. சீ. ரா. எழுதியுள்ள "எல்லையிலே" என்ற நாடகமும் சிறந்த சிருஷ்டிகள். தெ. பொ மீனுட்சி சுந்தரஞர் மொழி பெயர்த்துள்ள 'பூனைக்குப் பெயர் வைத்தல்' என்ற பாடலுக்கு அன்ஞரே ஒரு விரிவுரை எழுதியிருந்தால் பாடலை ரசிக்க முடியாவிட்டாலும் புரிந்து கொள்ளவாவது முடிந்திருக்கும் என்று தோன்றுகிறது. இம்மலரில் வர்ணப் படங்கள் இடம் பெற்றிருப்பதுடன், ஸ்ரீமான்கள் ராஜாஜி, தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், வல்லிக் கண்ணன் முதலிய பலரும் எழுதியிருக்கிறார்கள். மொத்தத்தில் இது ஒரு சிறந்த ஆண்டு மலர்.

—கு. அ.

ராஜாஜி உவமைகள்: [தொகுத்தது: சின்ன அண்ணுமலை. கிடைக்குமிடம்: தமிழ்ப்பண்ணை, தியாகராய நகர், சென்னை 17. விலை ரூ. 1-8-0.]

பிரமுகர்களின் உதிரிக் கருத்துக்களைத் தொகுத்து வெளியிடுவது நல்ல முயற்சிதான். எனினும் எதைத்தான் தொகுப்பது, எப்படித் தொகுப்பது என்ற விஷயங்களைத் தெரிந்திருக்க வேண்டும். இந்நூலில் உள்ள ராஜாஜியின் உவமைகள் தர்க்க விளக்கம்போல் இருக்கின்றன. உவமை நயம், கவிதையில் அலங்கார அடைமொழி மாதிரிவந்து அழுத்தம் கொடுத்துப் பேசும்; ஆனல், அது வாத ஒழுங்குக்கும் விஷய தீர்க்கத்துக்கும் ஒத்து வருவதில்லை. தர்க்க இயலின் பால பாடத்திலேயே உவமையைக் கொண்டு ஒரு விஷயத்தை உண்மையென விளக்க முயல்வது பலவீனமாகவும் வாதவழுவாகவும்தான் முடியும் எனச் சொல்லப் படுகிறது. ராஜாஜியின் உவமைகளும் இந்தத் தன்மைக்கு விதி விலக்கல்ல. உதாரணமாக, பாரதியார் பாட்டுக்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது மதராஸி யல்லாதவனிடம் இட்லி படும் பாட்டைப்போல (1) என்றும், முதலாளிகளை எதிர்த்து தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வது கணவனுடன் கோபித்துக் கொண்டு சாப்பிடாத மனைவியைப் போல (10) என்று தாம்பத்திய உறவு காட்டுவதும், விக்ரகத்தை அலட்சியப் படுத்திக் கடவுளைக் காண முடியாதது போல, மகாராஜா மூலமல்லாமல், தேசபக்தியை வெளிப்படுத்த முடியாது (41) என்றும் உவமான பூர்வமாக விஷயத் தெளிவு செய்ய முனைந்திருப்பது ராஜாஜியின் சமத்காரத்தையும் சாமர்த்தியத்தையும் காட்டலாம்; வாதமுறையைக் காட்டவில்லை. 'திறமையான புலமையெனில் பிற நாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' என்று பாரதியே பாடியிருக்கிறார். பிறநாட்டார் பிறர் புலமையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், அவர்கள் ஒவ்வொரு பாஷையையும் படித்துத் தெரிந்து கொண்டிருக்க இயலாது. மேலும், பிறமொழிகளில் கவிதையை மொழி பெயர்ப்பதால் அதனுடைய சுவை ஓரளவுக்குக் குன்றுமென்றாலும், அதற்காக மொழி பெயர்க்காமலே இருக்க முடியாது. தாகூரின் கீதாஞ்சலி ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டதும், அதை ஆங்கிலேயரே புகழ்ந்து நோபல் பரிசு அளித்ததும் நாமறிந்ததே. மேலும், சாகுந்தலத்தை கதே போன்ற கவிஞர்கள் தலைமேல் தூக்கிவைத்துக் கூத்தாடியதும் நமக்குத் தெரியும். இத்தனைக்கும் மேலாக, ராஜாஜியே சுலோகங்களாலான கண்ணன் காட்டிய பகவத் கீதையை தமிழருக்கு அறிமுகப்படுத்தி வைத்திருக்கிறாரே! மொழிபெயர்ப்பு 'இட்லி படும்பாடானல்,' ராஜாஜி இந்தத் திருப்பணியை ஏன் செய்திருக்கவேண்டும்? அதுபோலவே, முதலாளி தொழிலாளி

உறவை கணவன் - மனைவி உறவு எனச் சொல்வதும் இம்மாதிரிதான். மனைவி என்பவள் தொழிலாளியைப் போல் மாசச் சம்பளமும் அலவன்சும் பெறும் வேலைக்காரியல்ல; கணவனின் சகலஉரிமைகளிலும் பாத்தியம் பாராட்டுபவள். ஆனல் இன்று தொழிலாளி முதலாளியிடம் எந்தவிதப் பாத்தியதை பாராட்டமுடிகிறது? அதுபோலவே, மகாராஜா மூலம்தான் தேசபக்தியை வெளிப்படுத்தலாம் என்பதும், குடியரசை எதிர்நோக்கி நிற்கும், ஜனதிபதித் தேர்தலுக்காகக் காத்து நிற்கும், மக்களிடம் சொல்லக்கூடிய, பரப்பக்கூடிய கருத்தல்ல. இம்மாதிரியான பிற்போக்குக் கருத்துக்களுக்குத்தான் ராஜாஜி உவமைகள் தாக்குப் பிடிக்க முன் வருகின்றன. உவமைகள் தர்க்கத்துக்கு பயன்படாது என்பது மேற் கண்டவற்ருல் விளங்கும். உவமை அழகாயிருந்தாலும், விஷயம் உண்மைக்கு மாருக இருக்கிறதல்லவா? மேலும் உவமைகள் சமய சந்தர்ப்பத்துத்தக்க மாறக்கூடியவை. ஒரே உவமை இருவேறு முரண்பட்ட விஷயத்துக்கும் பயன்பட முடியும். இந்தத் தொகுப்பு நூலிலும் அம்மாதிரியான முரண்பாடுகள் காணமுடிகிறது. எனவே இந்நூல் ராஜாஜியின் ஒப்பு நோக்கும் தன்மைக்கு ஓர் உதாரணமாகலாமே ஒழிய, உண்மையை விளங்கவைப்பது ஆகாது. அவரைப் போலவே நாமும் உவமைபோட்டுச் சொன்னல் உவமை என்பது ஒரு கத்தி. அதைக்கொண்டு கத்தரிக்காயும் நறுக்கலாம்; கழுத்தையும் அறுக்கலாம். ராஜாஜியின் உவமையும் தமது விருப்பு வெறுப்புக்கேற்ற சமய சந்தர்ப்பக் கருவியாகத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

நாயக்கர் லீலைகள் [ஆசிரியர்: 'அண்ணச்சி.' கிடைக்கு மிடம் : ராமபாண பிரசுரம், தியாகராயநகர், சென்னை 17. விலை அணு எட்டு]

ஸ்ரீ ஈ. வே. ராமசாமி நாயக்கரைப் பற்றி மிகவும் கீழ்த்தரமான முறையில் எழுதப் பட்ட புத்தகம். புத்தகத்துரிய கௌரவமோ யோக்கியதையோ இப்புத்தகத்துக்கு எள்ளத்தனையும் கிடையாது என்பது நம் அபிப்பிராயம்.

ஈழகேசரி: [கிடைக்குமிடம்: திருமகள் நிலையம், மயிலிட்டிதெற்கு, யாழ்ப்பாணம்.]

இருபதாம் ஆண்டு முதலிதழாகச் சிறப்பாக வெளியிடப் பட்டிருக்கிறது. இந்த இதழில் ஸ்ரீமான்கள் கவிமணி தேவி, எஸ். வையாபுரிப் பிள்ளை, சுத்தானந்த பாரதியார், க. நவரத்தினம் முதலியோர் எழுதியிருக்கின்றனர். பயனுள்ள கட்டுரைகள் நிரம்பியுள்ளன.

—தோ. மு. சி.

88895

மிகப் பெரிய கலைக்களஞ்சியம்

உலகத்திலேயே மிகப்பெரிய கலைக்களஞ்சியம் சீனவில் தான் மிங் ராஜவம்ச ஆட்சியின் போது தயாரிக்கப்பட்டது. அதைத் தயாரித்தவரின் பெயர் யுங்லோ. அதில் 22,937 புத்தகங்கள் அடங்கியிருந்தன. எத்தனையோ பேர் சேர்ந்து நகல் செய்து மொத்தம் 3 பிரதிகள் தயாரித்தனர்; அவற்றில் இரண்டு மிங் ராஜவம்சத்தின் வீழ்ச்சியுடன் அழிக்கப்பட்டு விட்டன. மற்றொன்று, பின்னல் நிகழ்ந்த பெரிய கலகத்தின் போது அழிக்கப்பட்டு விட்டது.

—தி லீடர்

Edited, Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14.
Associate Editor: G. Alagiriswami.

A good habit

உங்களுடைய ஆரோக்கியத்திற்கு உதவியாக உள்ள நல்ல பழக்கங்களை விருத்தி செய்யுங்கள். பற்களையும் ஈறையும் நன்கு காப்பாற்ற முயற்சிப்பது நல்ல பழக்கம். இதற்கு ஓர் நல்ல பற்பசை தேடிக்கொள்வது அவசியம். **நீம் டூத் பேஸ்ட்** ஓர் உயர்ந்தபற்பசை. வேம்பின் சத்தும், மற்றும் உயர்ந்த மூலிகைகளும் கொண்டு தயாரிக்கப்பட்டது.

கேசரியின் மூன்று பிரசித்த மருந்துகள்

★

லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

மலடு, சங்காதோஷம், கீல்வாயு, தூக்கமின்மை, அஜீரணம், மலச்சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகுவலி, முதலியவற்றை குணப்படுத்தும்.

★

அம்ருதா

ரத்த சுத்தி டானிக்

ரத்த சோகை, அஜீரணம், மலச்சிக்கல், மந்தமான மூளை, பலவீனம், படபடப்பு, ஞாபகமின்மை, தெளிவற்ற கண் பார்வை, தலை சுற்றல், சரும ரோகங்கள் முதலியவற்றை குணப்படுத்தும்.

★

அர்க்கா

சிறந்த ஜுர நிவாரணி

இன்புளுயன்ஸா, டைபாய்ட், மலேரியா, முதலான ஜுரங்கள் குணமாகும். ஈரல் குலைக்கட்டிகளும் குணமாகும்.

விவரங்களுக்கு எழுதுங்கள்

கேசரி குடீரம் லிட்,

ராயப்பேட்டை, மதரூஸ் 14.

சக்தி வெளியீடுகள்

செல்வம் — க. சந்தானம்

பொருளாதாரத்தைப் பற்றிய நூல். பாமரரும் புரிந்து கொள்ளக்கூடியவாறு எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கிறது. தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்ற புத்தகம். 1 8 0

லெனின் பிறந்தார் — ஆர். ராமநாதன்

ருஷ்யாவின் தந்தை லெனின் வரலாறுதான் இந்த நூல். இந்த நூலைப் படிப்பதால் ருஷ்யப் புரட்சி சரித்திரத்தையும் கூடவே படிப்பது போல இருக்கும். 3 8 0

உலோகங்களும் நாமும் — மு. அருணாசலம்

உலோகமும் நாமும், உலோக உலகம், உலோகத்தாது, உலோகங்கள் கிடைக்கும் விதம், இரும்பு, மற்ற முக்கிய உலோகங்கள், உலோகத் தொழில் பற்றிய அரிய விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. ரூ. 5 0 0

உணவுப் பஞ்சம் — மு. அருணாசலம்

உணவுப் பஞ்சம் ஏன் ஏற்பட்டது? உணவுப் பஞ்சத்தைத் தடுப்பது எப்படி? உணவுப் பஞ்சமே இனி வாராதபடி எப்படிச் செய்வது என்பது பற்றிய புத்தகம். ரூ. 1 8 0

ஐந்தாவது சுதந்திரம் — ஸ்ரீமதி லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி

இதில் பதினைந்து கட்டுரைகள் இருக்கின்றன. சமூகத்தில் ஊறிக்கிடக்கும் ஊழல்களைப் பாரபட்சமின்றிக் கண்டிக்கும் கட்டுரைகள், நம்மவரோடு உலகத்தவரை ஒப்பிட்டு நோக்கும் கட்டுரைகள், நாட்டின் முற்போக்கு பற்றிய கட்டுரைகள், தெரியாத விஷயத்தைத் தெளிவாக எடுத்துரைக்கும் கட்டுரைகள் இதில் அடக்கம். நமது அருமை தேசபக்தர் காலஞ் சென்ற சத்தியமூர்த்தியின் மகள்தான் இதன் ஆசிரியர் ஸ்ரீமதி லக்ஷ்மி. ரூ. 1 8 0

சக்தி காரியாலயம் - சென்னை 14

ஆஸ்த்மாவை

குணப்படுத்துவது

ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரை ஈரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹாரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR

Neepa HAIR OIL

"நீபா"

சுகந்தத்தைலத்தின் பரிசுத்தமான இனிய பரிமளம் உங்கள் மேன்மையான மனப்பாங்கிற்கு பொருத்தமாக அமைந்திருக்கிறது!

GANGA WORKS ADYAR MADRAS 20

கங்கா ஒர்க்ஸ்

அடையாறு

மதராஸ் 20

BOOKS IN ENGLISH

•

CAPITALISM, SOCIALISM OR VILLAGISM? By Dr. Bharatan Kumarappa, preface by Gandhiji Rs. 5, ECONOMY OF PERMENENCE By Dr. J. C. Kumarappa preface by Gandhiji Rs. 2, Studies in the Psychology of Sex by Havelock ELLIS Rs. 45. Rubaiyat of Omar Khayyam Rs 1/8. Father Brown by G. K. Chesterton Rs. 1/8, Jeeves by P. G. Woodehouse, Rs. 1/8, Pride and Prejudice by Jane Austen Rs. 1/8, Freud His Dream and Sex Theoris by Joseph Jastrow Rs. 1/8, Treasure Island by R. L. Stevenson Rs. 1/8, Oliver Twist by Charles Dickens Rs. 1/8, Freedom Road by Howard Fast Rs. 1/8, Laugh with Leacock by Stephen Leacock Rs. 1/8, Four Great Comedies by Shakespeare Rs. 1/8, The Covered Wagon by Emerson Haugh Rs. 1/8, The Autobiography of Benjamin Franklin Rs. 1/8, The Great Short Stories of de Mapassant Rs. 1/8, The Good Earth by Pearl Buck Rs. 1/8, The Pocket Treasury Rs. 1/8, Decameron by Boccaccio Rs. 1/8, Merriem-webster Pocket Dictionary Rs. 1/8, India and the International Crisis By Prof. K. J. M. Tharakan, M.A., As. 12, Cold Rice by K. Nagarajan Rs. 3, Five Plays by H. Chattobadyaya Rs. 1/8, Fancy Tales by Manjeri S. Isvaran Rs. 2, Angry Dust by Manjeri S. Isvaran Rs. 2, Naked Shingles by Manjeri S. Isvaran Rs. 2/8, Gandhism in the Atomic Age Rs. 2, Dedicated Life by Dr. Mrs. Muthulakshmi Reddi As. 8, The Fourth Avatar by Manjeri S. Isvaran Re. 1, Essentials of Gandhism by V. Swaminatha Sarma As. 12.

Postage Extra.

SHAKTI KARYALAYAM

P. B. No. 660. : : MADRAS - 14.

உங்கள் வியாபாரம்

★

உங்கள் வியாபாரம் செழிக்க வேண்டுமானால் காகிதம், கவர், ரசீதுப் புத்தகம் விசிடிங் கார்டு எல்லாம் அழகாக இருக்க வேண்டும். அவைகளை அழகுடன் செய்து தருவதற்கு சென்னையில் பெயர் பெற்ற அச்சுக்கூடம் நடைபெறுகிறது. அதன் பெயர் :



சக்தி பிரஸ் லிமிட்டெட்

115 E, மோபரீஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை 14.

டெலிபோன் : *8135*

Regd. No. M. 4162. SHAKTI July, 1949



அழகும் மணமும் பொருந்திய
புஷ்பம் "ரோஜா"
சுவையும் மணமும் பொருந்திய
பாக்குத்தூள் "அசோகா"

No. 1506 அசோகா MILD SCENTED ASOKA நெ. 1506

தயாரிப்பவர்:

எஸ். கே. கிருஷ்ண செட்டி

'அசோகா பாக்டரி' :: கோயமுத்தூர்